# அத்தியாயம் 10

# நிதியியல் துறை

## 10.1 நாணயக் கொள்கை

வீழ்ச்சியடையும் பணவீக்கம், உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையிலான உறுதிப்பாடு ஆகிய சூழலில் குறைந்த பணவீக்கத்துக்கான நீடித்திருக்கக்கூடிய ஒரு வழியை எய்துவதில் உரிய கவனம் செலுத்தும் அதேவேளை பொருளாதார மீட்சிக்கு போதியளவு திரவத்தன்மை வழங்குவதையே நாணயக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொருளாதார அபிவிருத்திகளினால் தேவைப்படுத்தப்பட்டபடி மத்திய வங்கி இவ்வாண்டில் அதன் முதன்மை கொள்கை வீதங்களை குறிப்பாக மீள்கொள்வனவு வீதத்தையும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்தையும் அவதானமாக மேலும் குறைத்தது. குறிப்பிடத்தக்க வெளிநாட்டு உட்பாய்வு, கூடிய அரசிறைக் கட்டுப்பாடு ஆகியவற்றின் காரணமாக நாணயச் சந்தை முன்னைய இரு ஆண்டுகளுக்கு மாறாக தொடர்ந்தும் திரவத்தன்மையிலேயே இருந்தது. திறந்தசந்தை நடவடிக்கைகள் மூலம் மேலதிக திரவத்தன்மையை வங்கி ஈர்த்துக்கொண்டதன் மூலம் நாணயக் கூட்டுக்கள் மீது வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பிலிருந்து விரிவாக்கும் தாக்கங்களின் வாய்ப்புத்திறனை நலிவடையச் செய்தது. நாணயக் கொள்கையின் பிரதான செயற்பாட்டு இலக்கான ஒதுக்குப்பணம் பாரிய பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளினுள்ளே பேணப்பட்டன. ஆண்டின் மத்திய பகுதியளவில் பெரும்பாலும் தாழ்ந்த திருத்த தளத்தின் விளைவு காரணமாக அதாவது 2001 ஆம் ஆண்டு நடுப்பகுதியிலான பண வழங்கலின் சுருக்கம் காரணமாக நாணய வளர்ச்சி எதிர்பார்த்ததைவிட சற்று உயர்வாக இருந்தது. எவ்வாறாயினும் ஆண்டினிறுதியில் எதிர்பார்க்கப்பட்டபடி வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைந்தது. ஆண்டின்போது நாணயக் கொள்கை முகாமையின் செயற்றிறனையும், வெளிப்படைத் தன்மையையும் மேம்படுத்தும் நோக்கில் வங்கி தொடர்ந்தும் மேலும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாணயக் கொள்கையை நடாத்துவதில் 2002 திசெம்பரில் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்ட நாணயச் சட்டத் திருத்தம் மத்திய வங்கிக்கு மேலும் நெகிழ்வுத் தன்மையை அளிக்கும்.

ஆண்டின் ஆரம்பத்தில் கூறப்பட்டது போல் வங்கியின் கொள்கை வீதங்களில் படிப்படியான குறைப்பு ஏற்படுத்தப்பட்டது. மத்திய வங்கி அதன் மீள்கொள்வனவு வீதத்தையும், நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தையும் பல தடவைகளில் குறைத்தது. ஆண்டின் இரண்டாவது அரைப் பகுதியிலேயே அதிகமான குறைப்பு நிகழ்ந்தது. ஆண்டின் ஆரம்பத்திலிருந்து காணப்பட்ட பணவீக்க வீழ்ச்சிப் போக்கையும் வரும் மாதங்களுக்கான எதிர்பார்ப்பினையும் பன்னாட்டு வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும் போக்கையும் கவனத்தில் கொண்டு இரு வீதங்களும் 2002 மாச்சில் 50 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. சந்தை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு மாச்சு ஏப்பிறல் மாதங்களில் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் மூன்று தடவைகளில் 25 அடிப்படைப் புள்ளிகளினால் அதிகரிக்கப்பட்டது. பன்னாட்டு வட்டி வீதங்களும், உள்நாட்டு வட்டி வீதங்களும் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமையாலும் பொருளதார மீட்சிக்கு உதவியளித்து முதலீட்டை மேம்படுத்த வேண்டிய தேவை இல்லாமையாலும் மீள்கொள்வனவு, நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் மீண்டும் 100 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டன. எதிர்பார்ப்புக்களுக்கமைவாக பணவீக்கம் மேலும் மிதமடைந்தமையால் நவம்பரில் மேலும் ஒரு கீழ்நோக்கிய சீராக்கம் செயற்படுத்தப்பட்டு சந்தை வீதங்கள் வீழ்ச்சியடைந்தன. 2002 இல் ஒவ்வொரு வீதத்திலும் 225 அடிப்படைப் புள்ளிகளாலான மொத்தக் குறைப்பு செய்யப்பட்டது. இவ் வீதங்களின் குறைவு பணவீக்கத்தின் குறைவிலும் பார்க்கக் குறைவாக இருந்ததன் விளைவாக சில வட்டி வீதங்களில் உண்மையான நியதிகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கக் கூடும். மத்திய வங்கி சந்தைத் திரிபுகளால் எழக்கூடிய விலை வேறுபாடுகளிலிருந்து எழும் நலன்களை தடுக்கும் வகையில் அதன் கழிவு எல்லைகளையும் சீராக்கியது. அதாவது மத்திய வங்கியின் இரண்டாம் தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களினது கழிவு வீதத்துக்கும் (உடன் விற்பனை) முதன்மைச் சந்தைவிளைவு வீதங்களுக்குமிடையிலான வேறுபாடு யூன், யூலை மாதங்களில் 5 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 125 அடிப்படைப் புள்ளிகளுக்கு அதிகரிக்கப்பட்டது.

பண வழங்கலிலான மேலதிக வளர்ச்சியிலிருந்து எழும் பணவீக்க அழுத்தத்தைத் தவிர்க்கும் பொருட்டு வங்கி தொடர்ந்தும் நாணயத்தை கவனமாகக் முகாமைப்படுத்துகின்றது. 2002 ஆம் ஆண்டு முழுவதும் நாணயச் சந்தை தொடர்ந்தும் திரவ நிலையிலேயே இருந்தது. சந்தையிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை மத்திய வங்கி கொள்வனவு செய்தமை, நிகழ்ச்சித் திட்ட மற்றும் செயற்றிட்டக் கடன்களிலிருந்து பெற்ற கடன் பெறுமானங்கள் ஐ.அ. டொலரில் குறித்துரைக்கப்பட்ட அரசாங்கக் கடன் பெறுகைகளை வங்கிக்கு விற்பனை செய்தல், மத்திய வங்கியின் இலாபத்தை அரசாங்கத்திற்கு மாற்றுதல் ஆகியவை சந்தைத் திரவ நிலையை மேம்படுத்துவதற்கு பிரதானமாக பங்களிப்புச் செய்தன. உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீதான நிதிகளின் தேறிய வெளிநாட்டு உள்பாய்ச்சல்களின் விரிவாக்கத் தாக்கத்தைத் தணிக்கும் வகையில் மீள் கொள்வனவு, இரண்டாம் நிலைச் சந்தை நடவடிக்கைகள் மூலம் மேலதிக திரவத்தன்மையை வங்கி அகற்றியது. இதன் விளைவாக ஆண்டின்போது மத்திய வங்கி அரசாங்கப் பத்திரங்களை வைத்திருத்தல் வீழ்ச்சியடைந்ததுடன், விரும்பிய இலக்கினுள் ஒதுக்கப் பணத்தைப் பேணுவதற்கு இது வங்கிக்கு உதவியது.

2001 இல் செலாவணி வீதம் சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டமை உள்நாட்டு சந்தை நிலைமைகளில் கவனம் செலுத்திய நாணயக் கொள்கை நடவடிக்கைகளை கூடிய நெகிழ்ச்சியுடன் பயன்படுத்துவதற்கு வங்கிக்கு இடமளித்தது. புதிய முறையின் கீழ் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மிதமிஞ்சிய மாற்றங்களை குறைப்பதற்கும் அலுவல்சார் வெளி ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கும் மட்டுப்படுத்தப்பட்டது. 2002 இல் மத்திய வங்கியின் தலையீடுகள் பிரதானமாக சந்தையிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்வதிலேயே இருந்தது. இது சந்தையில் திரவத்தன்மையை மேம்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தது. வெளிநாட்டு நாணயச் சந்தையின் கூடிய உறுதிப்பாட்டைக் கருத்தில் கொண்டு வர்த்தக வங்கிகளின் தொழிற்பாட்டுக்கு கூடிய நெகிழ்ச்சி அளிக்கக்கூடிய வகையில் அவ் வங்கிகளின் தேறிய திறந்த நிலையை மேம்படுத்துவதற்கு அனுமதி அளிப்பதற்கு வங்கிக்கு இயலுமாக இருந்தது.

நாணயக் கொள்கையின் ஒளிவு மறைவின்மையை மேம்படுத்துவது மற்றுமொரு பிரதான நோக்கமாக இருந்தது. இதற்கென 2002 இன் ஆரம்பத்தில் முழு மொத்த நாணயக் கொள்கை கட்டமைப்பும் நாணயக் கொள்கை வெளிப்படுத்தல்களும் மத்திய வங்கியின் இணையத் தளத்தில் (www.centralbanklanka.org) வெளிப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் மாற்றங்கள் சந்தையாளர்களுக்கு விளக்கங்களுடன் ஒரே நேரத்தில் அறிவிக்கப்பட்டன. நாணயக் கொள்கையின் நோக்கங்கள் பற்றிய சிறந்த புரிந்துணர்வை சந்தைப் பங்கேற்பாளரும், பொது மக்களும் பெறும் வகையில் நாணய அபிவிருத்தி பற்றி சந்தைக்கு கூடுதலான தகவல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நாணயக் கொள்கைக் குழு ஒன்றை நிறுவியதன் மூலம் வங்கியினுள் உள்ளக கலந்துரையாடல்களும் கொள்கை உரையாடல்களும்விரிவாக்கப்பட்டது. நாணயக் கொள்கைக் குழுவானது நாணய அபிவிருத்திகளை மதிப்பிடும் பொருட்டும் நாணயச் சபைக்குப் பரிந்துரைகள் செய்யும் பொருட்டும் ஒழுங்காக ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவையாகிலும் கூடியது.

நாணயக் கொள்கையின் செயற்றிறனை மேம்படுத்தும் பொருட்டும் நாணயக் கொள்கையை சந்தை மயப்படுத்தும் பொருட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2002 திசெம்பரில் அமுலாக்கப்பட்ட நாணயவிதிச் சட்டத்திற்கான திருத்தங்கள் நாணயக் கொள்கையை நெறிப்படுத்துவதில் வங்கிக்கு மேலும் நெகிழ்வுத் தன்மையை அளித்தன. இம் மாற்றங்கள் நிதி ஒதுக்கத் தேவைகளின் கீழ் எல்லைகளை அகற்றியதுடன் நியதி ஒதுக்கத் தேவைகள் பொருட்டு தகைமையுடைய நிதி நிறுவனங்கள், கருவிகளை வரைவிலக்கணப்படுத்துவதில் கூடிய நெகிழ்ச்சிக்கு இடமளித்தன. நாணய இலக்குகள் மேலும் திறமையாக எய்தப்படுவதை உறுதி செய்யுமுகமாக சந்தைத் திரவத்தன்மையை முகாமை செய்வதில் வங்கிக்கு உதவுமுகமாக மத்திய வங்கி 2003 இன் ஆரம்பத்தில் தீவிரமான திறந்த சந்தை தொழிற்பாடுகளை அறிமுகப்படுத்தியது. இம் முறைமை சந்தைப் பங்கேற்பாளர்கள் திரவத்தன்மையை மேலும் திறமாக முகாமை செய்வதற்கு ஊக்குவிக்கும். சந்தை பங்கேற்பாளர்களுடன் கலந்தாலோசித்து பரீட்சார்த்த நடவடிக்கை போன்ற ஆரம்ப நடவடிக்கைகள் 2002 பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 10.2 நாணயமும் கொடுகடன் கூட்டுக்களும்

### ஒதுக்குப் பணம்

மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தாள்கள் குத்திகளை உள்ளடக்கிய ஒதுக்குப் பணம், மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் ஆகியவற்றில் 2001 இனைக் காட்டிலும் 2002 இல் உயர் வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. ஆண்டின் போதான நாணய நிகழ்ச்சித் திட்ட இலக்குகளுக்குட்பட்டதாக அதிகரிப்புக் காணப்பட்டது. வெளிநாட்டு ஒதுக்குகள் கட்டி எழுப்பப்படுவதை பிரதிபலிக்கும் வகையில் முற்றிலும் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து அதிகரிப்பின் காரணமாக 2001 இன் ரூ.7.4 பில்லியன் அதிகரிப்புக்கு மாறாக ரூ.14 பில்லியனால் ஒதுக்குப் பணம் அதிகரித்தது. உண்மையில் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன. ஒதுக்குப்பண அதிகரிப்பின் பெரும் பங்கு ரூ.12 பில்லியன் சுற்றோட்டத்திலிருந்த நாணய அதிகரிப்பினால் காட்டப்பட்டது. சமாதான நடவடிக்கைளைத் தொடர்ந்து குறிப்பாக வடக்குக் கிழக்கில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கையால் நாணயத்துக்கிருந்த உயர் கேள்வியை இது ஓரளவு காட்டியது. வைப்புக்களை மீளப்பெறும் போது பற்று வரி விதிக்கப்பட்டமையும் நாணயப் பயன்பாட்டு அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்தது. ஒதுக்குகள் பேணப்பட்டுவரும் வர்த்தக வங்கி வைப்புக்களின் வளர்ச்சி காரணமாக அவற்றுக்கெதிராக பேணப்படும் வர்த்தக வங்கிகளின் மத்திய வங்கியுடனான வைப்புக்களும் அதிகரித்தன (ரூ.2 பில்லியன்).

மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வலுவாக அதிகரித்த போதிலும் வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்தின் வீழ்ச்சியால் உயர்வலுப் பணத்தின் விரிவாக்கலைக் கட்டுப்படுத்தும் வகையில் இது பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது. வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து ரூ.33 பில்லியனால் அதிகரித்தது. எவ்வாறாயினும் மிதமிஞ்சிய திரவத் தன்மையை ஒழிக்கும் நோக்கில் மத்திய வங்கியினால் ஆண்டின்போது நடாத்தப்பட்ட திறந்த சந்தை நடவடிக்கைகளின் விளைவாக வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்தில் ரூ.19 பில்லியன் வீழ்ச்சி ஏற்பட்டது. வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமையில் குறிப்பிடத்தக்க குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து மத்திய வங்கியிலிருந்தான அராசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டும் குறைவடைந்தது. (ரூ.13.6 பில்லியன்).

### பண நிரம்பல்

ஆண்டுக்கான பண வழங்கலிலான வளர்ச்சி எறிவு செய்யப்பட்டதைப் போன்றே இருந்தது. எவ்வாறாயினும் ஆண்டின் நடுப்பகுதியில் வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்டதை விடக் கூடுதலாக இருந்தது. 2002 யூனில் பண வழங்கல் உச்ச மட்டத்தை அடைந்து எதிர்பார்க்கப்பட்டதை விட 2 சதவீத புள்ளிகள் கூடுதலாக இருந்தது.

எவ்வாறாயினும் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் விரிவாக்கல் வீதம் படிப்படியாக குறைந்து 2002 இன் இறுதியளவில் 13.4 சதவீத பண வளர்ச்சியை பதிவு செய்தது. இவ்வளர்ச்சி வீதம் பொருளாதாரத்தின் உண்மையான வளர்ச்சிக்கும் உள்ளார்ந்த பணவீக்கத்துக்கும் இசைவாகக் காணப்பட்டது.

**அட்டவணை 10.1**
**நாணயப் புள்ளி விபரங்களின் தொகுப்பு**

| விடயம் | 2001 முடிவில் ரூ.பில். | 2002 முடிவில் ரூ.பில். | மாற்றம் 2001 தொகை ரூ.பில். | மாற்றம் 2001 % | மாற்றம் 2002 தொகை ரூ.பில். | மாற்றம் 2002 % |
|---|---|---|---|---|---|---|
| நாணயக் கூட்டுக்கள் | | | | | | |
| குறுகிய பண நிரம்பல் ($M_1$) | 122.2 | 139.4 | 3.7 | 3.2 | 17.2 | 14.0 |
| விரிந்த பண நிரம்பல் ($M_2$) | 450.7 | 510.4 | 46.1 | 11.4 | 59.7 | 13.2 |
| திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) | 549.1 | 622.5 | 65.7 | 13.6 | 73.4 | 13.4 |
| ஏதுக் காரணிகள் (அ) | | | | | | |
| உள்நாட்டுக் கொடுகடன் | 638.9 | 682.0 | 88.9 | 16.2 | 43.1 | 6.7 |
| அரசுக்கு (தேறிய) | 201.3 | 194.6 | 54.0 | 36.7 | (6.7) | (3.3) |
| அரசகூட்டுத்தாபனங்களுக்கு | 40.8 | 43.0 | 2.6 | 6.7 | 2.2 | 5.4 |
| தனியார்துறைக்கு | 396.8 | 444.4 | 32.4 | 8.9 | 47.6 | 12.0 |
| வெளிநாட்டுச்சொத்து(தேறிய) | 74.1 | 107.9 | 4.6 | 6.6 | 33.8 | 45.5 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | (163.9) | (167.4) | (27.8) | (20.5) | (3.5) | (2.1) |
| ஒதுக்கு நாணயம் | 112.5 | 126.4 | 7.4 | 7.0 | 13.9 | 12.3 |
| பணப்பெருக்கி ($M_{2b}$) | 4.88 | 4.92 | | | | |
| சுழற்சி வேகம் ($M_{2b}$)(ஆ) | 2.77 | 2.70 | | | | |


(அ) ($M_{2b}$) சார்பாக
(ஆ) ஆண்டுக்கான

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

யூன் மாதத்தில் 17.9 சதவீதமாக உச்சத்தில் இருந்த நாணய வளர்ச்சி ($M_{2b}$) படிப்படியாக வீழ்ச்சியடைந்து 2002 திசெம்பரில் 13.4 சதவீதத்தை அடைந்தது. வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்தின் உயர் அதிகரிப்பே பண நிரம்பல் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்த பிரதான காரணியாகும். அதேவேளை பொதுமக்களினால் வைத்திருக்கப்பட்ட நாணயம், கேள்வி வைப்புக்களை உள்ளடக்கிய குறுகிய பணம் ($M_1$) நாணயத்தின் அதி உயர்வால் 14 சதவீதத்தால் அதிகரித்தது. நாணய மேலாண்மை உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மேலதிகமாக வைப்புக்களை ஏற்கும் பிற நிதி நிறுவனங்கள் அதாவது உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், நிதிக் கம்பனிகள் ஆகியவற்றின் கொடுக்கல் வாங்கல்களைத் உள்ளடக்கும் நிதியியல் அளவீடு அடிப்படையிலான விரிந்த நாணயக் கூட்டு ($M_{2b}$) க்கு ஒத்தபோக்கினைக் காட்டியது. 2001 இன் 13.6 சதவீதவளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2002 இன் இறுதியில் $M_4$ 14.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

கேள்விப் பக்கத்திலிருந்த கூறுகளில் நாணயக் கூட்டுக்கள்-வளர்ச்சியும் மட்டமும் (திரட்டிய விரிந்தபணமும் ஒதுக்கப்பணமும்)மக்களால் வைத்திருக்கப்பட்டிருந்த நாணயம் ஆண்டின் போது குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருந்தது. வைப்புக்களிலான வளர்ச்சி மிதமாகவே இருந்தது. 2001 இன் ரூ.3 பில்லியன் அதிகரிப்புக்கு மாறாக பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் 2002இல் ரூ.10 பில்லியன் அதிகரிப்பைக் காட்டியது. சமாதான

**வரைபடம் 10.1**
**நாணயக் கூட்டுக்கள் - வளர்ச்சியும் மட்டங்களும்**




நடவடிக்கைகளைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியை, குறிப்பாக அதிகரித்த கேள்வியை இது பிரதிபலித்தது. பற்றுவரி, வீழ்ச்சியடையும் வைப்பு வீதங்கள் ஆகியவற்றின் தாக்கங்களும் நாணயக் கையிருப்பின் அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்திருக்கலாம். வைப்புக்களுள் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் 2001 இன் ஐ.அ.டொலர் 56 மில்லியனிலிருந்து 2002 இல் ஐ.அ.டொலர் 117 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது. இதன் காரணமாக 2002 இன் இறுதியில் மொத்த வெளிநாட்டு நாணய வைப்புத் தளம் ஐ.அ.டொலர் 1,248 மில்லியனாக, அதிகரித்துள்ளது. இவ் வளர்ச்சிக்கு மேம்பட்ட நம்பிக்கையும் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட குறைந்த வட்டி வீதங்களுமே காரணமாகும். ரூபா வைப்புக்களைப் பொறுத்தவரை சேமிப்பு வைப்புக்களின் பங்கு அதிகரித்த வேளையில் தவணை வைப்புக்களின் பங்கில் வீழ்ச்சி காணப்பட்டது. சேமிப்பு வைப்புக்களுடன் பார்க்கும்போது தவணை வைப்புக்களின் வட்டி வீதங்களின் அதிக வீழ்ச்சி காரணமாக சேமிப்பு வைப்புக்களிலேற்பட்ட கவர்ச்சியும் சேமிப்பு வைப்புக்களை மேம்படுத்தும் பொருட்டு வங்கிகளினால் செய்யப்பட்ட பிரசாரமும் இதற்குப் பகுதியளவு காரணமாக இருக்கக் கூடும்.

2002 இல் $M_{2b}$ இன் வளர்ச்சியின் முக்கியப் பங்கு (6.7 சதவீதம்) வங்கி முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பினாலேயே வந்துள்ளது. 2001 இல் தேறிய வெளிநாட்டுச் சொத்து கிட்டத்தட்ட 1 சதவீதத்தை மட்டுமே பங்களிப்புச் செய்துள்ளது. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் நாணய மேலாண்மையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ.33 பில்லியனால் அதிகரித்தன. இது சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவையிலான மேம்பாட்டைப் பிரதிபலித்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஏறத்தாழ ரூ.3 பில்லியனால் மேம்பட்டன.

அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகை மேம்பட்டது. அத்துடன் வங்கி முறைக்கு ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகையை அரசினால் திருப்பிக் கொடுக்க முடியாது போயிருப்பினும் 2002 இல் அரசாங்கத்துறை கடன்பாடு குறைந்தது. 2002 இல் வங்கி முறையிலிருந்தான அரசாங்கத்துக்கான தேறிய கொடுகடன் ரூ.8 பில்லியனால் குறைவடைந்தது. வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசாங்கத்துக்கான

## அட்டவணை 10.2
## நாணயக் கூட்டுக்கள் 2001-2002 (அ)

ரூபா பில்லியன்

| கால முடிவில் | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | | திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002 | சதவீத மாற்றம் | | | | 2001 | 2002 | சதவீத மாற்றம் | | | | 2001 | 2002 | சதவீத மாற்றம் | | | |
| | | | புள்ளிக்குப் புள்ளி | | அசையும் சராசரி | | | | புள்ளிக்குப் புள்ளி | | அசையும் சராசரி | | | | புள்ளிக்குப் புள்ளி | | அசையும் சராசரி | |
| | | | 2001 | 2002 | 2001 | 2002 | | | 2001 | 2002 | 2001 | 2002 | | | 2001 | 2002 | 2001 | 2002 |
| சனவரி | 112 | 120 | 3.8 | 7.5 | 7.7 | 2.9 | 399 | 452 | 10.9 | 13.2 | 12.7 | 10.7 | 487 | 550 | 12.6 | 13.1 | 12.0 | 13.0 |
| பெப்புருவரி | 112 | 121 | 4.6 | 8.6 | 7.3 | 3.2 | 401 | 457 | 11.0 | 14.0 | 12.5 | 11.0 | 489 | 559 | 12.8 | 14.2 | 12.0 | 13.1 |
| மாச்சு | 114 | 126 | 3.8 | 10.3 | 7.0 | 3.8 | 404 | 466 | 10.3 | 15.4 | 12.3 | 11.4 | 494 | 570 | 11.7 | 15.5 | 11.9 | 13.5 |
| ஏப்பிரல் | 114 | 124 | 3.9 | 8.7 | 6.7 | 4.2 | 407 | 469 | 10.2 | 15.1 | 12.0 | 11.8 | 499 | 575 | 13.4 | 15.2 | 12.0 | 13.6 |
| மே | 110 | 126 | 3.5 | 14.4 | 6.7 | 5.1 | 406 | 471 | 11.2 | 15.9 | 12.0 | 12.2 | 498 | 577 | 14.4 | 15.8 | 12.3 | 13.8 |
| யூன் | 109 | 126 | -0.2 | 15.6 | 5.9 | 6.4 | 406 | 476 | 9.4 | 17.5 | 11.7 | 12.9 | 496 | 584 | 11.9 | 17.9 | 12.4 | 14.3 |
| யூலை | 109 | 128 | 1.1 | 17.3 | 5.4 | 7.7 | 410 | 482 | 9.8 | 17.5 | 11.4 | 13.5 | 502 | 590 | 12.7 | 17.4 | 12.5 | 14.7 |
| ஓகத்து | 110 | 129 | 0.7 | 17.6 | 4.6 | 9.1 | 413 | 485 | 9.8 | 17.4 | 11.1 | 14.2 | 510 | 596 | 13.0 | 17.0 | 12.6 | 15.0 |
| செத்தெம்பர் | 112 | 129 | 0.4 | 15.5 | 3.9 | 10.3 | 421 | 489 | 9.9 | 16.0 | 10.8 | 14.7 | 516 | 601 | 12.8 | 16.6 | 12.6 | 15.3 |
| ஒத்தோபர் | 111 | 129 | -1.1 | 16.0 | 2.9 | 11.8 | 426 | 494 | 9.7 | 15.8 | 10.5 | 15.2 | 520 | 605 | 12.3 | 16.3 | 12.6 | 15.6 |
| நவெம்பர் | 117 | 132 | 7.5 | 12.5 | 3.1 | 12.2 | 436 | 500 | 12.5 | 14.7 | 10.6 | 15.3 | 533 | 614 | 14.4 | 15.3 | 12.9 | 15.7 |
| திசெம்பர் | 122 | 139 | 3.2 | 14.0 | 2.6 | 13.1 | 451 | 510 | 11.4 | 13.2 | 10.5 | 15.5 | 549 | 622 | 13.6 | 13.4 | 13.0 | 15.6 |
| மாதாந்தச் சராசரி | 113 | 127 | 2.6 | 13.2 | | | 415 | 479 | 10.5 | 15.5 | | | 508 | 587 | 13.0 | 15.6 | | |

(அ) பன்னாட்டு நடைமுறை நியமங்களுடன் ஒத்திருக்கும் விதத்தில் 1990இலிருந்தான நாணயத் தரவுகள் மீள பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. தயவுசெய்து புள்ளிவிபரப் பின்னிணைப்பு அட்டவணைகள் 106, 107, 111இனைப் பார்க்கவும்.


மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தேறிய கொடுகடன் உள்அமைப்பிலும் ஒரு மாற்றம் காணப்பட்டது. சந்தை சார்ந்த அரச பத்திரங்களை வழங்கியதன் மூலம் 2002 வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு அரசாங்கம் அரச வங்கிகளுக்கான அதன் மேலதிகப் பற்றை ரூ.38.1 பில்லியனிலிருந்து ரூ.3.6 பில்லியனுக்கு குறைத்தது. மிதமான தனியார்துறை கொடுகடன் கேள்விச் சூழ்நிலையில் வங்கிகளின் அதிகரித்த அரச பத்திர வைப்புக்களின் காரணமாக வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசுக்கான தேறிய கொடுகடன் அதிகரித்த போதும் மத்திய வங்கியிலிருந்தான அரசாங்கத்துக்கான தேறிய கடன் வீழ்ச்சியடைந்தது.

அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் ரூ.2.2 பில்லியன்களால் அதிகரித்தது. 2002 யூலை மாதம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலையிடல் சூத்திரத்திலிருந்து கடன் அறவீடுகள் கூறு அகற்றப்பட்டதால் வங்கித் துறைக்கு ஏறத்தாழ ரூ.7 பில்லியனை திருப்பிக் கொடுக்குமென எதிர்பார்க்கப்பட்ட அரச கூட்டுத்தாபனங்களுக்கு அவ்வாறு செய்ய இயலாது போனது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்பட்ட கொடுகடன் ரூ.2.4 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும் இலங்கை மின்சார சபைக்கான கொடுகடன் தீர்க்கமாக ரூ.4.8 மில்லியனால் அதிகரிக்கப்பட்டது. தடங்கலின்றி மின்வலுவை வழங்கும் பொருட்டு அவசரகால மின்வலுவை கொள்வனவு செய்யவேண்டி இருந்தமையாலேயே அவ்வாறு செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

விசேடமாக குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் காணப்பட்ட பொருளாதார மீட்சி காரணமாக தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 2002 இல் மீட்சியைக் காட்டியது. 2001 இறுதியில் 8.9 சதவீதமாக இருந்த தனியார் துறைக்கான வங்கிக் கடன் 2002 இன் இறுதியில் 12 சதவீத மட்டத்துக்கு அதிகரித்தது. உண்மை நியதிகளின்படி 2001 இன் ரூ.32 பில்லியனுடன் ஒப்பிடும்போது 2002 இல் ரூ.48 பில்லியனால் கொடுகடன் வளர்ந்தது. எவ்வாறாயினும் தனியார் துறைக்கான கொடுகடன் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவாகவே (13.4 சதவீதம்) இருந்தது. இது ஏற்றுமதிக்கான கேள்வி மந்தமாக இருந்தமையால் பன்னாட்டு வர்த்தகத்திலான எதிர்பார்க்கப்பட்டதைவிட நலிவான மீட்சியே இதற்குக் காரணமாகும். தனியார் துறைக் கொடுகடனின் பெரும்பகுதி வர்த்தக, வியாபார மற்றும் தனியார் நுகர்வுத் தேவைகளுக்கே பயன்படுத்தப்பட்டது.

ஆண்டின்போது தொடர்ந்தும் ஒதுக்குப் பண வளர்ச்சிக்கு மேலாக இருக்கும் போக்கில் பணநிரம்பலின் வளர்ச்சி அமைந்திருந்தமையினால் நாணயப் பெருக்கி 4.88 இலிருந்து திசெம்பர் இறுதியில் 4.92 இற்கு அதிகரித்தது. நாணயப் பெருக்கியில் அதிகரிப்பு ஏற்படுவதற்கு பங்களிப்புச் செய்யும் பிரதான காரணிகளாக இருந்த வைப்புக்கான நாணய விகிதத்தில்



வரைபடம் 10.2
நாணயத்தளம் மற்றும் நாணயப் பெருக்கி

**அட்டவணை 10.3**
**நாணயக் கூட்டுக்களும் ஏதுக் காரணிகளும் 2000–2002 (அ)**

ரூபா மில்லியன்

| விடயம் | திசெம்பர் 2000 | திசெம்பர் 2001 | திசெம்பர் 2002 | மாற்றம் 2001 | | மாற்றம் 2002 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | |
| மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் | 62,647 | 65,536 | 75,292 | 2,889 | 4.6 | 9,756 | 14.9 |
| மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் | 55,830 | 56,674 | 64,069 | 844 | 1.5 | 7,395 | 13.0 |
| குறுகிய பணநிரம்பல் ($M_1$) | 118,477 | 122,210 | 139,361 | 3,733 | 3.2 | 17,151 | 14.0 |
| வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருந்த தவணை சேமிப்பு வைப்புக்கள் | 364,944 | 426,927 | 483,134 | 61,983 | 17.0 | 56,207 | 13.2 |
| உள்நாட்டு வங்கிப் பிரிவுகள் | 341,776 | 395,071 | 445,741 | 53,295 | 15.6 | 50,670 | 12.8 |
| வெளிநாட்டு வங்கிப் பிரிவுகள் | 23,168 | 31,856 | 37,393 | 8,688 | 37.5 | 5,537 | 17.4 |
| திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_{2b}$) | 483,421 | 549,137 | 622,495 | 65,716 | 13.6 | 73,358 | 13.4 |
| ஏதுக் காரணிகள் | | | | | | | |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 69,529 | 74,130 | 110,642 | 4,601 | 6.6 | 36,512 | 49.3 |
| நாணய மேலாண்மை | 57,947 | 84,346 | 117,376 | 26,399 | 45.6 | 33,030 | 39.2 |
| வர்த்தக வங்கிகள் | 11,582 | (10,216) | (6,734) | (21,798) | (188.2) | 3,482 | 34.1 |
| உள்நாட்டு வங்கிப் பிரிவுகள் | 11,629 | (1,117) | (6,658) | (12,746) | (109.6) | (5,541) | (496.1) |
| வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகள் | (47) | (9,099) | (76) | (9,052) | (19,259.6) | 9,023 | 99.2 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 413,892 | 475,009 | 511,852 | 61,117 | 14.8 | 36,843 | 7.8 |
| உள்நாட்டுக் கொடுகடன் | 549,927 | 638,876 | 680,396 | 88,949 | 16.2 | 41,520 | 6.5 |
| அரசுக்கான கடன்கள் | 147,304 | 201,311 | 192,994 | 54,007 | 36.7 | (8,317) | (4.1) |
| நாணய மேலாண்மை | 91,556 | 84,535 | 70,934 | (7,021) | (7.7) | (13,601) | (16.1) |
| வர்த்தக வங்கிகள் | 55,748 | 116,776 | 122,060 | 61,028 | 109.5 | 5,284 | 4.5 |
| உள்நாட்டு வங்கிப் பிரிவுகள் | 42,928 | 77,067 | 82,237 | 34,139 | 79.5 | 5,170 | 6.7 |
| வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகள் | 12,820 | 39,709 | 39,823 | 26,889 | 209.7 | 114 | 0.3 |
| அரச கூட்டுத்தாபனத்திற்கான கொடுகடன் | 38,254 | 40,811 | 43,031 | 2,557 | 6.7 | 2,220 | 5.4 |
| உள்நாட்டு வங்கிப் பிரிவுகள் | 26,986 | 22,934 | 28,010 | (4,052) | (15.0) | 5,076 | 22.1 |
| வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகள் | 11,268 | 17,877 | 15,021 | 6,609 | 58.7 | (2,856) | (16.0) |
| தனியார் துறைக்கான கொடுகடன் (ஆ) | 364,369 | 396,754 | 444,371 | 32,385 | 8.9 | 47,617 | 12.0 |
| உள்நாட்டு வங்கிப் பிரிவுகள் | 307,613 | 328,788 | 367,397 | 21,175 | 6.9 | 38,609 | 11.7 |
| வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகள் | 56,756 | 67,966 | 76,974 | 11,210 | 19.8 | 9,008 | 13.3 |
| ஏனைய விடயங்கள் (தேறிய) | (136,035) | (163,867) | (168,544) | (27,832) | (20.5) | (4,677) | (2.9) |
| உள்நாட்டு வங்கிப் பிரிவுகள் | (78,406) | (79,270) | (74,194) | (864) | (1.1) | 5,076 | 6.4 |
| வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகள் | (57,629) | (84,597) | (94,350) | (26,968) | (46.8) | (9,753) | (11.5) |

(அ) $M_{2b}$ மீதான தாக்கத்தை அடையாளங்கள் எடுத்துக்காட்டுகின்றன

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


(ரூபா வைப்புக்கள் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உட்பட) கொடுப்பனவு முறையின் நிதியியல் புதிய ஆக்கங்களினால் ஏற்படுத்தப்பட்ட வீழ்ச்சியும், வர்த்தக வங்கி வைப்புக்களில் வெளிநாட்டு நாணய வைப்பு விகிதாசாரங்களின் (நியதி ஒதுக்கத்திற்கு ஏற்புடையதல்லாத, அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்ட நியதி ஒதுக்கீட்டு விகிதத்தின் வீழ்ச்சியுமே ஆகும். இவ்விரு அபிவிருத்திகளும் பல்வகை வைப்புக்களையும், கொடுகடன்களையும் உருவாக்குவதற்கு வங்கிக்கு கிடைக்கக்கூடியதாக இருந்த வைப்புக்களை உயர்த்தின. 2002 இல் நாணய வருமான வேகம் 2.70 ஆக மேலும் குறைவடைந்தது. அதிகரித்த நிதியியல் செறிவின் அளவினையும் பணவீக்க எதிர்பார்ப்புக்களிலான வீழ்ச்சியையும் பிரதிபலிக்கும் நிதித்துறை விரிவாக்கல் நாணயச் சுற்றோட்ட வேகத்தின் வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்தது.

## 10.3 நிதியியல் அளவீடு

நிதியியல் அளவீடானது திரட்டிய நாணய அளவீட்டினைக் ($M_{2b}$) காட்டிலும் விரிவான நாணயக் கூட்டுக்களை ($M_4$) உருவாக்கியது. இது நாணய மேலாண்மை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் போன்றவற்றிற்கு மேலாக உரிமம் பெற்ற சிறப்பியல் வாய்ந்த வங்கிகள், நிதிக் கம்பனிகள் வைப்புக்களை ஏற்கும் பிற நிதி நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களையும் தழுவி நிற்கின்றது. மேலும் நிதியியல் அளவீட்டின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் உலகின் பிற பாகங்களுடன் இலங்கையின் நிதித்துறை எந்த அளவு தொடர்பு கொண்டுள்ளது என்பதற்கான செம்மையான மதிப்பீட்டை அளிக்கும். அதேவேளை உள்நாட்டுக் கொடுகடன் கூறுகள் வர்த்தக வங்கிகள் தவிர்ந்த பாரிய நிதி நிறுவனங்களினால் அரச தனியார் துறையினருக்கு கிடைக்கச் செய்யப்பட்ட கொடுகடன் பற்றிய தகவல்களை வழங்குகின்றது.

$M_4$ இன் அசைவுகள் பொதுவாக $M_{2b}$ இன் அசைவுகளுடன் நெருங்கிய தொடர்பு உடையதாக இருந்தது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 2001 திசெம்பர் இறுதியில் 14 சதவீதமாக இருந்த வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2002 திசெம்பர் இறுதியில் $M_4$இன் வளர்ச்சி 13.5 சதவீதமாக இருந்தது. $M_4$ அத்துடன் $M_{2b}$ இன் வளர்ச்சி 2001 இன் போதான 12–14 சதவீத வீச்சுடன் ஒப்பிடும்போது ஆண்டின்போது 12–18 சதவீத வீச்சில் காணப்பட்டது. ஆண்டின் நடுப்பகுதியில் பண நிரம்பலில் காணப்பட்ட உயர் வளர்ச்சி ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்துக்கு ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியின்போது படிப்படியாக குறைவடைந்தது. 2001 இன் நாணய

வரைபடம் 10.3
நாணயக் கூட்டுக்களும் சுற்றோட்ட வேகமும் பணப் பெருக்கியும்




வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த தேறிய உள்நாட்டு சொத்தின் கூடுதலான பங்களிப்புக்கு மாறாக தேறிய வெளிநாட்டுச் சொத்தின் அதிகரிப்பே $M_{2b}$ யினதும் $M_4$ இனதும் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாகும்.

உண்மை நியதிகளில் விரிந்த பண நிரம்பல் ($M_4$) 2002 இல் ஏறத்தாழ ரூ.97 பில்லியனால் அதிகரித்து 2002 திசெம்பர் இறுதியில் 798 பில்லியனாக இருந்தது. தேசிய சேமிப்பு வங்கியுடனான பொதுமக்களின் வைப்புக்களின் கணிசமான தொகையின் காரணமாக பிரதானமாக விரிவான பண நிரம்பல் ($M_4$) $M_{2b}$ இனை விட கூடுதலாகக் காணப்பட்டது.

2001 இல் காணப்பட்ட ரூ.8 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2002 இல் தேறிய வெளிநாட்டு சொத்தின் விரிந்த பண நிரம்பல் ($M_4$) ஏறத்தாழ ரூ.37 பில்லியனால் அதிகரித்தது. 2002 இல் தேறிய வெளிநாட்டுச் சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு பிரதான காரணமாக இருந்தவை சென்மதி நிலுவையின் மேம்பாட்டுடன் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து மேம்பாடடைந்தமை, பங்குச் சந்தைக்கான உட்பாய்ச்சல்கள், வதியாதோர் வெளிநாட்டு நாணய வைப்புக்களிலான வளர்ச்சி, அரசாங்கத்தினால் வெளிநாடுகளில் வைக்கப்பட்டிருந்த யுத்தஇடர் வைப்புக்களை திரும்பப் பெறல் ஆகியவையாகும்.

நிதியியல் அளவீட்டில் அரசாங்கத்துக்கான தேறிய கடன், அதே காலப்பகுதியில் $M_{2b}$ இன் கணிப்பீட்டில் ரூ.8 பில்லியன் குறைவாக இருந்ததற்கு மாறாக 2002 திசெம்பர் இறுதியில் முடிவடைந்த 12 மாதகாலப் பகுதியில் கிட்டத்தட்ட ரூ.16 பில்லியனால் அதிகரித்தது. நிதியியல் அளவீட்டில் காணப்பட்ட அரசாங்கத்துக்கான தேறிய கடனில் கணிசமான அதிகரிப்புக்கு அதன் முதன்மை சொத்தாக அரசாங்கப் பத்திரங்களை வைத்திருக்கும் தேசிய சேமிப்பு வங்கியினால் வைக்கப்பட்டிருந்த அரசாங்கப் பத்திரங்களின் அதிகரிப்பே காரணமாகும்.

புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் $M_{2b}$ இன் 12 சதவீதம் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் $M_4$ இல் தனியார் துறைக்கான கொடுகடன் 2002 இறுதியில் சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. ஒப்பீட்டளவில் உண்மை நியதிகளில் ஆண்டின்போது $M_4$ இன் ரூ.53 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடும்போது தனியார் துறை கொடுகடன் $M_{2b}$இல் ரூ.48 பில்லியன் ஆக இருந்தது.

2002 திசெம்பர் இறுதியில் விரிந்த நாணய மதிப்பீட்டின் ($M_4$) பணப்பெருக்கி 6.31 ஆக இருந்தது. 2001 திசெம்பரில் இது 6.22 ஆக இருந்தது. முன்னரே கூறப்பட்டது போல் $M_{2b}$ இன் பணப்பெருக்கியிலும் இதையொத்த அதிகரிப்பு காணப்பட்டது.

### அட்டவணை 10.4
### நிதி அளவீட்டின் புள்ளிவிபரத் தொகுப்பு ($M_4$)

| விடயம் | 2001 இறுதி | 2002 இறுதி | மாற்றம் 2001 | | மாற்றம் 2002 | |
|---|---|---|---|---|---|---|
| | ரூ.பில். | ரூ.பில். | தொகை ரூ.பில். | % | தொகை ரூ.பில். | % |
| நாணயக் கூட்டுக்கள் | | | | | | |
| விரிந்த பண நிரம்பல்($M_2$) | 450.7 | 510.4 | 46.1 | 11.4 | 59.7 | 13.2 |
| திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) | 549.1 | 622.5 | 65.7 | 13.6 | 73.4 | 13.4 |
| விரிந்த பண நிரம்பல்($M_4$) | 699.6 | 797.6 | 83.5 | 13.6 | 97.9 | 14.0 |
| ஏதுக்காரணிகள் (அ) | | | | | | |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 63.2 | 100.5 | 8.3 | 9.2 | 37.3 | 58.9 |
| உள்நாட்டுக் கொடுகடன் | 840.0 | 911.5 | 104.2 | 14.2 | 71.2 | 8.5 |
| அரசுக்கானகடன்கள்(தேறிய) | 283.0 | 299.0 | 62.0 | 28.2 | 15.7 | 5.6 |
| அரச கூட்டுத்தாபனங் களுக்கான கொடுகடன் | 41.7 | 43.8 | 2.5 | 6.2 | 2.1 | 5.0 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 515.3 | 568.7 | 39.5 | 8.4 | 53.4 | 10.4 |
| ஏனைய விடையங்கள் (தேறிய) | (203.8) | (214.3) | (28.7 | (14.8) | (10.5) | (5.2) |
| பணப்பெருக்கி ($M_4$) | 6.22 | 6.31 | | | | |

(அ) $M_4$ உடன் தொடர்பாக. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## 10.4 வட்டி வீதங்கள்

2001 பெப்புருவரியிலிருந்து அவதானிக்கப்பட்ட வட்டி வீதங்களின் வீழ்ச்சியடையும் போக்கு 2002 இலும் தொடர்ந்தது. பொருளாதார அபிவிருத்திகளையும், சாத்தியங்களையும் கருத்தில் கொண்டு மத்திய வங்கி அதன் முதன்மைக் கொள்கை வீதங்களை அதாவது மீள் கொள்வனவு வீதம் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களை மூன்று தடவைகள் குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் குறைத்தது. இக் குறைப்புக்களுடன் அதிகரித்த சந்தைத் திரவத்தன்மையும் குறைந்து சந்தை வட்டி வீதங்களில் வீழ்ச்சியினை விளைவித்தன. குறுகிய கால வீதங்கள் குறிப்பாக அழைப்பு வீதங்கள் சராசரி நிறைவேற்றப்பட்ட முதன்மை கடன் வீதங்கள் அநேகமாக மத்திய வங்கி வீதங்களுக்கேற்ற விதத்தில் குறைவடைந்தன. பிற சந்தை வீதங்களின் கீழ்நோக்கிய போக்கும் அரசாங்க கடன் வாங்குதல் குறைந்தமையும் சந்தைசார்பான அரச பிணைகள் மீதான விளைவு வீதங்களைக் குறையச் செய்தன. 2001 இல் கீழ் நோக்கி அசைந்து மட்டமடைந்த அரச பிணைகளின் விளைவு வளைகோடு 2002 இல் மேலும் கீழே அசைந்தது. உண்மையில் நடுத்தர கால பணவீக்கத்தின் வீழ்ச்சியின் சந்தைப் உணர்வைக் குறைக்கும் வகையில் கீழ் நோக்கிய சரிவு ஒன்று காணப்பட்டது. எவ்வாறாயினும் பணவீக்க வீழ்ச்சி கிடடத்தட்ட 2-5 சதவீத புள்ளிகளாக (தெரிவு செய்யப்பட்ட சுட்டெண்ணைப் பொறுத்து) இருந்தமையால் 2002 இல் உண்மை வட்டி வீதங்களில் சில அதிகரிப்பு காணப்பட்டது. பன்னாட்டுச் சந்தை வீதங்களிலேற்பட்ட வீழ்ச்சியினைத் தொடர்ந்து வெளிநாட்டு நாணய வைப்பு மீதான வட்டி வீதங்களும் கடன் வழங்குதலும் ஆண்டின்போது குறைவடைந்தன. நாணயச் சந்தையின் மேம்படுத்தப்பட்ட உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் வீதங்களின் மாறுமியல்பு குறைவாயிருந்தமை 2002 இன் போது சந்தை வீதங்களிலான குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது. வங்கித் துறையின் வைப்பு வீதங்களும் கடன் வழங்கும் வீதங்களும் ஆண்டின்போது குறைந்திருப்பினும் கடன் வழங்கும் வீதங்களின் குறைவு குறைந்தவேகத்திலேயே இருந்தது. இதன் விளைவாக ஏற்பட்ட வட்டி வீத வீச்சுக்களின் அதிகரிப்பினால் வங்கித் துறை இலாபங்களும் அதிகரித்தன. இவ்வுயர் வட்டி வீத வீச்சுக்கள் சில வர்த்தக வங்கிகளின் ஒப்பீட்டளவில் உயர்வான செயற்படாக் கடன்கள், திருப்பிச் செலுத்தப்படாத கடன்களை விரைவாக மீளப் பெறுவதற்கான சட்டத்தடைகள் போன்ற நிதித்துறையில் இன்னும் போதாமலிருக்கும் போட்டிக்கான அறிகுறியாக கருதப்படுகின்றன.

அதேவேளை 2002 வரவுசெலவுத் திட்டத்தின் அரசிறை நடவடிக்கைகள் அதாவது நிதி கொடுக்கல் வாங்கல்கள் மீதான முத்திரைத் தீர்வை, தேசிய பாதுகாப்பு அறவீடு என்பன அகற்றப்பட்டமை கடன் வழங்கும் வட்டி வீதத்தைக் குறைப்பதில் தாக்கத்தை ஏற்படுத்தின. ஆண்டின் முன் அரைப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவாக இருந்த கொடுகடனுக்கான கேள்வி ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உயர்வடைந்தது. இதற்கு வட்டி வீதக் குறைப்பும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியும் ஓரளவுக்கு காரணமாகும்.

### மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்

மத்திய வங்கியின் முதன்மை நாணயக் கொள்கை வீதங்களான மீள் கொள்வனவு வீதம் நேர்மாற்று மீள் கொள்வனது வீதம் என்பன சந்தை வீதத்துடன் பெருமளவு குறிகாட்டி வீதமான வங்கி வீதத்துடனும் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. மீள் கொள்வனவு வீதமென்பது வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் தமது மிகை நிதியங்களை மத்திய வங்கியின் வசமுள்ள திறைசேரி முறிகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யக்கூடிய வீதமாகக் காணப்படுகின்ற வேளையில் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதமென்பது வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் பிணையமாக வைத்து மத்திய வங்கியிலிருந்து நிதியங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வீதமாகும்.

சந்தையில் வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படும் போக்கைக் குறிக்கும் மத்திய வங்கியின் சமிக்ஞைப் பொறிமுறையாக மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு வீதத்திலான மாற்றல்கள் விளங்குகின்றன. 2001 சனவரியில் ரூபா சுதந்திரமாக மிதக்க விடப்பட்டமையாலும் பணவீக்கத்தில் வீழ்ச்சி போன்ற சாதகமான பேரண்டப் பொருளாதார சுட்டிகளாலும் வெளிநாட்டு நாணயச் சந்தையில் உறுதிப்பாடு பெறப் பட்டமையால் மத்திய வங்கி படிப்படியாக அதன் மீள் கொள்வனவு, நேர் மாற்று மீள் கொள்வனவு வீதங்களை முறையே 800 மற்றும் 900 புள்ளிகளினால் 12 சதவீதமாகவும், 14 சதவீதமாகவும் 2001 இல் குறைக்கக்கூடியதாக இருந்தது. 2002 இன் சாதகமான பொருளாதார அபிவிருத்திகள் மூன்று படிகளில் இவ் வீதங்களை 225 அடிப்படைப் புள்ளிகளால் 9.75 சதவீதம் 11.75 சதவீதமாக 2002 இல் மேலும் குறைப்பதற்கு

இடமளித்தன. குறைப்பின் பெரும்பகுதி ஆண்டின் பின் அரைப்பகுதியிலேயே நிகழ்ந்தது. இவ் வீதங்களின் முதலாவது குறைப்பு 2002 மாச்சில் நிகழ்ந்தது. மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் ஒவ்வொன்றும் 50 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 11.50 சதவீதத்தினால் 13.50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டன. இக்குறைப்புடன் சந்தை நிலைமைகளின் அபிவிருத்தியைப் பொறுத்து இவ் வீதங்களில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்படுமென மத்திய வங்கி சந்தைக்கு அறிவித்தது. அதற்கேற்ப சந்தை அபிவிருத்தியை கருத்தில் கொண்டு 2002 மார்ச்சு, ஏப்பிறல் காலப்பகுதியில் மூன்று சந்தர்ப்பங்களில் 10, 5, 20 அடிப்படைப் புள்ளிகள் மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் சிறிதளவு உயர்த்தப்பட்டன. நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 10 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டு இப்போக்கு 2002 யூனில் மாற்றப்பட்டது.

அதன் பின்னர் மீள் கொள்வனவு நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்கள் இரு சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டன. 2002 யூலை மாதம் இரு வீதங்களிலும் 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 10.50 சதவீதம் 12.75 சதவீதத்திற்கு சமச்சீர் குறைப்புச் செய்யப்பட்டது. இக்குறைப்புக்கள் பன்னாட்டு வீதங்களில் குறைப்பு அத்துடன் பணவீக்கம் மேலும் சந்தையிலான மிதமிஞ்சிய திரவத்தன்மை ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்டது. இலங்கையின் மூலதனக் கணக்கு முற்றாக திறந்ததாக இல்லாதிருப்பினும் அதன் உள்நாட்டு வீதங்கள் பன்னாட்டு வீதங்களுடன் நேரடியாக இணைக்கப்பட்டு இல்லாதிருந்த போதும் இலங்கையின் நடைமுறைக் கணக்கு திறந்ததாக இருக்கின்றமையாலும் இலங்கையில் சுதந்திரமாக மிதக்கும் செலாவணி வீதம் இருப்பதனாலும் உள்நாட்டுக் கொள்கை வீதங்களைத் தீர்மானிக்கும்போது பிரதான பன்னாட்டு வீதங்களிலான மாற்றங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். 2002 நவெம்பரில் முறையே 75 அடிப்படைப் புள்ளிகள், 100 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 9.75 சதவீதம் 11.75 சதவீதமாக மீள் கொள்வனவு, நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களில் மற்றுமொரு குறைப்பு ஏற்பட்டது. இக் குறைப்பு நாணயச் சந்தை வீதங்களில் (நவம்பர் 06 ஆம் திகதி கிட்டத்தட்ட 65 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்ட) அரசாங்க பத்திரங்களின் இரண்டாம்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அரசாங்கம் வழங்கிய வைத்தல் வரிச் சலுகை தோற்றுவிக்கப்பட்ட முரண்பாடுகளை நீக்குவதற்குத் தேவைப்பட்டது.

அதே வேளை அவர்களது தற்காலிக திரவத்தன்மை நோக்கங்கள் பொருட்டு வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி வழங்கும் முற்பணங்களுக்கான வீதமான வங்கிவீதம் 2001 திசெம்பரிலிருந்து 18 சதவீதமாக மாறாதிருந்தது.

அட்டவணை 10.5
மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களிலான மாற்றங்கள்

ஆண்டொன்றுக்கு %

| திகதி | | மீள் கொள்வனவு வீதம் | நேர்மாற்றுமீள் கொள்வனவு வீதம் | வங்கி வீதம் |
|---|---|---|---|---|
| 30 திசெம்பர் | 2000 | 17.00 | 20.00 | 25.00 |
| 18 சனவரி. | 2001 | 20.00 | 23.00 | 25.00 |
| 26 பெப்புருவரி | 2001 | 19.00 | 22.00 | 25.00 |
| 03 ஏப்பிறல் | 2001 | 18.50 | 21.50 | 25.00 |
| 02 யூலை | 2001 | 16.00 | 19.50 | 23.00 |
| 02 ஓகத்து | 2001 | 15.00 | 18.50 | 23.00 |
| 03செத்தெம்பர் | 2001 | 13.00 | 15.00 | 23.00 |
| 17ஒத்தோபர் | 2001 | 12.00 | 14.00 | 23.00 |
| 27திசெம்பர் | 2001 | 12.00 | 14.00 | 18.00 |
| 20 மார்ச்சு | 2002 | 11.50 | 13.50 | 18.00 |
| 21மார்ச்சு. | 2002 | 11.50 | 13.60 | 18.00 |
| 22 மார்ச்சு. | 2002 | 11.50 | 13.65 | 18.00 |
| 04 ஏப்பிறல் | 2002 | 11.50 | 13.85 | 18.00 |
| 04 யூன் | 2002 | 11.50 | 13.75 | 18.00 |
| 26 யூலை | 2002 | 10.50 | 12.75 | 18.00 |
| 22நவெம்பர் | 2002 | 9.75 | 11.75 | 18.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## குறுகிய கால வீதங்கள்

நாணயச் சந்தை ஆண்டு முழுவதும் திரவ நிலையிலேயே இருந்தது. சந்தையிலிருந்து வெளிநாட்டு நாணயங்களை கொள்வனவு செய்தமை மூலம் மத்திய வங்கியால் உட்பாய்ச்சப்பட்ட ரூபாத் திரவத் தன்மை, அரசாங்கம் பெற்ற வெளிநாட்டு நாணய பெறுகைகள் சிலவற்றை மத்திய வங்கிக்கு விற்பனை செய்தமை, ஆண்டின்போது வங்கி நிதியை அரசாங்கம் நாடுவதிலேற்பட்ட வீழ்ச்சி ஆகியனவே இதற்கான பிரதான காரணங்களாகும். இம் மிதமிஞ்சிய திரவத்தன்மை மத்திய வங்கியின் மீள் கொள்வனவு வசதியில் முதலீடு செய்யப்பட்டது. அதற்கேற்ப ஆண்டின் பெரும்பாலான பகுதியில் அழைப்புச் சந்தை வீதங்கள் வங்கியின் மீள் கொள்வனவு வீதங்களை ஒருங்கி பின்பற்றின. 2001 உடன் ஒப்பிடும்போது 2002 இல் அழைப்புச் சந்தைவீதங்களின் மாறுமியல்பு கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தன. சராசரி அழைப்பு பணவீதங்களின் நியம வேறுபாடுகளினால் அளவிடப்படும் அழைப்பு பணச்சந்தை வீதங்களின் வேறுபாடுகள் 2001 இல் 4.2 சதவீதமாக இருந்து 2002 இல் 0.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 2001 இன் இறுதியில் 12.50-13.00 சதவீத வீச்சில் காணப்பட்ட அழைப்புச் சந்தை வீதங்கள் 2002 இன் முதலாம் காலாண்டிற்கு குறைவடைந்தன. ஆயினும் ஏப்பிறல் மாதத்தில் பருவகால கேள்வியுடன் அதிகரித்து யூன் மாதம் வரை ஒப்பீட்டளவில் உயர்வாக இருந்தன. இவ்வீதங்களின் உச்சம் மே மாதத்தில் அவதானிக்கப்பட்டது. அப்போது உச்ச வீதம் 13.87 சதவீதம் வரை உயர்ந்தது. அதன் பின்னர் யூலை மாதத்தில் மத்திய வங்கியின் கொள்கை வீதக்

அட்டவணை 10.6
இலங்கை வங்கிகளுக்கிடையேயான அளிப்பு வீதங்கள் (மாத இறுதியில் பெறுமதி %)

| | 2001 திசெ. | 2002 மாச்சு | 2002 யூன் | 2002 செத். | 2002 திசெ. |
|---|---|---|---|---|---|
| ஓரிரவு | 12.88 | 12.35 | 12.40 | 10.71 | 10.67 |
| 7 நாட்கள் | 13.11 | 12.34 | 12.54 | 10.88 | 10.78 |
| 1 மாதம் | 13.26 | 12.56 | 12.79 | 11.12 | 10.84 |
| 3 மாதங்கள் | 13.38 | 12.75 | 12.94 | 11.32 | 10.92 |
| 6 மாதங்கள் | 13.63 | 13.17 | 13.10 | 11.58 | 11.05 |
| 12 மாதங்கள் | 14.10 | 13.56 | 13.63 | 11.85 | 11.33 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறைப்புடனும் சந்தைத் திரவத்தன்மை அதிகரிப்புடனும் வீதங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. யூலை மாத இறுதியிலிருந்து ஒத்தோபர் மாத இறுதிவரை அழைப்புச் சந்தை வீதங்கள் மிகவும் உறுதியாக இருந்ததுடன் 10.50–11.13 சதவீத வீச்சில் நகர்ந்தன. அத்துடன் சராசரி அழைப்புச் சந்தை வீதம் மீள் கொள்வனவு வீதத்தை அண்மித்துக் காணப்பட்டது. எவ்வாறாயினும் அரசாங்கப் பத்திரங்களின் இரண்டாம் தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில், அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பிடித்துவைத்தல் வரிச் சலுகையின் விளைவாக நவம்பர் 6 ஆம் திகதி சராசரி அழைப்பு பணச்சந்தை வீதங்களில் கிட்டத்தட்ட 65 அடிப்படைப் புள்ளிகளால் (நவெம்பர் 7இல் அதியுயர் 11.75 சதவீதம்) திடீர் உயர்வு ஏற்பட்டது. விளைவுகளைச் சமப்படுத்துமுகமாக அழைப்புச் சந்தை வீதங்கள் உயர்த்தப்பட வேண்டுமென்பது சந்தைக் கண்ணோட்டமாகும். இவ்வதிகரிப்பை நீக்குமுகமாக மத்திய வங்கியானது நவெம்பர் 22 ஆம் திகதி அதன் கொள்கை வீதங்களைக் குறைத்தது. இதனைத் தொடர்ந்து அழைப்புச் சந்தை வீதங்கள் 10.00–11.00 சதவீத வீச்சில் குறைவடைந்தன. ஆண்டிறுதியில் சந்தை திரவத்தன்மை மேலும் அபிவிருத்தியடைந்ததால் அழைப்புச் சந்தை வீதங்கள் படிப்படியாக தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. திசெம்பர் இறுதியில் சராசரி வீதம் 10.39 சதவீதமாக இருந்த வேளையில் ஆகக் குறைந்த மற்றும் உச்ச வீதங்கள் 10.25–10.87 சதவீத வீச்சில் காணப்பட்டன.

பன்னிரண்டு வர்த்தக வங்கிகளினது வங்கிகளுக்கிடையேயான ரூபா கொடுக்கல் வாங்கல்கள் அடிப்படையிலான இலங்கை வங்கிகளுக்கிடையிலான அளிப்பு வீதங்கள் அழைப்புச் சந்தை வீதத்துக்கு ஒப்பான கீழ்நோக்கிய போக்கைக் காட்டின. 2001 திசெம்பர் இறுதியில் 12.88 சதவீதமாக இருந்த இலங்கை வங்கிகளுக்கிடையேயான வீதங்கள் ஏப்பிறல் நடுப்பகுதியில் 13.35 சதவீத உச்சமட்டத்தை அடைந்து 2002 திசெம்பர் இறுதியளவில் 10.67 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 2001 திசெம்பர் இறுதியில் 14.10 சதவீதமாக இருந்த இலங்கை வங்கிகளுக்கிடையேயான ஓராண்டு அளிப்பு வீதங்கள் 2002 திசெம்பர் இறுதியளவில் 11.33 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

திறைசேரி உண்டியல் மீதான விளைவுகள் பிற குறுகியகால சந்தை வீதங்களைப் போலவே வீழ்ச்சியடையும் போக்கைக் காட்டின. 2002 மே 22ஆம் திகதி திறைசேரி அரசாங்க பிணைகளின் வட்டி மீது 10 சதவீதம் பிடித்துவைத்தல் வரியை விதித்தது. இது முதனிலை ஏலங்களில் நேரடியாக விதிக்கப்பட்டது. ஏல விளைவுகள் வரிக்குப் பின்னரான விளைவை ஏறத்தாழ வரி விதிப்புக்கு முன்னரான மட்டத்தில் பேணும் வகையில் உயர்ந்தது. எனவே வரி வீதம் தவிர்ந்த விளைவு வீதம் சந்தை பங்கேற்புக்கான செயற்படும் வீதமாக கருதப்பட்டது. 2001 திசெம்பர் இறுதியில் 12.92 சதவீதம், 13.74 சதவீதமாக இருந்த 91 நாள், 364 நாள் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகள் 2002 திசெம்பர் இறுதியில் (வரிகளின்றி) 9.92 சதவீதமாகவும் 9.91 சதவீதமாகவும் இறங்கியது. இக் குறைப்புக்கு கொள்கை வீதங்களிலான குறைப்பு குறைக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை, சந்தையில் அதிகரிக்கப்பட்ட திரவத்தன்மை, பிற சந்தை வீதங்களில் குறைப்பு ஆகிய காரணிகள் உதவின.

2001 இறுதியில் 14.31 சதவீதமாக இருந்த வர்த்தக வங்கிகளின் முதன்மை வாடிக்கையாளர்களுக்கான கடன் வீதங்களின் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக்கடன் வழங்கும் வீதமான நிறைவேற்றப்பட்ட சராசரி கடன் வழங்கும் வீதம் 2002 இறுதியில் 12.24 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 2001 இல் இருந்ததைவிட 2002 இல் நிறையேற்றப்பட்ட சராசரி கடன் வழங்கல் வீதத்தின் அடிக்கடி மாறுமியல்பு குறைவாக இருந்தது.


வர்த்தக வங்கிகள், முதன்மை வணிகர்களினால் மத்திய வங்கியின் இரண்டாம் சந்தையினூடாக உடன் கொள்வனவு, விற்பனை செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்குப் பொருத்தமான மத்திய வங்கியின் கழிவு மீள்கழிவு வீதங்கள் சந்தை வீதங்களுடன் நகர்ந்தன. 2001 இறுதியில் 130 அடிப்படைப் புள்ளிகளாக இருந்த இரண்டாம் தரச் சந்தையின் கழிவு மீள்கழிவு வீதம், வீதங்களுக்கிடையிலான கழிவு விளிம்பினை மூன்று சந்தர்ப்பங்களில் 125 அடிப்படை புள்ளிகளால் உயர்த்தியதன் மூலம் 2002 இல் 250 அடிப்படைப் புள்ளிகளாக அதிகரிக்கப்பட்டது. முதன்மைச் சந்தை ஏல விற்பனைகளை மேலும் கவர்ச்சிகரமாக ஆக்கும் நோக்குடன் விளிம்பு யூன் இறுதியில் 15 அடிப்படைப் புள்ளிகளாகவும் யூலை நடுப்பகுதியில் 50 அடிப்படைப் புள்ளிகளாகவும் ஆகத்து மாத ஆரம்பத்தில் 125 அடிப்படைப் புள்ளிகளாகவும் அதிகரிக்கப்பட்டது.

### வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள்

மத்திய வங்கியின் கொள்கை வீதம், ஏனைய சந்தைவட்டி வீதம் ஆகியவற்றின் வீழ்ச்சியைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்களும், கடன் வழங்கும் வீதங்களும் வீழ்ச்சியடைந்தன. கடன் வழங்கல் வீதத்திலான வீழ்ச்சி குறைந்த வேகத்தில் காணப்பட்டது. 2002 ஆம் ஆண்டின் முன் அரைப்பகுதியில் கிட்டத்தட்ட சராசரி 8 சதவீதமாக இருந்த சேமிப்பு வைப்பு வீதங்கள் 2002 இன் பிற பகுதியில் ஏறத்தாழ 6.25 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. ஆரம்பத்தில் 12.6 சதவீதமாக இருந்த ஒருவருட நிலையான வைப்பு வீதங்கள் வருட இறுதியில் சராசரி 9.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. பொதுவாக வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கும் வீதம் 125–175 அடிப்படைப் புள்ளிகளால் குறைவடைந்தன. ஏற்றுமதி நிதி வசதிகளுக்கான கடன் வழங்கும் வீதம் வருட ஆரம்பத்தில் 17.5 சதவீதமாக இருந்து வருட இறுதியில் 16.2 சவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே காலப்பகுதியில் இறக்குமதி நிதி வசதிகள் மீதான வீதங்கள் சராசரியாக 19.6 சதவீதத்திலிருந்து 17.95 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வர்த்தக வங்கிகளின் வட்டி உழைக்கும் அனைத்து வெளிநின்ற வைப்புக்களினதும் நிறைவேற்றப்பட்ட சராசரி அடிப்படையிலான நிறை யேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதம் 2001 திசெம்பரில் 10.78 சதவீதமாக இருந்து 2002 திசெம்பரில் 7.47 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதனை ஒத்த போக்கைக் காட்டியவாறு 2001 திசெம்பரில் 13.47 சதவீதமாக இருந்த நிறையேற்றப்பட்ட சராசரி நிலையான வைப்பு வீதம் 2002 திசெம்பரில் 10.17 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

சந்தை வீதப் போக்கினைத் தொடர்ந்து தேசிய சேமிப்பு வங்கியும் ஆண்டில் அதன் வைப்பு வீதத்தை குறைத்தது. 2001 இறுதியின் 8.4 சதவீதமாக இருந்த சேமிப்பு வைப்பு வீதம் 2002 இறுதியில் படிப்படியாக

**வரைபடம் 10.4**
**வட்டி வீதங்கள்**





3 படிகளில் 6 சதவீதமாக குறைக்கப்பட்டது. இதேபோன்று 2001 இறுதியளவில் 13 சதவீதமாக இருந்த ஒரு வருட நிலையான வைப்பு வீதம் பல படிகளில் 2002 இன் இறுதியளவில் 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

வர்த்தக வங்கிகளினால் கடன் அட்டைகள் ஊடான கொடுப்பனவுகள் மீது அறவிடப்படும் வட்டி 2002 இறுதியில் 21-33 சதவீத வீச்சில் இருந்ததுடன் பிற சந்தை வீதங்களுக்கு இணையாக இவை கீழிறங்கவில்லை.

நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்களின் அதாவது டி.எவ்.சி.சி. வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் கடன் வட்டி வீதங்களும் ஆண்டின் போது வீழ்ச்சியடைந்தன. 2001 திசெம்பரில் தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வட்டி வீதம் 13.25-22.00 சதவீதத்திலிருந்து 2002 திசெம்பரில் 10.81-18.35 சதவீதமாக மாற்றமடைந்தது. ஆண்டிறுதியில் டி.எவ்.சி.சி. வங்கியின் கடனவழங்கல் வீதம் 11.5-19 சதவீதமாகவும், தேசிய சேமிப்பு வங்கியின் வட்டி வீதம் 14.0-16.5 சதவீத வீச்சிலும் இருந்தது.

2001 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலக பின்னடைவின் விளைவாக அநேகமாக பன்னாட்டு வங்கி வீதங்கள் கணிசமான அளவு குறைந்தன. 2002 இல் பொருளாதார மீட்சி நலிவானதாக இருந்தமையால் முந்திய பொருளாதாரங்கள் வளர்ச்சிக்கு ஆதரவளிக்குமுகமாக தமது வட்டி வீதங்ககளை குறைத்தன. உதாரணமாக மிகவும் பிரபலமாகப் பின்பற்றப்பட்டுவரும் வீதமான பெட் நிதிய வீதமானது 2001 திசெம்பரின் 1.75 சதவீதத்திலிருந்து 50 அடிப்படை புள்ளிகளால் குறைந்து 2002 நவம்பரில் 1.25 சதவீதமாக குறைக்கப்பட்டது. பன்னாட்டுச் சந்தை வீதப் போக்கினை அடுத்து இலங்கையின் வர்த்தக வங்கிகளும், வெளிநாட்டு நாணய வைப்புக்கள், வெளிநாட்டு நாணயக்கடன் வழங்கல் ஆகியவற்றின் மீதான வட்டி வீதத்தை குறிப்பாக ஆண்டின் பின் அரைப்பகுதியில் குறைத்தன.

பொதுவாக 2001 இன் ஆரம்பத்திலிருந்து வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும் போக்கைக் காட்டியபோதும் கடன் வழங்கும் வீதங்களின் மெதுவான சீராக்கல், உயர் நிருவாகச் செலவு அத்துடன் பொதுவாக உயர்ந்த செயற்படாக் கடன்கள், வங்கித்துறையில் குறைந்த போட்டி ஆகியவற்றின் காரணமாக வர்த்தக வங்கிகளின் வட்டி வீதம் இன்னமும் உயர்வாகவே 4-8 சதவீதத்தில் காணப்பட்டது. வட்டி வீத பரம்பலில் மேலும் குறைவு ஏற்படுவதற்கு அதிகரித்த செயற்றிறன், செயற்படா கடன்களைக் குறைத்தல், வங்கி வியாபாரத்தில் செலவினைக் கட்டுப்படுத்தல், போட்டி அதிகரிப்பு




வரைபடம் 10.5
அரச பிணைகள்
இரண்டாந்தரச் சந்தை விளைவு வளைகோடு

ஆகியவை தேவைப்படும். மத்திய வங்கி நிதியியல் முறைமையில் போட்டியை ஊக்குவிக்கும் பொருட்டு பொது மக்களுக்கு கூடுதலான தகவல்களை வழங்கக்கூடியதாக வங்கி ரீதியான வட்டி வீதம் விதிப்புக்கள், தரகுகள் பற்றி பிரசுரிக்க ஆரம்பித்தது.

### நடுத்தர, நீண்டகால அரசபத்திரங்கள் மீதான வீதங்கள்

நீண்டகால இடரற்ற விளைவு வளைகோட்டினை உருவாக்கும் நோக்குடனும் அரசாங்கத்தின் கடன் மீள் கொடுப்பனவு குவிவதைக் குறைக்கும் பொருட்டும் ஆண்டின்போது 2 வருடகால, மூன்று வருடகால திறைசேரிப் பிணைகளுக்கு மேலதிகமாக அதனிலும் நீண்டகால திறைசேரிப் பிணைகளை அதாவது 4, 5, 6 வருடப் பிணைகளை மத்திய வங்கி வழங்கல் செய்ய ஆரம்பித்தது. ஏனைய சந்தை வீதங்களைத் பின்தொடர்ந்து குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் திறைசேரிப் பிணைகளின் அனைத்து முதிர்வுகளினதும் விளைவு வீதம் வீழ்ச்சியடைந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் முறையே 14.94 சதவீதம் 14.50 சதவீதமாக இருந்த 2 வருடகால 3 வருடகால பிணை விளைவு வீதங்கள் 2002 இன் இறுதியில் (வரிகளின்றி) 11.86 சதவீதமாகவும், 11.13 சதவீதமாகவும் குறைவடைந்தது. அதேவேளை, அவ் வழங்கல் மீள ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது காலாண்டில் 13.79 சதவீதம், 14.18 சதவீதம், 12.95 சதவீதமாகவும் இருந்த 4, 5, 6 வருடகால திறைசேரி விளைவுகள் ஆண்டிறுதியில் (வரிகளின்றி) முறையே 10.85 சதவீதம் 11.02 சதவீதம் 11.08 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன. 2002 இல் இலங்கை அரசாங்கம் மீதமாக இருந்த ஐ.அ.டொலர் 91.5 மில்லியன் கொண்ட டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளை (இ.அ.மு) மிதக்கவிட்டது. 2001 இல் ஐ.அ.டொலர் 158.5 மில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டன. இலங்கை அபிவிருத்தி முறிகள் 2 வருட காலத்துக்கானதாக இருந்ததுடன் ஏற்புடைய வீதம் ஆண்டுதோறும் 6 மாதகால இலண்டன் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதத்துடன் 194 அடிப்படை புள்ளிகள் சேர்க்கப்பட்டதாக இருந்தது.

2002 ஆம் ஆண்டில் 2 முதல் 5 ஆண்டு வரையான முதிர்வு காலத்தைக் கொண்ட ரூபாக் கடன்கள் வழங்கப்பட்டன. ரூபாய் கடன்கள் மீதான நிருவாக முறையில் தீர்மானிக்கப்பட்டும் வட்டி வீதங்கள் ஆண்டொன்றுக்கு 13 சதவீதமாக இருந்ததுடன் இவை அரையாண்டுக்கொருமுறை செலுத்தப்படும்.

### கம்பனி படுகடன் பிணையங்கள் மீதான வீதங்கள்

குறுகிய கால படுகடன் கருவியான வர்த்தகப் பத்திரங்கள் மீதான வட்டி வீதங்கள் 2001 ஆம் ஆண்டில் 14.00-24.75 சதவீத வீச்சில் மாறுபட்டதுடன் 2002 இன் இறுதியளவில் 10.50-16.50 சதவீத வீச்சுக்கு வீழ்ச்சியடைந்தன. பிற சந்தை வீதங்களின் வீழ்ச்சியும் திரவத் தன்மையின் மேம்பாடும் வீதத்தையும் வீதங்களின் வேறுபாட்டையும் குறைத்தன. ஏஸ் பவர் ஜெனரேசன் மாத்தறை லிமிட்டெட், ஈகிள் இன்சூரன்ஸ் லிமிட்டெட் எயிட்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட், அட்டன் நசனல் வங்கி ஆகிய இவ்வாண்டில் தொகுதிக்கடன்களை வழங்கின. இத் தொகுதிக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் தொகுதிக்கடனின் வகை, முதிர்வுக்கால வட்டி செலுத்தும் காலம் என்பவற்றைப் பொறுத்து 12-16 சதவீதம் வரை மாறுபட்டுக் காணப்பட்டன.

### சட்ட வீதமும் சந்தை வீதமும்

சட்டத்தால் வேண்டப்பட்டவாறு சட்டவீதமும் சந்தை வீதமும் மத்திய வங்கியினால் ஆண்டு தோறும் வெளியிடப்படுகின்றன. சட்ட வீதமானது 1990 இன் 6 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவையின் (திருத்தம்) படி வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பணம் மீள்பெறல் தொடர்பான எந்த நடவடிக்கைகளுக்கும் அது ஏற்புடையது. சந்தை வீதமானது 1990 இன் 2 ஆம் இலக்க கடன் அறவிடல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. இணக்கம் காணப்பட்ட வட்டி வீதம் ஒன்று காணப்படாத வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழும் 150,000 ரூபாவுக்கு மேற்பட்ட கடன்களின் மீட்புக்காக கடன்வழங்கல் நிறுவனங்களினால் தொடக்கி வைக்கப்பட்ட வழக்குகள் தொடர்பாக மட்டுமே சந்தை வீதம் பிரயோகிக்கப்படும். சட்ட வீதம் சந்தை வீதம் ஆகிய இரண்டும் ஆண்டின் போதான வர்த்தக வங்கிகளின் நிறையேற்றப்பட்ட சராசரி வைப்பு வீதங்களின் அடிப்படையிலேயே கணிக்கப்பட்டுள்ளன. 2001 இன் 9.21 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 2002 இல் சட்ட வீதமும் சந்தைவீதமும் 9.11 சதவீதமாக இருந்தது.

## 10.5 வர்த்தக வங்கித் தொழில்

2001 ஆம் ஆண்டில் அனுபவிக்கப்பட்ட பின்னடைவின் பின் படிப்படியான பொருளாதார மீட்சியுடன் குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வர்த்தக வங்கித்துறை நடவடிக்கைகளில் வளர்ச்சி ஏற்பட்டது. உள்நாட்டு வங்கித்தொழிற் பிரிவுகளிலேயே முன்னேற்றம் முற்றிலும் பிரதிபலிக்கப்பட்டது. வதியாதோர் துறையினருக்கான வெளிப்படுத்தலின் வீழ்ச்சியின் காரணமாக வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவின் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. ஆண்டின்போது வர்த்தக வங்கிகளின் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்தமையாலும் பொருளாதார நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்பட்டமையாலும் தனியார் துறையினரின் கொடுகடன் கேள்விகள் ஆண்டினிறுதியளவில்

அதிகரித்தன. அதேவேளை ஆண்டின்போது வர்த்தக வங்கிகளினால் அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ரூபா 5 பில்லியனால் அதிகரித்தது. அதேவேளை அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் ரூ.2 பில்லியனால் அதிகரித்தது. வர்த்தக வங்கிகள் மத்திய வங்கிக்கு வெளிநாட்டு நாணய விற்பனை செய்தமை காரணமாக அரசாங்கத்தின் மேம்பட்ட இறைச் செயற்பாட்டின் காரணமாக 2002 இல் வர்த்தக வங்கிகளின் ரூபா திரவத்தன்மையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது.

இரு வெளிநாட்டு வங்கிகளின் கிளை நடவடிக்கைகள் இரு உள்நாட்டு வங்கிகளினால் பொறுப்பேற்கப்பட்டதுடன் ஒரு வெளிநாட்டு வங்கி மற்றொன்றுடன் இணைந்தமை காரணமாக 2001 திசெம்பர் இறுதியில் 25 ஆக இருந்த இலங்கையில் இயங்கி வந்த வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 2002 திசெம்பரில் 23 ஆக வீழ்ச்சியடைந்தது. அதற்கேற்ப 2002 இறுதியில் வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 12 ஆக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 11 ஆகவே தொடர்ந்தும் இருந்தது.

மத்திய வங்கியின் கொள்கை வீதக் குறைப்பீட்டினைத் தொடர்ந்து கடன் வழங்கும் வீதத்தைவிட வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதம் வேகமாகக் குறைவடைந்தமையால் வட்டி விளிம்பு அதிகரித்த காரணத்தால் வர்த்தக வங்கிகளின் வட்டி வருமானமும் இலாபமும் 2002 இல் அதிகரித்தது.

வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கிப் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் 2001 இன் 9.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2002 இல் 6.3 சதவீதத்தால் அதிகரித்தன. எவ்வாறாயினும் 2001 இன் 20 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் மொத்தச் சொத்துக்கள் ஐக்கிய அமெரிக்க (யு.எஸ்) டொலர் நியதிகளில் 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

2001 இன் ரூ.34 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2002 இல் உள்நாட்டு வங்கிப் பிரிவுகளின் அரசாங்கத்திற்கான கொடுகடன் ரூபா 5 பில்லியனால் மட்டுமே அதிகரித்தது. அரசாங்கத்தின் நிதிப் பாய்ச்சலில் மேம்பாடு காணப்பட்டமையும், எதிர்பார்க்கப்பட்டதைவிடக் குறைவாகவே ஆயினும் வங்கிக்கான சில பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டமையுமே இதற்கான காரணமாகும். அத்துடன் சந்தை சார்ந்த அரச பத்திரங்களை வழங்கியதன் மூலம் அரசாங்கம் மேலதிகப் பொறுப்புக்களை குறைத்தமையால் உள்நாட்டு பிரிவுகளுக்கான அரசாங்கப் பொறுப்புகளின்அமைப்பு முறை மாற்றம் காணப்பட்டது.

அதேவேளை பிரதானமாக இலங்கை மின்சார சபை 2002 இல் தடையற்ற மின்சாரம் வழங்கப்படுவதை உறுதி செய்யுமுகமாக தனியார் துறையினரிடமிருந்து உயர்ந்த விலையில் அவசரகால மின்வலுவைக் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தமையால் உள்நாட்டு வங்கிப் பிரிவுகளின் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் அதிகரித்தது. மேம்படுத்தப்பட்ட திறைசேரி முகாமைத்துவத்தின் காரணமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வர்த்தக வங்கிகளுக்கான அதன் பொறுப்புக்களை குறைத்தது.

மொத்த முற்பணக் கொடுப்பனவின் 0.8 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக வைப்புக்கள் 10.5 சதவீதத்தால் அதிகரித்தமையால் (பிரதானமாக அரசாங்கத்தின் மேலாதிக்கப் பற்றை திறைசேரி உண்டியல் திறைசேரி முறிகளாக மாற்றியதன் காரணமாக) வர்த்தக வங்கிகள் உள்நாட்டு வங்கித் தொழிற் பிரிவுகளின் கடன் வைப்புக்கள் விகிதம் வீழ்ச்சியடைந்தது.

டொலரினால் குறித்துரைக்கப்பட்ட இ.அ.முறிகளிலான (ஐ.அ.டொலர் 91.5 மில்லியன்) வங்கி முதலீடுகள் அத்துடன் அரசாங்கத்துக்கான கடன்களில் 50 மில்லியன் ஐ.அ.டொலர் தேறிய அதிகரிப்பு ஆகியவற்றை தொடர்ந்து வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகளினால் அரசுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் அதிகரித்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் கடனை பகுதியாகத் தீர்த்தமையால் கூட்டுத்தாபனங்களுக்கு வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவு வழங்கிய கடன் ரூ.2.5 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை ஆண்டின்போது வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் சிறிதளவு அதிகரிப்பு காணப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது (16.2 சதவீதம்) 2002 இல் வர்த்தக வங்கிகளின் வைப்புக்களின் திரட்டல் குறைந்த வீதத்திலேயே (10.5 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இதற்கு வட்டி வீத வீழ்ச்சி, கேள்வி வைப்புக்கள் மீதான பற்று வரி விதிப்பு, வைப்புக்கள் மீதான வட்டி வருமானத்தில் பிடித்து வைத்தல் வரி, போன்ற வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகள் காரணமாக இருக்கக்கூடும். மேலும் முதலீடுகள் வங்கிகளிலிருந்து அரசாங்கப் பத்திரங்களுக்கு மாறியிருக்கக்கூடும். அத்துடன் முன்னேற்றமடைந்துள்ள அரசியல் ஸ்திரத்தன்மை, முதலீட்டாளர்களின் நம்பிக்கை போன்றவற்றின் காரணமாக பங்குச் சந்தையில் முதலீடுகள் அதிகரித்தன. வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன் ஆண்டின முன்னரைப்பகுதியில் மிதமாகவே வளர்ந்தது. ஆனால் படிப்படியான பொருளாதார மீட்சி காரணமாகவும் கடன் வழங்கும் வீதங்களின் தொடர்ந்த வீழ்ச்சி காரணமாகவும் ஆண்டிறுதியளவில் வேகமாக அதிகரித்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் மொத்தக் கடன் முற்பணத்துக்கான (உள்நாட்டு, வெளிநாட்டு வங்கிப் பிரிவுகள்) செயற்படாக் கடன் (மொத்த) விகிதம் 2001 இறுதியில் 15.3 சதவீதமாக இருந்தது. 2002 இன் இறுதியில் மீண்டும் 15.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

## வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் பொறுப்புக்களின் அமைப்பு

### உள்நாட்டு வங்கித் தொழிற் பிரிவுகள்

வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் மொத்த வளங்களில் வளர்ச்சி முன்னைய ஆண்டை விடக் குறைவாகவே இருந்தது. 2001 ஆம் ஆண்டின் அதிகரிப்பான ரூபா 63.5 பில்லியனுடன் (9.4 சதவீதம்) ஒப்பிடுகையில் 2002 இல் மொத்த வளங்கள் ரூபா 46.9 பில்லியன் (6.3 சதவீதம்) ரூபாவால் அதிகரித்து இருந்தன. சொத்துக்கள் பக்கத்தில் இது மொத்தக் கடன், முற்பணங்கள் வளர்ச்சியின் மெதுவான

போக்கு, மத்திய வங்கியிலிருந்து வருமதி, வெளிநாட்டு சொத்துக்களை கையேற்றல் ஆகியவற்றில் பிரதிபலிக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டின் 6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கடன்கள் மேலதிகப் பற்றுக்கள், வர்த்தக உண்டியல்கள் கொள்வனவவு உட்பட்ட மொத்தக் கடன் முற்பணங்கள் 2002 இல் 1.5 சதவீதத்தால் அதிகரித்தன. இதன் விளைவாக 2001 இல் 34 சதவீதமாக இருந்த சொத்துக்கள் வளர்ச்சிக்கான மொத்தக் கடன் முற்பணங்களின் வளர்ச்சி பங்களிப்பு 2002 இல் 12 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 2002 இல் கடன்கள், முற்பணங்களின் வளர்ச்சி மெதுவாக இருந்தமைக்கு அரசாங்கம் அரச வங்கிகளுக்கான மேலதிகப் பற்றுப் பொறுப்புக்களை குறைத்து அவற்றை சந்தை அடிப்படையிலான கருவிகளால் (அதாவது திறைசேரி முறிகள் உண்டியல்கள்) பதிலீடு செய்ததன் விளைவாக ஏற்பட்ட மேலதிகப் பற்றுக்களின் வீழ்ச்சியே முற்றிலும் காரணமாகும். 2001 இன் இறுதியில் 38.1 பில்லியன் ரூபாவாக இருந்த அரசாங்கத்தின் மேலதிகப்பற்று நிலை 2002 இன் இறுதியில் 3.6 பில்லியன்ரூபாவாக வீழ்ச்சியடைந்தது. 2001 க்கு மேல் 2002 இல் பன்னாட்டு வர்த்தகம் மேம்பட்டதன் காரணமாக வர்த்தக உண்டியல்களில் இறக்குமதி உண்டியல்களின் உடைமைகளில் ஓரளவு அதிகரிப்பு காணப்பட்ட அதேவேளை ஏற்றுமதி உண்டியல்கள் ஏறத்தாழ 7.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இது 2001இல் 12 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

2001 இல் முதலீடுகளிலேற்பட்ட 98 சதவீத வளர்ச்சியைத் தொடர்ந்து அரச பிணை உடைமைகள் உட்பட வர்த்தக வங்கி முதலீடுகள் 2002 இல் வளர்ச்சியடைந்தன. (70 சதவீதம்). அரசாங்க மேலதிகப் பற்றுக்களை திறைசேரி முறி மற்றும் உண்டியல்களால் பிரதியிடல் மத்திய வங்கியின் அரசாங்கக் கடன் கருவிகளில் முதலீடு ஆகியவற்றின் பிரதிபலிப்பே ஆகும்.

ஆண்டின்போது வர்த்தக வங்கிகள் அவற்றின் திரவ நிலையை மேலும் மேம்படுத்தின. 2001 ஆம் ஆண்டினைப் போலவே 2002 இலும் மொத்த தேறிய சொத்துக்கள் 18 சதவீதத்தால் அதிகரித்தன. இது

**அட்டவணை 10.7**
**வர்த்தக வங்கிகளின் தெரிந்தெடுக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் (அ)**

| விடயம் | மாற்றம் | | | |
|---|---|---|---|---|
| | 2001 திசெம்/2000 திசெம் | | 2002 திசெம்பர் / 2001 திசெம்பர் | |
| | தொகை (ரூ.மில்.) | சதவீதம் | தொகை (ரூ.மில்.) | சதவீதம் |
| **சொத்துக்களின் வகை** | | | | |
| 1. திரவச் சொத்துக்கள் | 30,789 | 17.8 | 36,336 | 17.8 |
| கையிலுள்ள பணம் | 356 | 3.3 | 1,991 | 18.1 |
| மத்திய வங்கியிலிருந்து வரவேண்டியவை | 9,862 | 34.2 | 1,483 | 3.8 |
| கையிலுள்ள வெளிநாட்டுநாணயம் | 10,926 | 12.3 | 3,455 | 3.5 |
| திறைசேரி உண்டியல்கள் | 2,292 | 31.0 | 16,226 | 167.4 |
| திறைசேரி முறிகள் (ஆ) | 11,876 | 164.0 | 13,805 | 72.2 |
| வர்த்தக உண்டியல்கள் | (4,522) | (15.1) | (624) | (2.4) |
| 2. முதலீடு | 29,749 | 97.9 | 41,792 | 69.5 |
| திறைசேரி உண்டியல்கள் | 2,292 | 31.0 | 16,226 | 167.4 |
| ஏனைய அரச பிணைகள் | 16,161 | 220.4 | 23,069 | 98.2 |
| ஏனைய முதலீடுகள் | 11,295 | 72.2 | 2,497 | 9.3 |
| 3. மொத்தக் கடன்களும் முற்பணங்களும் | 21,573 | 6.0 | 5,690 | 1.5 |
| கடன்கள் | 6,048 | 2.9 | 34,281 | 16.1 |
| மேலதிகப் பற்றுக்கள் | 20,047 | 16.8 | (27,968) | (20.0) |
| வர்த்தக உண்டியல்கள் | (4,522) | (15.1) | (624) | (2.4) |
| 4. நிலையான மற்றும் ஏனைய சொத்துக்கள் | (2,720) | (2.3) | 1,901 | 1.7 |
| **பொறுப்புக்களின் வகை** | | | | |
| 1. மூலதனக் கணக்குகள் | (7,288) | (14.1) | 7,250 | 16.3 |
| 2. மொத்த வைப்புக்கள் | 73,155 | 16.4 | 54,407 | 10.5 |
| கேள்வி வைப்புக்கள் | 13,931 | 19.8 | (3,997) | (4.7) |
| தவணை சேமிப்பு வைப்புக்கள் | 59,224 | 15.8 | 58,404 | 13.4 |
| 3. கடன்பாடுகள் | (9,864) | (13.6) | (18,986) | (30.3) |
| உள்நாட்டு கடன்பாடுகள் | (8,828) | (13.2) | (16,896) | (29.2) |
| வெளிநாட்டு கடன்பாடுகள் | (1,036) | (17.4) | (2,090) | (42.5) |
| 4. ஏனைய பொறுப்புக்கள் | 7,470 | 6.9 | 4,199 | 3.6 |
| **மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள்** | **63,474** | **9.4** | **46,870** | **6.3** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகளை மட்டுமே உள்ளடக்கும்.
(ஆ) 1998 மே 18இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் திறைசேரி முறிகள் வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்களின் ஓர் பகுதியாகக் கருதப்பட்டது.

வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்களையும் மத்திய வங்கியிலிருந்து வரவேண்டிய மீதியின் வீழ்ச்சியையும் விஞ்சிய திறைசேரி உண்டியல்கள் பிணைகளில் உடைமை, கையிலுள்ள காசு ஆகியவற்றின் பிரதிபலிப்பே ஆகும். மொத்தத் திரவச் சொத்துக்கள், மொத்தச் சொத்துக்களுக்கிடையேயுள்ள விகிதம் 2001 இல் 27 சதவீதமாக இருந்து 2002 இல் 31 சதவீதமாக உயர்ந்தது. ஒப்பீட்டளவில் 2001 இன் இறுதியில் ஏறத்தாழ 1 பில்லியன் ரூபாவாக இருந்த திரவத் தன்மை மிகையானது 2002 இன் இறுதியில் ஏறத்தாழ 11 பில்லியன் ரூபாவாக அதிகரித்தது.

பொறுப்புக்களின் வகைகளுள், வைப்புப் பொறுப்புக்கள் 2001 இல் இருந்த 16.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2002 இல் 10.5 சதவீதமாக வளர்ச்சியடைந்தன. இம் மெதுவான வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் குறைந்த வட்டி வீதங்களுக்கு முதலீட்டாளர்களின் தாக்கம், வங்கிகளினால் வழங்கப்படும் கொடுகடனின் குறைந்த வளர்ச்சி ஆகியவை ஓரளவு காரணமாக இருக்கலாம். வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ஆண்டின் போது வீழ்ச்சியடைந்ததால் மொத்தப் பொறுப்புக்களின் வளர்ச்சி (6 சதவீதம்) வைப்பு பொறுப்புக்களின் வளர்ச்சியை விடக் குறைவாக இருந்தன. வைப்புக்களில் கேள்வி வைப்புக்களில் இருந்து தவணை, சேமிப்பு வைப்புக்களுக்கு அமைப்பு முறையான மாற்றம் ஏற்பட்டது. இதற்கு 2002 இல் அரசாங்கத்தினால் கேள்வி வைப்புக்கள் மீது விதிக்கப்பட்ட பற்று வரி பகுதியான காரணமாக இருக்கக்கூடும். 2001 இல் பதிவாகியிருந்த 19.8 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 2002 இல் கேள்வி வைப்புக்கள் 4.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. 2001 இன் 15.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் தவணை சேமிப்பு வைப்புக்கள் 13.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. 2001 இறுதியில் 70 சதவீதமாக இருந்த மொத்தப் பொறுப்புக்களின் விகிதமாக வைப்புப் பொறுப்புக்கள் 2002 இல் 73 சதவீதமாக அதிகரித்தன.

வங்கியின் திரவத்தன்மையில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டமை, அத்துடன் கொடுகடனுக்கான குறைந்த கேள்வி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் வங்கியிடைக் கடன்பாடுகள் 2002 இல் 29 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. 2001 இல் 13.2 சதவீத வீழ்ச்சி பதிவாகியிருந்தது. அதே போன்று வர்த்தக வங்கிகள் வெளிநாட்டு நிதியீட்டல்களுக்கு வெளிப்படுத்தப்படுதல் 2002 இல் 43 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. 2001 உடன் ஒப்பிடுகையில் இது 17 சதவீதமாக இருந்தது.

2002 இல் வங்கிகளின் இலாபம் அதிகரித்தமையாலும் சில வங்கிகள் தொகுதிக் கடன் முறிகளை வழங்கியதன் மூலம் நிதி சேகரித்தமையாலும் 2002 இல் முன்னைய ஆண்டுக்கு மாறாக மூலதனக் கணக்கின் மீதங்கள் 16 சதவீதத்தால் (ரூபா 7,250 மில்லியன்) முன்னேற்றமடைந்தன. 9 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு 2003இல் அதிகரிக்கப்படவிருக்கும் நிறைவேற்றப்பட்ட இடர் மூலதன விகிதத்துக்கு தயாராகும் வகையில் நடந்து கொண்டிருந்தன.

நாட்டின் அரசியல் ஸ்திரநிலை மேம்படுத்தப் பட்டதன் காரணமாக வெளிநாட்டு பணமனுப்புகை அதிகரிப்புக்களையும் பங்குச் சந்தையில் உள்வருகைகளையும் பிரதிபலிக்கும் வகையில் வங்கி முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து அதிகரித்தது. அத்துடன் அரசாங்கத்தினால் வெளிநாடுகளில் வைக்கப்பட்டிருந்த போர் இடர்நேர்வு வைப்புக்கள் மீண்டமை (ஐ.அ.டொலர் 50 மில்லியன்) வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களை மேம்படுத்த உதவியது. மத்திய வங்கி தேறிய அடிப்படையில் உத்தியோகபூர்வ ஒதுக்குப் பணத்தை மேம்படுத்தும் வகையில் ஐ.அ.டொலர் 177 மில்லியனைக் கொள்வனவு செய்தமையால் வர்த்தக வங்கிகளிலிருந்து மத்திய வங்கிக்கு வெளிநாட்டுச் சொத்துக்களில் சில மாற்றமடைந்தன. வர்த்தக வங்கிகள் (குறிப்பாக வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவு) 2002 யூனில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட டொலரில் குறித்துரைக்கப்பட்ட முறிகளில் (ஐ.அ.டொலர் 91.5 மில்லியன்) முதலீடு செய்தன. உண்ணாட்டு வங்கிப் பிரிவின் வெளிநாட்டுச் சொத்துக்கள், வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஆகிய இரண்டுமே அதிகரித்தன. பொறுப்புக்களின் வளர்ச்சி சொத்துக்களின் வளர்ச்சியை விட விரைவாக இருந்தது. 2001 இன் 10 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2002 இல் வெளிநாட்டுச் சொத்துக்கள் 3 சதவீதத்தால்அதிகரித்தன. 2002 ஆம் ஆண்டின் வளர்ச்சியானது வெளிநாட்டு நாணயக் கடன் (140 சதவீதம்) வெளிநாட்டு நாணய உடமைகள் (19 சதவீதம்) வெளிநாட்டு வங்கித் தொழிற் பிரிவுகளில் வைப்புக்கள்) (4 சதவீதம்) வெளிநாட்டு வங்கிகளில் வைப்புக்கள் (2 சதவீதம்) ஆகியவற்றால் பிரதிபலிக்கப்பட்டது. மாறாக கழிவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல் 2001 இன் 10 சதவீதவீழ்ச்சியுடன் ஒப்பிடும்போது 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

உள்நாட்டு வங்கிப் பிரிவுகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் 95 சதவீதமானவை வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஏற்றுமதியாளர்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் ஆகியவற்றிலிருந்தே பெறப்பட்டவையாகும். வெளிநாட்டு நாணயக் கணக்கின் நிலுவைகள் 2001 ஆம் ஆண்டின் 19 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2002 இல் 15 சதவீதமாக வளர்ச்சியடைந்திருந்தன.

### வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகள்

2001 ஆம் ஆண்டில் 25 ஆக இருந்த தொழிற்படும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை 2002 இல் இரு வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் நடவடிக்கைகள் இரு உள்நாட்டு வங்கிகளால் பொறுப்பேற்கப்பட்டமையால் 23 ஆக வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு நாணய வங்கித்தொழில்

பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் ஐ.அ.டொலர் 129 மில்லியனால் (7 சதவீதம்) 2002 ஆம் ஆண்டில் 1,775 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. ஒப்பீட்டளவில் 2001 இல் மொத்த மூலவளங்கள் ஐ.அ.டொலர் 314 மில்லியன் (20 சதவீதம்) அதிகரித்தன. 2002 ஆம் ஆண்டின் வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுகளின் மொத்த மூலவளங்களில் வீழ்ச்சி ஆண்டின் போது வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் பிரிவுகளின் வெளிநாட்டு வெளிப்படுத்தல்களின் குறைவினால் பிரதிபலிக்கப்பட்டன. வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் பிரிவுகளின் மூலவளங்களில் கிட்டத்தட்ட 54 சதவீதமானவை உள்நாட்டு வங்கித் தொழிற் பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்களினாலும் (623 மில்லியன் ஐ.அ.டொலர்) முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட வைப்புக் களினூடாகவும் (343 மில்லியன் ஐ.அ.டொலர்) பெற ப்பட்டவையாகும். 2002 இல் இலங்கையரல்லாதோரின் மூலங்களிலிருந்தான மூலவளங்கள் மொத்த மூலவளங்களின் (ஐ.அ.டொலர் 330 மில்லியன்) ஏற க்குறைய 19 சதவீதத்திற்கு வகை கூறின. 2001 இல் மொத்த மூலவளங்கள் 27 சதவீதமாக (519 மில்லியன் ஐ.அ.டொலர்) இருந்தன.

முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளுக்கான கடன்கள், முற்பணங்கள் அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் அத்துடன் வதிவற்றோர் தொழில் முயற்சிகளுக்கான முதலீடு ஆகியனவே வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவின் நிதியங்கள் பயன்படுத்தப்பட்ட முக்கிய வரப்பெல்லைகளாகக் காணப்பட்டன. முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் ஐ.அ.டொலர் 702 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 770 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது. வெளிநாட்டு வங்கித் தொழிற் பிரிவுகள் 2002 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 50 மில்லியன் தேறிய தொகையொன்றை அரசுக்கு கடனாக வழங்கியிருந்தது. 2002 நவம்பரில் அரசு ஐ.அ.டொலர் 100 மில்லியன் தொகையை புதிய கடனாகப் பெற்றது. அதேவேளை 2001 நவம்பரில் பெற்ற ஐ.அ.டொலர் 50 மில்லியன் கடனை மீளச் செலுத்தியது. 2002 யூலை மற்றும் ஒத்தோபர் மாதங்களில் தீர்க்கப்பட வேண்டியிருந்த ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 100 மில்லியனாக இருந்த வேறு இரு கடன்கள் குறைந்த வட்டியில் மேலும் 3 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டன. வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவு 2002 யூன் மாதம் 41 மில்லியன் ஐ.அ.டொலரை அரசினால் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்ததுடன் 2002 ஆம் வருட இறுதியில் வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற்பிரிவுகளில் இலங்கை அபிவிருத்தி முறிகளின் உடமைகளின் மொத்த வெளிநின்ற தொகை 106 மில்லியன் ஐ.அ.டொலராக இருந்தது. அதேவேளை ஆண்டின்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தமது கடனில் ஒரு பகுதியைத் தீர்த்தமையால் அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கடன் 37 மில்லியன் ஐ.அ.டொலரால் வீழ்ச்சியடைந்தது.

### வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு பிரிவுகளினது நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்

வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள் பொறுப்புக்களின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் வகையில் ஆண்டின் போது வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கக்கூடிய மூலவளங்கள், 2001 உடன் ஒப்பிடும்போது குறைந்த அளவிலாக இருப்பினும் அதிகரிக்கப்பட்டன. 2001 ஆம் ஆண்டிலிருந்த 70 சதவீத (45, 432 மில்லியன் ரூபா) வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கக்கூடியதாக இருந்த மொத்தத் தேறிய வளங்கள் 63 சதவீதத்தால் (28,778 மில்லியன் ரூபா) வளர்ச்சியடைந்திருந்தன. தேறிய அடிப்படையில் பார்க்கும்போது வெளிநாட்டுத்துறை, உள்நாட்டுத் தனியார் துறை அத்துடன் மூலதன மற்றும் ஒதுக்குகள் ஆகியவை உள்நாட்டு வங்கித் தொழிற்பிரிவின் பிரதான நிதி மூலங்களாக (அண்ணளவாக மொத்தத்தின் 98 சதவீதம்) காணப்பட்ட வேளையில் பிற வங்கிகள் அரசுக்கும் அரச கூட்டுத் தாபனத்துக்குமான கடன்கள் அத்துடன் மத்திய வங்கியுடனான வைப்புக்கள் ஆகியனவே நிதியங்களின் பயன்பாட்டின் முக்கிய விடயங்களாக இருந்தன.

2002 ஆம் ஆண்டில் தேறிய அடிப்படையில் உள்நாட்டு வங்கித் தொழிற் பிரிவுகளின் நிதியங்களில் மிகப் பெரும்பங்காக விளங்கிய வெளிநாட்டு நாணய வைப்புக்களின் விரிவாக்கத்தையும் பிரதிபலித்தன. வங்கியின் மொத்த மூலவளங்களுக்கு வெளிநாட்டு நாணய மூலவளங்களின் பங்களிப்பு ஏறத்தாழ 39 சதவீதமாக இருந்தது. 2001 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் மொத்த மூலவளங்களின் 13 சதவீதம் இம் மூலங்களிலிருந்தே வழங்கப்பட்டன. இர ண்டாவதாக மொத்த மூலவளங்களில் ஏறத்தாழ 33 சதவீத பங்களிப்பை செய்வதன் மூலம் வர்த்தக வங்கிகளின் பிற சொத்துக்களும் பொறுப்புக்களும் இர ண்டாவது மிகப் பெரிய நிதி மூலமாக விளங்கியது. வங்கிகளின் அதிகரிக்கப்பட்ட மூலதனம் அத்துடன் ஒதுக்குகளில் இது குறிப்பாகப் பிரதிபலிக்கப்பட்டது.

அதேவேளை, ஆண்டின் போது வைப்புத் தளங்களின் விரிவாக்கலைப் பிரதிபலிக்கும் வகையில் உள்நாட்டு வங்கிப் பிரிவின் மூலவளங்களின் ஏறத்தாழ 25 சதவீதத்திற்கு தனியார் துறை பங்களிப்பு செய்தது.

தேறிய அடிப்படையில் வர்த்தக வங்கிகளின் மேம்படுத்தப்பட்ட திரவத் தன்மை மிகையை பிரதிபலிக்கும் வகையில் வர்த்தக வங்கிகளின் ஏறத்தாழ 60 சதவீத மூலவளங்களை வர்த்தக வங்கிகளின் வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கல் பெற்றுக் கொண்டது. அதே வேளை 2001 இன் மூலவளங்களின் அதிகரிப்பில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட 75 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2002 இல் பிரதானமாக அரச பிணைகளூடாக அரசாங்கம் உள்நாட்டு வங்கித்தொழிற் பிரிவுகளின் மூலவளங்களில் ஏறத்தாழ 18 சதவீதத்தை ஈர்த்துக் கொண்டது.

### அட்டவணை 10.8
### வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் 2001- 2002(அ)

ரூ.மில்லியன்

| வகை | மாற்றம் ( ஆ ) 2001 மூலங்கள் | 2001 பயன் படுத்துநர் | 2002 மூலங்கள் | 2002 பயன் படுத்துநர் |
|---|---|---|---|---|
| **1. அரசதுறை** | | **34,139** | | **5,169** |
| அரச பிணைகளின் உடைமைகள் | | 18,453 | | 39,296 |
| வைப்புக்கள் | 13,150 | | | 11,796 |
| இறக்குமதி உண்டியல்கள் | 2,479 | | | 173 |
| குறுங்காலக் கொடுகடன் | | 12,393 | 11,623 | |
| மேலதிகப் பற்றுக்கள் | | 18,920 | 34,472 | |
| **2. மத்திய வங்கி** | | **11,293** | | **3,426** |
| கடன்பாடுகள் | | 1,075 | 48 | |
| ஒதுக்குகள் | | 9,862 | | 1,483 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் | | | | |
| கையிலுள்ள பணம் | | 356 | | 1,991 |
| **3. அரச கூட்டுத்தாபனங்கள்** | **1,603** | | | **2,815** |
| வைப்புக்கள் | | 2,449 | 2,261 | |
| முற்பணங்கள் | 4,052 | | | 5,076 |
| **4. கூட்டுறவுகள்** | **378** | | **675** | |
| வைப்புக்கள் | 287 | | 447 | |
| முற்பணங்கள் | 91 | | 228 | |
| **5. ஏனைய உள்நாட்டுத் தனியார்துறை** | **25,726** | | **7,234** | |
| வைப்புக்கள் (இ) | 45,342 | | 47,195 | |
| உள்நாட்டு உண்டியல்கள் | 290 | | | 79 |
| இறக்குமதி உண்டியல்கள் | 922 | | 521 | |
| மேலதிகப் பற்றுக்கள் | | 1,314 | | 4,393 |
| கடன்கள் | | 16,868 | | 34,390 |
| பிணைகளிலும் முறிகளிலுமான முதலீடு | | 4,295 | | 497 |
| தொகுதிக் கடன்கள் | 1,650 | | | 1,123 |
| **6. வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள்** | **8,985** | | | **17,367** |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை | 18,508 | | | 1,576 |
| உள்நாட்டு வங்கிகளுடனான வைப்புக்களும் கடன்பாடுகளும் | | 9,523 | | 15,791 |
| **7. வெளிநாட்டுத் துறை** | **5,829** | | **11,333** | |
| கடன்பாடுகள் | | 1,036 | | 2,090 |
| வைப்புக்கள் | 16,939 | | 16,284 | |
| வெளிநாட்டு நிலுவைகள் ஏற்றுமதி உண்டியல்களுட்பட | | 10,075 | | 2,860 |
| **8. ஏனைய சொத்துக்களும் ஏனைய பொறுப்புக்களும்** | **2,911** | | **9,535** | |
| மூலதனமும் ஒதுக்குகளும் | | 7,288 | 7,250 | |
| நிலையான சொத்துக்கள் | | 1,709 | | 1,192 |
| ஏனைய சொத்துக்கள் | 4,429 | | | 709 |
| ஏனைய பொறுப்புக்கள் | 7,478 | | 4,187 | |
| **மொத்தத் தேறிய மூலங்கள்/ பயன்படுத்துநர்** | **45,432** | **45,432** | **28,778** | **28,778** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளின் தொழிற்பாடுகளை மட்டுமே உள்ளடக்கும்.

(ஆ) தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறைக்குமான தேறிய மூலங்களை அல்லது தேறிய பயன்படுத்துனரை அவை பொருந்துமிடங்களைப் பொறுத்துக் குறிக்கின்றன.

(இ) சிறப்புச் சேமிப்புத் திட்டத்தின் கீழ் இரு அரச வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடக்கும்.

### வர்த்தக வங்கிகளின் கடன்களும் முற்பணங்களும்[1]

2002 செத்தெம்பரில் முடிவடையும் 12 மாதங்களுக்கான வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழிற் பிரிவின் கடன்கள், முற்பணங்கள் மீதான காலாண்டு அளவீடு அரச சார்பற்ற துறையினருக்கு (அரச கூட்டுத்தாபனங்கள், தனியார் துறை) வழங்கப்பட்ட கொடுகடன் மீதான வளர்ச்சியைக் (8.1 சதவீதம்) காட்டியது. இவ்வளர்ச்சி வீதம் 2002 யூனில் முடிவடைந்த 12 மாதங்களுக்கு பதிவு செய்யப்பட்ட வளர்ச்சி வீதத்தை விட உயர்வாகவும் (4.4 சதவீதம்) ஆனால் 2001 செத்தெம்பரில் முடிவடைந்த 12 மாதங்களின் வளர்ச்சி வீதத்தைக் காட்டிலும் (9.9 சதவீதம்) குறைவாகவும் இருந்தது. உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளின் படிப்படியான மீட்சியுடன் 2002 யூன் மாதத்திலிருந்து தனியார்துறைக்கான கொடுகடன் துரிதப்படுத்தப்பட்டது அவதானிக்கப்பட்டது. 2002 இன் இரண்டாம் மூன்றாம் காலாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி முறையே 2.5 சதவீதம், 5.3 சதவீதத்தால் அதிகரித்தமையால் கொடுகடன் வளர்ச்சி முன்னேற்றம் பொருளாதார அபிவிருத்தியைப் பிரதிபலித்தது.

2001 செத்தெம்பரில் முடிவடைந்த 12 மாதங்களில் பதிவாகிய வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடும்போது 2002 செத்தெம்பர் இறுதியில் முடிவடைந்த 12 மாதங்களில் துறைகளினுள்ளே கைத்தொழில், விவசாயத்துறைகளில் வேகமான வளர்ச்சி பதிவாகியிருந்தது. உற்பத்தித் துறையில் புடவை, ஆடைகள், தோற் பொருட்களின் மீட்சி காரணமாக கைத்தொழில் துறைக்கான கொடுகடன் கூடிய வீதத்தில் வளர்ச்சியடைந்தது. முன்னேற்றமடைந்த காலநிலை காரணமாக உள்நாட்டு உற்பத்தி அதிகரித்ததுடன் 2001 செத்தெம்பர் இறுதியில் இருந்ததைவிட ஓரளவு அதிகமான வீதத்தில் விவசாயத்துறைக்கான கொடுகடனும் வளர்ச்சியடைந்தது.

2002 செத்தெம்பர் இறுதியில் முடிவடைந்த ஆண்டில் மொத்தக் கொடுகடனில் 10 சதவீதத்தைக் ஈர்த்துக்கொண்ட சேவைகள் துறை 30 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தும் சேவைகள் துறைக்கான கொடுகடன் வளர்ச்சி பிரதானமாக போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சுற்றுலா கப்பல், வான் பயணம் ஆகியவற்றில் காணப்பட்ட முன்னேற்றத்தால் ஏற்பட்டது. 2002 இரண்டாம், மூன்றாம் காலாண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பதிவாகிய முறையே 3.9 சதவீதம் 8.0 சதவீத வளர்ச்சியிலும் சேவைகளின் வளர்சசி காணப்பட்டது.

ஒவ்வொன்றும் முறையே 14 சதவீதம், 12 சதவீத கொடுகடனைக் ஈர்த்துக் கொண்ட வீடமைப்பு, சொத்து அபிவிருத்தி, அத்துடன் நுகர்வு வசதிகள் முறையே 14 சதவீதமாகவும் 16 சதவீதமாகவும் வளர்ச்சியடைந்தன. வீடமைப்பு, சொத்து அபிவிருத்திக்கான கொடுகடன் வளர்ச்சிக்கு சொந்த வீடமைப்பு காணி அபிவிருத்தி நடவடிக்கைகளின் மேம்பாடு காரணமாகும்.

1. 2002 செத்தெம்பர் இறுதியிலான வர்த்தக வங்கிகளின் கடன்களும், முற்பணங்களும் மீதான காலாண்டு அளவீட்டின் அடிப்படையாகக் கொண்டது.

அட்டவணை 10.9
வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் முற்பணங்களின் துறைரீதியான பரம்பல் (அ)

| வகை | செத். இறுதி 2001 ரூ.பில். | செத். இறுதி 2002 ரூ.பில். | மொத்தத்தின் % ஆக செத். 2002 | வளர்ச்சி வீதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | செத். 2001 | செத். 2002 |
| வர்த்தகம் | 135.3 | 140.1 | 39.1 | 6.1 | 3.6 |
| ஏற்றுமதிகள் | 33.1 | 35.8 | 10.0 | 8.2 | 8.2 |
| இறக்குமதிகள் | 42.2 | 46.3 | 12.9 | -9.6 | 9.8 |
| நிதியியல் | 11.5 | 10.5 | 2.9 | -11.5 | -9.0 |
| வேளாண்மை | 15.5 | 16.5 | 4.6 | 1.1 | 6.7 |
| கைத்தொழில் (ஆ) | 33.3 | 37.0 | 10.3 | -3.0 | 11.1 |
| சுற்றுலா | 4.4 | 4.7 | 1.3 | 7.3 | 6.2 |
| வீடமைப்பு | 45.2 | 51.3 | 14.3 | 12.7 | 13.6 |
| கட்டடவாக்கம் | 37.9 | 43.8 | 12.2 | 18.6 | 15.7 |
| பணிகள் | 26.3 | 34.2 | 9.5 | 43.7 | 29.7 |
| ஏனையவை | 21.8 | 20.1 | 5.6 | 30.5 | -7.8 |
| மொத்தம் | 331.2 | 358.1 | 100.0 | 9.9 | 8.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) முற்பணங்களானது கடன்கள், மேலதிகப் பற்றுக்கள், கழிவிடப்பட்ட உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கி சேகரிப்பிலுள்ள காசு விடையங்களை தவிர்க்கின்றது.
(ஆ) பொறியியல், கட்டட வர்த்தகம், சுரங்கமகழ்தல் மற்றும் மீன்பிடி என்பனவற்றுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்குகின்றது.

முன்னேற்றமடைந்த அரசியல் சூழ்நிலைகளைத் தொடர்ந்து உல்லாசப் பயணிகளின் வருகையில் படிப்படியான மீட்சி ஏற்பட்டதனைப் பிரதிபலிக்கும் வகையில் 2002 செத்தெம்பர் இறுதியில் சுற்றுலாத் துறைக்கான கொடுகடன் 6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பிரதானமாக பிற நிதிச் சேவைகளுக்கான கொடுகடனில் வீழ்ச்சி ஏற்பட்டதால் 2002 செத்தெம்பர் இறுதியில் நிதித்துறைக்கான கொடுகடன் வளர்ச்சி 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

முதிர்ச்சிப் போக்கின் நியதிகளின்படி வர்த்தக வங்கிகளுக்கான மொத்தக் கொடுகடனில் 61 சதவீதத்துக்கு குறுகிய காலக் கொடுகடன் (ஒரு வருடத்திற்குக் குறைவான) வகைகூறிய அதே வேளை நடுத்தரகால, (2-5 வருடங்கள்) நீண்டகால (5 வருடங்களுக்கு மேற்பட்ட) கொடுகடன்கள் முறையே 22 சதவீதத்துக்கும், 17 சதவீதத்துக்கும் வகை கூறின.

வெளிநின்ற மொத்தக் கொடுகடனில் 2001 செத்தெம்பர் இறுதியில் 44 சதவீதமாக இருந்த 10 - 20 சதவீத வட்டி வீச்சில் வழங்கப்பட்ட கொடுகடனின் பங்கு 2002 செத்தெம்பர் இறுதியில் 54 சதவீதமாக அதிகரித்தது. 2001 செத்தெம்பர் இறுதியில் 26 சதவீதமாக இருந்த 21-25 சதவீத வட்டி வீச்சில் வழங்கப்பட்ட கொடுகடனின் பங்கு 2002 செத்தெம்பர் இறுதியில் 18 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதேவேளை 2001 செத்தெம்பர் இறுதியில் 19 சதவீதமாக இருந்த 25 சதவீத வட்டி வீதத்துக்கு மேற்பட்ட கொடுகடனின் பங்கு 2002 செத்தெம்பர் இறுதியளவில் 16 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வெளிநின்ற கொடுகடன் வட்டிவீத அமைப்பின் வேறுபாடு 2002 இன் இரண்டாம் காலாண்டிலிருந்து வந்த வட்டிவீத வீழ்ச்சிக்கு இசைவாக உள்ளது. நிறைவேற்றப்பட்ட சராசரி கடன் வழங்கல் வீதம் 2001 செத்தெம்பர் இறுதியில் 19.8 சதவீதத்திலிருந்து 2002 செத்தெம்பர் இறுதியில் 18.3 சதவீதமாக வீழ்ச்சி அடைந்தது.

## 10.6 மத்திய வங்கித் தொழில்

2002 இல் மத்திய வங்கித் தொழிற்பாடுகள் சந்தைக்குப் போதுமான திரவத்தன்மை வழங்குவதன் மூலம் கேள்விகளால் தூண்டப்பட்ட பணவீக்க அழுத்தங்களைத் தவிர்த்து, பண உறுதிப்பாட்டையும் வெளிநாட்டு நாணயச் சந்தையையும் வலுப்படுத்துவதையும், அலுவல்சார் ஒதுக்குகளை கட்டியெழுப்புவதையும் கருத்தாகக் கொண்டிருந்தது. ஆண்டு முழுதும் வெளிநாட்டு நாணயச் சந்தை ஸ்திரமாக இருந்தமையால் சந்தையிலிருந்து வெளிநாட்டு நாணயங்களைக் கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கிக்கு இயலுமாக இருந்தது. அத்துடன் அரசு வெளிநாட்டுக் கடன்கள், ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குதல் மூலம் பெற்ற வெளிநாட்டு நாணயப் பெறுகைகளை வங்கிக்கு விற்பனை செய்தது. இவ்வெளிநாட்டு நாணயக் கொள்வனவுகள் சந்தையில் ரூபாயின் திரவத் தன்மையை அதிகரிக்கும் அதேவேளை அலுவல் சார் ஒதுக்குக்களை கட்டியெழுப்புவதற்கும் உதவியது. மத்திய வங்கியின் திறந்த சந்தை நடவடிக்கைகள் மேலதிக ரூபா திரவத்தன்மையை இல்லாதொழித்ததுடன் தொடர்ந்து அரச பத்திரங்களின் உடைமை மத்திய வங்கியிலிருந்து வர்த்தக வங்கிகளுக்கு நகர்ந்தது. ஆண்டின்போது துணைநில் ஒழுங்கு வசதிகளின் மிகுதித்தொகை கிடைக்கப் பெற்றமையால் வங்கியின் மொத்த அலுவல்சார் ஒழுங்குகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

2001 இலிருந்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு மத்தியவங்கி சர்வதேச கணக்கீட்டு நியதிகளைப் பின்பற்றியது. இதன் விளைவாக அறிக்கையிடும் அமைப்பு, மதிப்பீட்டு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முழுமொத்த பெறுமதியும் பாதிப்படைந்தது. சர்வதேச கணக்கீட்டு நியதிகளின் கீழ் காசு அடிப்படையான கணக்கீட்டிலிருந்து செலுத்தவேண்டிய அடிப்படையான கணக்கீடாக மாறியது. இவ்வாறான வழமையான கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக மொத்தச் சொத்துக்கள் பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு மேலதிகமாக "வரலாற்று ஆகுசெலவு" மதிப்பீட்டு முறைமைக்கு மாறாக "சந்தைக்கு நிதியிடல்" மதிப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டதால் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்களில் சில மாற்றங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும் இம் மாற்றங்கள் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள், தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் உள்ளடக்கத்தில் மட்டுமே மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாகையால் மத்திய வங்கியின் ஒதுக்குப் பணத்தை (தளப் பணத்தை) பாதிக்கவில்லை.

### மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் கட்டமைப்பு

2002 இன் போது மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்களும் பொறுப்புக்களுக்கும் (பன்னாட்டு கணக்கீட்டு நியதிகளின் அடிப்படையில்) கிட்டத்தட்ட 3 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது. சொத்துக்களின் பக்கத்தில் அதிகரிப்பானது வெளிநாட்டுச்

சொத்துக்களில் முற்றிலும் பிரதிபலித்து உள்நாட்டு சொத்துக்களின் வீழ்ச்சியை பெருமளவு எதிரீடு செய்தது. வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பு சர்வதேச நாணய நிதியத்தின் (சி.எ.உ. 97 மில்லியன்) துணைநில் உடன்படிக்கை வசதியிலிருந்து பெறப்பட்ட மீதிக் கொடுப்பனவின் பெறுகைகள், மத்திய வங்கியின் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழான நட்டஈட்டுக்கென உலக வங்கியிலிருந்து பெற்ற பெறுகைகள், வர்த்தக வங்கிகளிடமிருந்தான மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயக் கொள்வனவு அத்துடன் அரசின் வெளிநாட்டு நாணயப் பெறுகைகளை இலங்கை மத்திய வங்கிக்கு விற்பனை செய்தமை ஆகியவை துணைபுரிந்தன. 2002 இன் சென்மதி நிலுவை மிகையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு மத்திய வங்கியின் மொத்தத் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 39 சதவீதத்ததால் (33 பில்லியன் ரூபாய்) அதிகரித்தன.

மாறாக மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் 68 சதவீதத்தால் (19 பில்லியன் ரூபாய்) வீழ்ச்சியடைந்தன. 2002 திசெம்பர் இறுதியில் அரச பிணைகளின் உடைமைகள் ரூ.19.0 பில்லியனால் வீழ்ச்சியடைந்து. ரூ.40.1 பில்லியனாகியதே இதற்கான குறிப்பான காரணமாகும். அதேவேளை சுழற்சி முறை யிலான கொடுகடன் வசதியூடாக அரசுக்கு வழங்கப்பட்ட கடன்கள் முற்பணங்கள் 1.6 பில்லியன் ரூபாயால் அதிகரித்தமை, ஐந்தொகையிலிருந்து அரசுக்கான விசேட முற்பணம் 9.6 பில்லியன் ரூபா தவிர்க்கப்பட்டிருந்தமை (2002 ஒக்தோபரில் தீர்மானிக்கப்பட்ட) ஆகிய இணைந்த விளைவுகளால் அரசுக்கான கடன்கள், முற்பணக் கணக்கில் 8 பில்லியன் ரூபா வீழ்ச்சி ஏற்பட்டது.

பொறுப்புக்கள் பக்கத்தில் வங்கியின் மொத்த நாணய வழங்கல் ரூ.12.0 பில்லியனாக (15.3 சதவீதம்) விளங்கி நாணயத் தாள்களின் வழங்கலிலான 15.7 சதவீத அதிகரிப்பொன்றையும் நாணயக் குற்றிகளின் 6 சதவீத அதிகரிப்பையும் பிரதிபலித்தது. மத்திய வங்கியின் வைப்புப் பொறுப்புக்கள் குறிப்பாக 2002 இன் போது பன்னாட்டு நாணய நிதியம் துணைநில் ஒழுங்கு வசதிகளின் கீழான எடுப்பனவுகளை பன்னாட்டு அமைப்புக்களின் வைப்பில் இட்டமையினால் பொறுப்புக்கள் அதிகரித்தன. (11.0 சதவீதம்) அதேவேளை அதிகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்பு மீதான நியதிச் சட்ட ஒதுக்குகளின் தேவை அதிகரிப்பின் காரணமாக வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் அதிகரித்தன. (6 சதவீதம்). எவ்வாறாயினும் 2001 இறுதியில் ரூ.4.3 பில்லியனாக இருந்த மத்திய வங்கியுடனான அரசாங்கத்தின வைப்புக்கள் 4 பில்லியன் ரூபாவால் வீழ்ச்சியடைந்து 2002 இறுதியில் 201 மில்லியன் ரூபாவாகியது.

## கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் அபிவிருத்தி

கொடுப்பனவு முறைகளது செயல்திறனை அதிகரித்தல், நிதிமுறைமையின் உட்கட்டமைப்பினை தரமுயர்த்தி இடர்நேர்வினை குறிப்பாக முறையுடன் சார்ந்த இடர்நேர்வினை குறைத்து, நிதியியல் துறை உறுதிப்பாட்டினை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு மத்தி பல்வேறு நடவடிக்கைகளை 2002இல் மேற்கொண்டது. கொடுப்பனவு முறையின் மேற்பார்வையை வசதிப்படுத்துவதற்காக இலத்திரனியல் முறைகளில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு சட்ட அங்கீகாரத்தை வழங்கி அவற்றை நடைமுறைப்படுத்த உதவுதல், பத்திரங்களற்ற வடிவிலான பிணையங்களினூடாக கொடுப்பனவு கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்கான முறைமைகளை நிறுவித் தொழிற்படுத்துதல் என்பன தொடர்பில் நாணயவிதிச் சட்டத்திற்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. (சிறப்புக்குறிப்பு 6ஐ பார்க்கவும்) இலங்கை தன்னியக்க தீர்ப்பனவு நிலையத்தினை மாற்றீடு செய்த லங்கா கிளியர் (தனி) லிமிட்டெட்டிற்கு மத்திய வங்கி காசோலைத் தீர்ப்பனவுத் தொழிற்பாட்டை உரிமை மாற்றம் செய்தது. லங்கா கிளீயர் மத்திய வங்கியாலும், வர்த்தக வங்கிகளாலும் கூட்டாக உடைமை கொள்ளப்பட்டது. மத்திய வங்கி இக் கம்பனிகளின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்யும் பணியை மேற்கொள்கின்றது. அதேநேர மொத்த விற்பனவு முறைமை (RTGS) தொடர்பான ஆரம்ப கட்ட வேலைகள் நிறைவு செய்யப்பட்டன. இம் முறைமையானது கூடிய பெறுமதி கொண்ட மற்றும் முக்கியமான நிதி மாற்றங்களை செய்முறைப்படுத்தும். இம் முறைமை 2003இன் இறுதிக் காலாண்டிலிருந்து தொழிற்பட ஆரம்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இக் கருமங்களை கையாள்வதற்கென மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டு புதியதொரு தீர்மானம் ஒன்று உருவாக்கப்பட்டது.

முக்கியமாக கொடுப்பனவு முறைகளூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளின் அளவும் பெறுமதியும் அட்டவணை 10.10 இல் காட்டப்பட்டுள்ளன. ஒரு வங்கியிலிருந்து இன்னொரு வங்கிக்கு மத்திய வங்கியூடாக நிதியியல் மாற்றப்பட வகை செய்யும் காசோலை தீர்ப்பனவு மேற்பாடுகள் கொடுப்பனவு முறையின் முக்கிய தொழிற்பாட்டாளராக விளங்கியது. அளவு நியதிகளின் இரண்டாவது பெரிய முறையாக விளங்குவது இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை (SLIPS) இம்முறையானது பெறுமதி குறைந்த உயர் அளவு கொண்ட கொடுக்கல் வாங்கல்களை நேரடி அல்லாத கொடுப்பனவு முறையொன்றினூடாக கையாள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இலத்திரனியல்

அட்டவணை 10.10
பிரதான கொடுப்பனவு முறைகள்

| | 2001 | | 2002 | |
|---|---|---|---|---|
| | வாங்கல்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூ.மில்லியன் | வாங்கல்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூ.மில்லியன் |
| காசோலைத்தீர்ப்பனவு | 20,160 | 1,378 | 20,782 | 1,410 |
| சிலிப்ஸ் | 777 | 1,075 | 980 | 823 |
| ஏரிஎம்ஸ்/ ஈஎப்ரிபொஸ் | 15 | 51 | 31 | 97 |
| கடன் அட்டைகள் | 5,444 | 15 | 6,256 | 18 |
| இலத்திரனியல் ஊடகங்கள் (ஆ) | 321 | 169 | 157 | 90 |
| காசு/ தபாற்கட்டளைகள் | வி.கி | 9 | வி.கி | 9 |

மூலங்கள் : இலங்கை தன்னியக்கதீர்ப்பனவு நிலையம், தேசிய சேமிப்பு வங்கி வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

(ஆ) தொலைவங்கியியல், தொலைபேசி வங்கியியல், நடமாடும் வங்கியியல் இணைய வங்கிகள்

## அட்டவணை 10.11
## புதிய வர்த்தக வங்கியில் வசதிகள் - 2002

| வங்கி | வைப்புத்திட்டம் | கடன்திட்டம் | வேறு சேவைகள் |
|---|---|---|---|
| இலங்கை வங்கி | | 1."காந்தா ரண்திரிய" மகளிருக்கான சிறிய மற்றும் நுண்பாகக் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்திக் கடன்திட்டம்<br>2.தோட்டத்துறை சுயதொழில் சுழல்நிதிய கொடுகடன் திட்டம்- பெருந்தோட்டத் துறையில் வேலையற்ற தோட்டப்புற இளைஞர்களை மையமாகக் கருதி சுயதொழில் திட்டங்களை ஆரம்பிப் பதற்கான ஒரு கொடுகடன் திட்டம்<br>3.மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டம்- அரசதுறையிலுள்ள நிரந்தர ஊழியர் களுக்கு மோட்டார் சைக்கள்களை வாங்குவதற்கான ஒரு கொடுகடன் திட்டம்<br>4.துவிச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்வதற்கான ஒரு கொடுகடன் திட்டம்- விவசாயிகள் கடற்றொழி லாளர்கள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் துவிச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்வ தற்கான ஒரு கடன்திட்டம் | 21 தன்னியக்க கூற்றுப்பொறிகள் நிறுவப்பட்டன. |
| வ.ப இலங்கை கொமர்ஷல் வங்கி | ***"டொட் கொம் ஸ்பின்"***<br>சிறுவர்களுக்கான வைப்புத்திடடம் | 1. கைத்தொழில் உற்பத்தி மற்றும் சேவை நோக்குடைய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான ஆசிய அபிவிருத்தியின் நிதியுதவியுடனான ஒரு கடன் வரிசை.<br>2."திரிபலா சகனய" சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளருக்கான ஒரு கடன் திட்டம் | 1. 35 தன்னியக்க கூற்றுப்பொறிகள்<br>2. கொம்பாங் நேரடிஇணைய வங்கியல் சேவைகள்<br>2.முன்னுரிமை வங்கிச்சேவை- சொத்துப் பட்டியல் முகாமைத்துவம், கடன்அட்டை வசதிகளுக்கான உயர் எல்லைகளை பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல் போன்ற முதன்மைச் சேவைகளை வழங்குதல். |
| வ.ப டொய்ச் வங்கி | "இரட்டை நாணய வைப்பு" ஒரு வெளிநாட்டு நாணய வைப்புத்திட்டம். இதன் கீழ் ஒரு நிலையான காலத்திற்கு வாடிக்கையாளர் நிதியை வைப்புச் செய்வார். இது அதே வெளிநாட்டு நாணயத்திலோ அல்லது ஆரம்பக் கட்டத்தில் இணங்கப்பட்ட நாணயமாற்று வீதத்தில் இரண்டாவது வெளிநாட்டு நாணயத்தில் திருப்பிச் செலுத்தப்படும். | | இணைய வங்கிச் சேவை வசதிகள் ஆரம்பிக்கப்பட்டது. |
| வ.ப அட்டன் நசனல் வங்கி | வட்டிக் கூப்பன்களை தாங்கிவரும் நீண்டகால வைப்புச் சான்றிதழ | 1. "எச்.என்.பி. குழு நுகர்வோர் குத்தகை" 25 பேருக்கு மேற்பட்ட குழுக்களுக்கு நுகர்வோர் பாவனைப் பொருட்களை வாங்குவதற்கான ஒரு கடன்திட்டம்<br>2. "எச்.என்.பி பட்டதாரித்திட்டம்" கல்லூரிப் படிப்பு தொழில்சார் கல்வி மற்றும் தொழில் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஒரு கடன் பொதி<br>3."வாசி குத்தகை" வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒரு குத்தகைத் திட்டம்<br>4. "அந்நிய நாணய வீடமைப்புக்கடன்"-வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்கள் காணி வாங்கவோ, மற்றும் வீடு கட்டுதல், வீட்டின் தரத்தை உயர்த்துவதற்காக வழங்கப்படும் கடன்திட்டம்<br>5."தங்க முதலீட்டுக் கடன்"-தங்க சவரின்களை அல்லது தங்க நகைகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் கடன் திட்டம். | 1. 29 தன்னியக்க கூற்றுப்பொறிகள் நிறுவப்பட்டது.<br>2."கட்னா நெற்" இதன் மூலம் வாடிக்கையாளர்கள் வங்கியின் எந்தக் கிளைகளிலும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம்.<br>3. "சிரேஷ்ட பிரஜாவுரிமை திட்டம்"- 55 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுடையோர் வைத்திருக்கும் கணக்குகளுக்கு நன்மை வழங்கும் திட்டம் |
| வ.ப கொங்கொங் அன்ட் சங்காய் வங்கி | 18 வயதிற்குக் குறைந்த சிறுவர்களுக்கான பராயமடையாத சேமிப்புக்கணக்கு | தனிப்பட்ட பிரத்தியேக சுழல் கொடுகடன்- ஒவ்வொரு முறையும் மீள்விண்ணப்பம் செய்யாமல் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடியதான ஒரு மேலதிகப்பற்று வசதி | |
| என்.டி.பி வங்கி | சிறுவர் சேமிப்புக் கணக்கு | | 5 தன்னியக்க கூற்றுப்பொறிகள் நிறுவப்பட்டன. |
| வ.ப பான்ஏசியா வங்கி | ***"மணி பில்டர்"*** ஒரு சேமிப்பு மற்றும் கடன்திட்டம். இதன்கீழ் ஒரு வாடிக்கையாளர் குறிப்பிட்ட காலத்திற்கு குறிப்பிட்ட இலக்குத் தொகையை சேமிப்பதற்கு இணங்குவர். இதன்மூலம் கடன் ஒன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராவர். | | |
| மக்கள் வங்கி | | | 17தன்னியக்க கூற்றுப்பொறிகள் நிறுவப்பட்டன. |
| வ.ப சம்பத் வங்கி | ***"சம்பத் புரொபஷனல்"*** அங்கீகரிக்கப்பட்ட கம்பனிகளில் ரூபா 20,000 இனை ஆகக் குறைந்த மாத வருமானமாகப் பெறும் நிரந்தர ஊழியர்கள் வைத்திருக்கும் சேமிப்பு மற்றும் நடைமுறை வைப்புக்களுக்கு வழங்கப்படும் சேமிப்பு மற்றும் கடன் பொதி. | | 1.8 தன்னியக்க கூற்றுப்பொறிகள் நிறுவப்பட்டன.<br>2."பிளற்றினம் விசா கடன் அட்டை" விநியோகிக்கப்பட்டது.<br>3."அபிமானி விசுவாச அட்டை" விநியோகிக்கப்பட்டது. |
| வ.ப செலான் வங்கி | | "செலான் ஸ்மைல்" சிறிய மற்றும் நடுத்தர அளவு கொடுகடன் திட்டம் | 28 தன்னியக்க கூற்றுப்பொறிகள் நிறுவப்பட்டது. |
| யூனியன் வங்கி | | மாறும் மேலதிகப்பற்று வசதி | |

மூலம்: வர்த்தக வங்கிகள்

கொடுப்பனவுகள், கடன் அட்டைகள், கொடுப்பனவுக் கட்டளைகள் என்பன பிற முக்கிய கொடுப்பனவு முறைகளாகும். இம் முறைகளால் மாற்றம் செய்யப்படும் நிதிகளது அளவும், பெறுமதியும் அதிகரித்திருந்தாலும் பெரும்பகுதியான கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பாக குறைந்த பெறுமதியுடையவை இன்னமும் காசு மூலமே தீர்க்கப்படுகின்றன.

பயன்படுத்துனர்களிடையே நிதிகளின் பரிமாற்றத்திற்கு வகைசெய்யும் கொடுப்பனவு முறைகளது சிறப்பான செயலாற்றம் நிதியியல் சந்தைகளின் திறமையான செயற்பாட்டிற்கும், பொதுவான பொருளாதார செயலாற்றத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கவும் அவசியமானதாகும். திறன்மிக்க கொடுப்பனவு முறைகள் நிதிச்சந்தைகளை ஒன்றிணைக்க உதவுவதனூடாக நாணயக்கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்றன. எனினும் கொடுப்பனவு முறைகள் ஒரு துறையின் அல்லது ஒரு பயன்படுத்துனரின் பிரச்சனைகளை பிறதுறைகள் அல்லது பிற பயன்படுத்துநர்களுக்கு ஊடுகடத்தக்கூடும். எனவே மத்திய வங்கி கொடுப்பனவு முறைகளது வடிவமைப்பிலும், முகாமைத்துவத்திலும் நேரிடர் கட்டுப்பாட்டு பொறிமுறைகள் உள்ளடக்கப் பட்டிருப்பதனை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது.

## 10.7 வங்கித்தொழில் அபிவிருத்தி

நாட்டில் செயற்படும் உரிமம் பெற்ற வணிக வங்கிகளின் எண்ணிக்கை 2001இன் இறுதியில் 25ஆக இருந்து 2002இல் 23 ஆக குறைவடைந்தது. இரு வெளிநாட்டு வங்கிகளின் செயற்பாடுகள் இரு உள்நாட்டு தனியார் வங்கிகளால் கையேற்கப்பட்டதன் விளைவாகவே இக் குறைவு ஏற்பட்டது. ஹபிப் பாங் ஏ.ஜி.சூரிசின் இலங்கை தொழிற்பாடு அட்டன் நசனல் வங்கியினாலும், அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கியின் உள்நாட்டு செயற்பாடுகள் நேசன்ஸ் ரஸ்ட் வங்கியாலும் கையேற்கப்பட்டன. இவ்விரு கையேற்புக்களும் ஒத்தோபர் 2002இல் நிகழ்ந்தன. எனவே 2002இன் இறுதியில் 12 உள்நாட்டு வங்கிகளும், 11 வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளும் தொழிற்பட்டன. உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளது எண்ணிக்கை 2002 திசெம்பரில் பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் உரிமம் அதன் நிதி நிலைமை வகையற்ற நிலையை அடைந்ததனால் மத்திய வங்கியினால் இரத்துச்செய்யப்பட்டதனைத் தொடர்ந்து 13 ஆகக் குறைவடைந்தது.

### கிளை விரிவாக்கம்

வணிக வங்கிகளது கிளைகளது எண்ணிக்கை 2002இன் இறுதியிலிருந்த 1,130 இலிருந்து 2002இன் இறுதியில் 1,163 ஆக அதிகரித்தது. இவ் அதிகரிப்பு முழுவதும் உள்நாட்டு வங்கிகளிலேயே ஏற்பட்டது. உள்நாட்டு வங்கிகளது கிளைகள் 44 இனால் இவ்வாண்டில் அதிகரித்தன. இரு வெளிநாட்டு வங்கிகளது செயற்பாடுகள் உள்நாட்டு வங்கிகளுக்கு மாற்றப்பட்டதனால் வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் 11 இனால் குறைவடைந்தன. 2001இல் காணப்பட்ட போக்கைப் போன்றே, வங்கி அடர்த்தி அதாவது 10,000 ஆட்களுக்கான வணிக வங்கிகளின் கிளைகளது எண்ணிக்கை, 2001இல் இருந்த 0.60 இலிருந்து சிறிதளவு அதிகரித்து 2002இல் 0.61 ஆக உயர்ந்தது. பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் உரிமம் இரத்துச் செய்யப்பட்டதனால் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளது கிளைகளின் எண்ணிக்கை 2002இன் இறுதியில் 329 ஆகக் காணப்பட்டது. சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் கிளை வலையமைப்பின் பெரும்பகுதிக்கு தேசிய சேமிப்பு வங்கி (102 கிளைகள் பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் (188 கிளைகள்( என்பன வகை கூறுகின்றன.

### வங்கித்தொழில் வசதிகள்

போட்டித்தன்மை காரணமாக வணிக வங்கிகள் தமது தற்போதைய வங்கி உற்பத்திகளையும் வழங்கல் ஊடகங்களையும் தொடர்ச்சியாக புதுப்பித்தும், மேம்படுத்தியும் வந்துள்ளன. வாடிக்கையாளர்களை

**அட்டவணை 10.12**
வங்கிக் கிளைகளின் பரம்பல்

| வகை | 2000 | 2001 | 2002(அ) |
|---|---|---|---|
| 1. **உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்** | | | |
| i. **வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **26** | 25 | 23 |
| உள்நாட்டு வங்கிகள் | 10 | 11 | 11 |
| வெளிநாட்டு வங்கிகள் | 16 | 14 | 12 |
| ii. **வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை (ஆ)** | **1,096** | **1,130** | 1,163 |
| உள்நாட்டு வங்கிக் கிளைகள் | 1,051 | 1,084 | 1,128 |
| முதன்மைக் கிளைகள் | 931 | 951 | 974 |
| வேளாண்மைப் பணிநிலையக் கிளைகள் | 11 | 11 | 11 |
| கச்சேரிக் கிளைகள் | 23 | 23 | 23 |
| விரிவாக்க/கொடுப்பனவு அலுவலகங்கள் | 82 | 95 | 116 |
| கடல்கடந்த கிளைகள் | 4 | 4 | 4 |
| வெளிநாட்டு வங்கிக் கிளைகள்(இ) | 45 | 46 | 35 |
| அடகு வைக்கும் நிலையங்கள் | 188 | 188 | 188 |
| 2. **உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (ஈ)** | 165 | 194 | 204 |
| i. **உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் மொத்த எண்ணிக்கை** | **12** | 14 | 13 |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 6 | 6 | 6 |
| தேசிய சேமிப்பு வங்கி | 1 | 1 | 1 |
| நீண்டகால கடன்வழங்கும் நிறுவனங்கள் | 2 | 2 | 2 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 1 | 2 | 2 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 2 | 3 | 2 |
| ii. **உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை** | **315** | **328** | 329 |
| பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | 181 | 188 | 188 |
| தேசிய சேமிப்பு வங்கி | 100 | 101 | 102 |
| நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்கள் | 20 | 22 | 23 |
| வீடமைப்பு நிதி நிறுவனங்கள் | 3 | 5 | 5 |
| தனியார் சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கிகள் | 11 | 12 | 11 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) நகை அடகு பிடிக்கும் நிலையங்கள் நீங்கலாக தலைமை அலுவலகங்கள் உட்பட.
(இ) விரிவாக்க அலுவலகங்களையும் துணை அலுவலகங்களையும் உள்ளடக்கும்.
(ஈ) உரிமம்பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கியாகத் தொழிற்படுவதற்கு வங்கித் தொழிற் சட்டத்தின்கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள நிதியியல் நிறுவனங்களை உள்ளடக்குகின்றது.

**அட்டவணை 10.13**
**வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் அட்டைகள்**

| | 2001(அ) | 2002(ஆ) | %மாற்றம் |
|---|---|---|---|
| வழங்கப்பட்ட கொடுகடன் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை | 255,584 | 321,145 | 25.7 |
| உள்ளூர் | 57,154 | 69,437 | 21.5 |
| உலகளாவிய | 198,430 | 251,708 | 26.8 |
| ஆண்டு இறுதியில் வெளிநின்ற கொடுகடன் (ரூ.மில்) | 5,128 | 6,390 | 24.6 |
| உள்ளூர் | 483 | 618 | 28.0 |
| உலகளாவிய | 4,646 | 5,771 | 24.2 |
| வரவேண்டிய நிலுவை (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 12 | 10 | - |
| வரவேண்டிய முன்னைய நிலுவை (வெளிநின்ற கொடுகடனின் %ஆக) | 10 | 9 | - |
| வணிகர்களிடமிருந்தான தரகு (%) | 0.25-4.5 | 0.25-3.5 | - |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
மூலம்: இலங்கை மத்திய வங்கி

கவரவும் தொடர்ந்து வைத்திருப்பதற்குமான உபாயமாகவே இது மேற்கொள்ளப்படுகிறது. இணைய வங்கியியல் பிரத்தியேக வங்கியியல் மற்றும் தன்னியக்க கூற்று பொறிகள் போன்றவற்றினூடாக வழங்கல் ஊடகங்களை மேம்படுத்துவதுடன் பல வங்கிகள் புதிய வைப்பு மாற்று கடன் திட்டங்களையும் அறிமுகப்படுத்தின. பல வைப்புக் கருவிகள் வயது வராதோரை இலக்காகக் கொண்டிருந்தன. ஏனெனில் அவற்றுடன் தொடர்பான நிதிகள் வங்கிக்கு நீண்ட காலத்திற்கு கிடைக்கத்தக்கதாக இருக்கும். நாட்டில் வணிக வங்கிகளால் செயற்படுத்தப்படும் தன்னியக்க கூற்று பொறிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து 2001 இறுதியின் 477 இலிருந்து 2002இன் இறுதியில் 635 ஆக காணப்பட்டது. மொத்தமாக வழங்கப்பட்ட கடன் அட்டைகள் (இரத்தானவை நீங்கலாக) 2001இன் இறுதியில் காணப்பட்ட 255,584 இலிருந்து 2002இன் இறுதியில் 321,145 ஆகக் காணப்பட்டது. வழங்கப்பட்ட மொத்தக் கடன் அட்டைகளில் பெரும்பான்மையானவை (78 சதவீதம்) உள்ளூர் வெளியூர் கொடுக்கல் வாங்கல்களுக்கு ஏற்கப்படுகின்ற பன்னாட்டு அட்டைகளாகக் காணப்பட்டன.

## 10.8 இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்

1995 இன் 8ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை கொடுகடன் தகவல் பணியக சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் 2002 மே மாதம் அதன் பன்னிரண்டாவது ஆண்டுத் தொழிற்பாட்டினைப் பூர்த்தி செய்தது. கடன்வழங்கும் நிறுவனங்களின் கடன்பாட்டாளர்கள் மீதான கொடுகடன் தகவல்களைச் சேகரித்தல், பணியகத்தின் பங்குடமையாளர்களான கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு கொடுகடன் தகவல்களை வழங்குதல் ஆகியவையே பணியகத்தின் பிரதான பணிகளாகும். தற்போது உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகள் உரிமம் பெற்ற விசேட வங்கிகள், பதிவு பெற்ற நிதிக் கம்பனிகள், பதிவு பெற்ற குத்தகை நிறுவனங்கள், மத்திய வங்கி ஆகியோர் பணியகத்தின் பங்குடைமையாளர்களாவர். பணியகம் தற்போது 500,000 ரூபாவும் அதற்கு மேற்பட்ட தொகையுமான ஒழுங்கான முற்பணங்கள் மற்றும் 100,000 ரூபாவும் அதற்கு மேற்பட்டதுமான ஒழுங்கற்ற முற்பணங்கள் பற்றிய தகவல்களை சேகரித்து வருகின்றது.

பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியுடன் கொடுகடனுக்கான கேள்வி அதிகரிப்பையும் கடன் வழங்கும் நிறுவனங்களின் கண்டிப்பான கொடுகடன் மதிப்பீட்டினையும் பிரதிபலிக்கும் வகையில் ஒப்பீட்டளவில் 186, 200 ஆக இருந்த வழங்கப்பட்ட கொடுகடன் அறிக்கைகளின் எண்ணிக்கை ஆண்டின் போது 285,200 க்கு உயர்ந்தது. கொடுகடன் தகவல்களுக்கான அதிகரித்த கேள்வி 2001இன் ரூ.14 மில்லியனிலிருந்து இலாபத்தை ரூ.24 மில்லியனிற்கு அதிகரிப்பதற்கு பங்களிப்புச் செய்தது.

கொடுகடன் தரவுத் தளத்திலுள்ள முற்பணக் கணக்குகளின் எண்ணிக்கையின் மொத்தத்தொகை 139,500 ஆக இருந்தது. இவற்றுள் 88,000 ஒழுங்கான முற்பணங்கள் 51,500 ஒழுங்கற்ற முற்பணங்கள் (ஆறு மாதங்களுக்கு மேல் திருப்பிச் செலுத்தப்படாத முற்பணங்கள்) தரவுத் தளத்தில் பதிவு செய்யப்பட்ட ஒழுங்கற்ற திருப்பிச் செலுத்தப்படாத முற்பணங்களின் பெறுமதி ஏறத்தாழ 99 பில்லியன் ரூபாவாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏறத்தாழ 7 சதவீதமாகும். திருப்பிச் செலுத்தப்படாத மொத்த முற்பணங்கள் 74 சதவீதமானவற்றிற்கு கம்பனிகள் வகைகூறும் வேளையில் மிகுதிக்கு தனிப்பட்ட கடன்பாட்டாளர்கள் வகை கூறுவர். இவ்வொழுங்கற்ற முற்பணங்களின் அநேகமாக 90 சதவீதம் ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட முற்பணங்கள் என்பது குறிப்பிடத்தக்க மற்றுமொரு விடயமாகும்.

## 10.9 கிராமிய வங்கித்தொழிலும் கொடுகடனும் பொதுவான போக்குகளும் அபிவிருத்திகளும்

கிராமியத்துறை நிதியை அபிவிருத்தி செய்வது தொடர்பிலான பல முக்கிய கொள்கைத் தீர்மானங்கள் 2002இல் மேற்கொள்ளப்பட்டன. வடக்குக் கிழக்கில் நிலவிய அமைதிச் சூழலை பயன்படுத்தி வங்கிகளும் பிற நிதி நிறுவனங்களும் தமது கடன் திட்டங்களை இப் பிரதேசங்களின் கிராமிய பகுதிகளுக்கு விரிவுபடுத்த முயற்சிகளை மேற்கொண்டன.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் பரப்பினை விரிவுபடுத்தி முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவுக்கான கடனுக்கான உயர் எல்லை ரூ.2.7 மில்லியனிலிருந்து ரூ.5 மில்லியனாக அதிகரிக்கப்பட்டது. எனினும் உயர் எல்லையின் அதிகரிப்பைத் தொடர்ந்து இக் கடன்களுக்கான உத்தரவாதங்கள் கடன் வழங்கிய வங்கிகளின் ஆலோசனையுடன் மீளப்பெறப்பட்டன. இதற்குக் காரணம் வங்கிகள் இக் கடன்களின் மீளப்பெறும் இடர்நேர் குறைவானது என கருதியமையாகும்.

**சிறப்புக் குறிப்பு 19**

## முறிவடையும் வங்கிகளை பொது நிதியங்களின் மூலம் மீட்கப்பட வேண்டுமா?

சந்தைப் பொருளாதாரங்கள் பலவற்றின் நிதியியல் துறையில் வங்கிகள் அதி முக்கிய பங்கொன்றினை வகிப்பதோடு இந்தப் பொருளாதாரங்களின் செயற்திறன் மிக்க செயற்பாட்டுக்கும் முக்கியமானவையாகவும் உள்ளன. மக்களின் அன்றாட வாழ்க்கையுடனும் நடவடிக்கைகளுடனும் நெருங்கிய தொடர் பினை ஏற்படுத்தும் வகையில் தனிப்பட்ட ஆட்களுக்கும் வியாபாரங்களுக்கும் வங்கிகள் பலதரப்பட்ட பணிகளை வழங்குகின்றன. வங்கிகளின் பெருமளவு மரபு வழியான கருமம் யாதெனில் பலதரப்பட்ட வைப்புக்களின் வடிவில் பொதுமக்களிடமிருந்து சேமிப்புக்களைத் திரட்டுவதும் அந்த மூலவளங்களை பெருமளவு உற்பத்திப் பயன்பாட்டுக்கு வழிப்படுத்துவதுமாகும். நிறுவனங்கள் மற்றும் சந்தைகளில் பெரும்பாலானவை தமது அன்றாட நடவடிக்கைகளுக்காக வங்கிப் பணிகளில் தங்கியுள்ளன. கொடுப்பனவு முறை சுமுகமாக பணியாற்றுவதற்கு செயல்திறன் மிக்கதும் உறுதியானதுமான நிதியியல் துறையொன்று முக்கியமானதாவதோடு நாணயக் கொள்கையின் செயற்திறனுடன் கொண்டு நடாத்துவதற்கான முக்கிய கருவியாகவும் விளங்குகின்றது. இதற்கு மேலதிகமமாக வெளிநாட்டு வர்த்தக நிதியிடல், வெளிநாட்டு உண்டியல்களின் கொடுப்பனவு களுக்கான வழங்குதல், வெளிநாட்டு உள்நோக்கிய/ வெளிநோக்கிய பண அனுப்பல்களைக் கையாளுதல் போன்ற பணிகளையும் வங்கிகள் வழங்குவதோடு இவை நாடொன்றின் தேசிய எல்லைகளுக்கு அப்பாலும் வங்கிப் பணிகளை விரிவாக்குகின்றன. இந்தத் தொடர்புகளின் காரணமாக ஏனைய வாணிபங்கள் முறிவடைவதையும் போலன்றி வங்கித்தொழில் தொழிற்பாடுகளில் ஏற்படும் பாரிய தடங்கல்கள் பொதுமக்களை முழுமையாகவே பாதிப்பதோடு இதன் காரணமாக வங்கி முறிவுகள் ஏனைய தொழில் முயற்சிகளின் முறிவுகளிலிருந்து வேறுபட்டவையாக கருதப்படுகின்றன.

வங்கி முறிவடைதலென்பது வங்கியினால் தனது வைப்பாளர்களுக்கும் கடன் கொடுத்தோருக்குமான கடப்பாடுகளை எதிர்கொள்ள இயலாமல் வங்கித்தொழில் வாணிபத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நிலைமையொன்றாகும் (மிஸ்கின் 1997)[1]. வங்கியானது கடன் தீர்ப்பனவுத் தகைமையினை இழக்கும்போது அதாவது அதனது பங்கு மூலதனம் முழுவதும் காலியாகி அதனது தேறிய பெறுமதி நேர்க்கணிய நிலைமையை எய்தியதன் காரணமாக மேலாண்மையாளர்கள் வங்கித் தொழில் உரிமத்தினைக் கைமீட்புச் செய்யத் தீர்மானிக்கும் பட்சத்தில் அது வங்கி முறிவு என கருதப்படும்[2]. தனிப்பட்ட வங்கியொன்றினால் எதிர்கொள்ளப்படும் தொடர்பான பிரச்சினை என்னவெனில் திரவத் தன்மை அற்றுப் போவதாகும். அதாவது கேள்வியின் போது எந்த வகையிலும் பொறுப்புக்களை எதிர்கொள்ள இயலாதநிலைமையாகும். கடன் தீர்ப்பனவுத் தகைமையின்மையின் முதல் ஒன்றாக திரவத்தன்மையின்மை காணப்பட்ட போதிலும் திரவத்தன்மை யின்மையானது எல்லா நேரங்களிலும் கடன் தீர்ப்பனவுத் தகைமை யின்மையை ஏற்படுத்த மாட்டாது. வங்கியிலிருந்து அனைத்துப் பணமும் எடுப்பனவு செய்யப்பட்டதன் காரணமாக திரவத்தன்மையின்மை உருவாகலாம். தனிப்பட்ட வங்கி முறிவு ஒன்றினையும் வங்கித் தொழில் முறையின் முறிவு ஒன்றினையும் வேறுபடுத்திக் காட்டுவது மிக முக்கியமானதாகும். வங்கியொன்றின் முறிவானது ஏனைய வங்கிகளின் மீது பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கை இழப்புக்கு இட்டுச் செல்லக்கூடியதோடு வங்கி மீளச் செலுத்தஇயலாது காணப்படும் என்ற அச்சத்தின் காரணமாக ஒரேநேரத்தில் வைப்புக்களை மீளப் பெறுவதற்கு இட்டுச் செல்லும். இதுவே அனைத்துப் பணமும் மீளப்பெறப்படும் நிலைமையாகும்[3]. வங்கியொன்றின் முறிவானது சிறந்த நிதி நிலைமையினைக் கொண்ட வங்கிகளாயினும் ஏனைய வங்கிகளின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லலாம். இது வங்கி சம்பந்தப்பட்ட தேவையற்ற அச்சங்களால் விளைவதாகும். அதாவது அதே அதிர்ச்சியின் காரணமாக வங்கிகளின் குழுவொன்று பாதிக்கப்பட்டு வங்கிகளின் அமைப்பு முறையின் முறிவுக்கு இட்டுச் செல்லலாம்.

பலதரப்பட்ட காரணங்களினால் வங்கிகள் முறிவடையக்கூடியதோடு அவை உட்காரணிகளாகவோ வெளிக்காரணிகளாகவோ இருக்கலாம். குறிப்பான வேறுபடு ஒன்றினைக் காணமுடியா விட்டாலும் கூட மோசமான வங்கித் தொழில் பிரயோகங்கள், மிகையான இடர் நேர்வுகளை ஏற்றுக் கொள்ளுதல், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் போதாமை தொடர்புடைய கடன் வழங்கல்களும்[4], நன்னடத்தைத் தீங்குகள்[5] போன்ற உள்ளகக் காரணிகளின் பெருமளவு காரணத்தினால் தனிப்பட்ட வங்கிகளின் முறிவுகள் ஏற்படலாம். உண்மையில் வங்கிகள் தமது பொதுவான வங்கித் தொழில் தொழிற் பாடுகளின் போது பலதர

1. Mishrin, frederils, "The Economics of money and financial markets" Addison-Wesley, 1997.
2. வங்கி நெருக்கடித் தீர்வுகளாக வேறுபட்ட நாடுகளினால் வேறுபட்ட தொழில் நுட்பங்கள் மேற்கொள்ளப்படுவதனால் வங்கி முறிவுகள் சம்பந்தமான ஆய்வுகளின் போது பயன்படுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் நாட்டின் குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபடும்.
3. வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகள், வைப்புச் சான்றிதழ்களையும் வழங்குதல் போன்ற ஏனைய திரவத்தன்மைப் பிரச்சினை மூலங்களாகும். மேலும் அவை அதேமாதிரியான அடிப்படைப் பண்புகளுடன் தொழிற்படுமேயானால் ஒரு வங்கியில் காணப்படும் பிரச்சினை யானது ஏனைய வங்கிகளின் முறிவுக்கு இட்டுச்செல்லும்.

## சிறப்புக் குறிப்பு 19(தொடர்ச்சி)

ப்பட்ட இடர் நேர்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. உதாரணமாக கடன் ஒன்று வழங்கப்படும்போது கொடுகடன் இடர் நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, வட்டிவீத இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் போன்ற பல இடர் நேர்வுகளுக்கு வங்கி உட்படுத்தப்படுகின்றது. போதுமான அளவில் இடர்நேர்வு கட்டுப்பாட்டு வழிமுறைகளை வங்கி மேற்கொள்ளாவிட்டால் இந்த இடர்நேர்வு களுக்கு வங்கி பெருமளவு உட்படும். பொருளாதாரச் செழிப்பு மற்றும் வீழ்ச்சி நாணய நெருக்கடி, பணவீக்கம் மற்றும் முழுமையான வங்கித் தொழில் முறை யினையும் பாதிக்கும் நிதியியல் தாராள மயமாக்கல் என்பன வெளிக்காரணிகளை உள்ளடக்குகின்றன. உதாரணமாக பொருளாதாரச் செழிப்பின்போது சொத்துக்களின் விலைகள் உயர்வடைந்து பெறுமதி குறிப்பாக வர்த்தக மற்றும் வதிவிடச் சொத்துக் களின் பெறுமதி உயர்வடைந்து கடன் வழங்கலுக்கான இயலாமையை மேலும் விரிவடையச் செய்யும். பொருளாதார வீழ்ச்சியின்போது பிணைய பெறுமதி வீழ்ச்சியடைந்து கொடுகடன் இடர் நேர்வு அதிகரித்து இதற்கு நேர்மாறான நிகழ்வு இடம்பெறும். நிதியியல் தாராளமயமாக்கலானது வங்கிகளுக்கும் வங்கியல்லா நிறுவனங் களுக்கும் இடையில் போட்டியை அதிகரிக்கச் செய்து புதிய கருவிகளை அதிகரிக்கச் செய்து மரபு வழியான வங்கித் தொழில் முறைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம். பொருத்தமான இடர் நேர்வுக் கட்டுப்பாடுகளைக் கொண்டிராத வங்கிகள் மூலதனம் தேய்வடைந்து கடன் தீர்ப்பனவுத் தகைமை இன்மையை எய்தக்கூடிய அதியுயர் இடர் நேர்வினை எதிர்நோக்குகின்றன.

வங்கிகளை மீட்பதற்கான நடவடிக்கைகள் பல்வேறு வடிவில் காணப்படலாம். இதில் பொது நிதியங்களின் ஏற்பாடானது இந்த வழிமுறைகளில் ஒன்றாகும். நிதியிடலானது மத்திய வங்கியினால் அல்லது கடன் ஒன்றின் வடிவில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படலாம். அது அரசாங்க உத்தர வாதத்தின் வடிவில் காணப்படலாம். மூடப்பட்ட வங்கிகளின் வைப்பாளர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் வைப்புக்களின் மாற்றலை ஏற்றுக் கொள்ளுவதற்கும் இணங்கும் வங்கிகளுக்கு இழப்பீடுகளை மேற்கொள்ளுவதற்கும், வங்கிகளின் கையேற்பு இணைப்பு அல்லது கொள்வனவுக்கு வசதி செய்து கொடுப்பதற்கும் அல்லது வங்கியினை மீள் மூலதனமயமாக்கலுக்கும் பொது நிதியங்கள் பயன்படுத்தப்படலாம். எனினும், திரவத்தன்மை பிரச்சினைகளை எதிர்கொள்ளுவதற்காக மத்திய வங்கியினால் வங்கிகளுக்கு வழங்கப்படும் இறுதிக் கடன் ஈவோன் வசதியிலிருந்து இது வேறுபடுத்தப் படல் வேண்டும். கடன் தீர்ப்பனவுத் தகைமையை இழந்த வங்கியொன்று பாதகமான அதிர்ச்சியின் காரணமாக திரவத்தன்மைக்கான வழமைக்கு மாறான கேள்வியின்மை எதிர்கொள்ளும் பிர ச்சினைக்கு உள்ளாகலாம். வங்கிகளுக்கிடையேயான சந்தை போன்ற ஏனைய மூலங்களிலிருந்து வங்கிக்கு நிதியங்களைப் பெற்றுக்கொள்ள இயலாது போனால் மற்றும் வங்கியின் முறிவானது முழுமையான நிதியிடல் முறையின் மீது உள்ளார்ந்ததாக்கங்களைக் கொண்டிருக்குமாயின் இறுதிக் கடன் ஈவோன் என்ற முறையில் கீழ்மத்திய வங்கி நிதியிடலில் எந்தவித நியாயமும் காணப்படமாட்டாது[6].

முறிவடைந்த வங்கிகளை மீட்பதில் செலவுகளும்[7] நன்மைகளும் காணப்படுகின்றன. வங்கிகளை மீட்பதற்கு பொதுநிதியங்கள் பயன்படுத்தப்படும்போது பொதுமக்களில் ஒரு பிரிவினர் நன்மையடைவதோடு ஏனையவர்கள் அதற்கான கொடுப்பனவினை மேற்கொள்ளுகின்ற னர். மத்திய வங்கி அதனை மீட்குமேயானால் அது நாணய விரிவாக்கத் திற்கு இட்டுச் செல்லும். அரசாங்க நிதியங்கள் பயன்படுத்தப் படுமேயானால் மீட்புக்கு நிதியிடுவதற்காக வரிகள் உயர்த்தப்பட வேண்டியதோடு ஏனைய அரசாங்க செலவுகள் குறைக்கப்பட்டு அரச பணிகளில் மோசமான நிலைமையொன்று உருவாகலாம். மீட்புக்கு நிதியிடு வதற்காக நாணய விரிவாக்கம் பயன்படுத்தப்பட்டால் பொருளாதாரத்தில் அதியுயர் பணவீக்க அழுத்தத்துக்கு மேலதிகமாக பொருளாதாரச் செலவுகளும் காணப்படலாம். பொருளாதாரச் செலவில் முக்கிய பாகமொன்று நன்னடத்தைத் தீங்கினாலேயே ஏற்படுகின்றது. அதாவது கடன்தீர்ப்பனவுத் தகைமையை இழந்த வங்கிகளை

4. பீ.சீ.சீ.ஐ. வங்கியின் முறிவானது சம்பந்தப்பட்ட கடன் வழங்கலுக்கான உதாரணமாகக் குறிப்பிடப்படலாம். பொருத்தமான இடர்நேர்வுக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் காணப்படாமைக்கு உதாரணமொன்றாக இதனைக் காட்ட முடியும்.

5. ஒரு பக்கச் சாய்வான ஊக்குவிப்புக்களின் நன்னடத்தைத் தீங்குப் பிரச்சினை பெயின் மற்றும் கலோமிரிஸ் என்பவர்களினால் தோற்றம் பெறும் நிதிச்சந்தைகள் 2001 என்ற நூலில் காணப்பட்டவாறு வைப்புக்களையும் ஏனைய வங்கிப் பொறுப்புக்களையும் அரசாங்கம் உத்தரவாதம் செய்யும்போது வங்கி வைப்பாளர்களும் ஏனைய கடன் வழங்கியோரும் வங்கி எவ்வாறு நடாத்தப்படும் என்பதைப் பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. பதிலாக அரச முகவர்கள் கண்காணிப்புக்களை மேற்கொள்ள வேண்டும். சந்தை ஒழுங்குபடுத்தலை விட அரச ஒழுங்குபடுத்தல் பெருமளவு அனுமதிக்கப்படுவதனால் வங்கி இடர்நேர்வு சமூகமயப்படுத்தப்பட்டு பெருமளவு அதிகரிக்கலாம்.

6. ஆரம்பகட்டத்தில் இறுதிக்கடன் ஈவோனாக வசதிகளை வழங்கும்போது வங்கியின் கடன்தீர்ப்பனவுத் தன்மை இன்மையினை வேறுபடுத்துவதற்கு மத்திய வங்கிகளும் இயலாது காணப்படலாம்.

7. 1997-2000 காலப்பகுதியில் வங்கி நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுவதில்ஏற்பட்ட அரசிறைச் செலவு - கிலேன் கஹொக்கார்த் வங்கி நெருக்கடிகள் நாணய நெருக்கடிகளுடன் இணைந்து காணப்பட்டிருந்ததால் இந்தச் செலவுகள் மேலும் உயர்வானதாக இருந்திருக்கும். வங்கி நெருக்கடிகளின் விடயத்தில் அரசிறைச் செலவுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4-5 சதவீதம் எனவும் நாணய நெருக்கடியும் இணைந்திருந்தால் செலவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கிட்டத்தட்ட 25 சதவீதமாக இருந்திருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

## சிறப்புக் குறிப்பு 19(தொடர்ச்சி)

மீட்பதற்குத் திரவத்தன்மை ஆதரவு வழங்குவதற்கு தீர்மானிக்கப்படுமிடத்து எதிர்காலத்தில் மேலதிக இடர்நேர்வினை ஏற்றுக்கொள்ளுவதற்கான அதிகரித்த ஊக்கு விப்புக்கள் காணப்படுகின்றன. இன்னுமொரு பிரச்சினை என்னவெனில் மீட்புக்களின் மூலமாக உருவாக்கப்பட்ட அதியுயர் பணவீக்கத் தாக்கமானது வங்கித் தொழில் முறையின் மேலும் நெருக்கடியில் அலுவல்சார் தலையீட்டின் நன்மைகளை விரிவான வகைகளுக்குள் வகைப்படுத்தலாம். வங்கித் தொழில்முறையினை உறுதிப்படுத்தல் மற்றும் குழப்ப நிலையைத் தடைசெய்து வங்கித் தொழில் முறையின் நலமான நிலைமையினை மீள்நிறுவுதல் போன்ற தலையீட்டின் நன்மைகளை அவை பிரதிபலிப்பதாக அமையும். எனவே கொடுப்பனவு முறையின் நேர்மையினைப் பேணல், நிதியிடல் மற்றும் பொதுவான பொருளாதார நிலைமையினைப் பேணல் என இந்த நன்மைகளை வர்ணிக்கலாம். முறிவடைந்த வங்கிகளை மீட்பதற்காக பொது நிதியங்களைப் பயன்படுத்துவதால் காணப்படும் சமூகச் செலவுகளை கருத்திற் கொள்ளுகையில் வங்கி முறிவுகளை கவனத்திற் கொள்வதற்கு எந்த வகையான மாற்று அணுகுமுறைகளைப் பயன்படுத்தலாம் என்ற பிரச்சினை எழுகின்றது. முதலாவதாக மேலாண்மையாளர்கள் வங்கிகளின் இணைப்பினை ஊக்குவிக்கலாம். நிதியியல் நெருக்கடிகளுக்கு உள்ளான வங்கிகளை வலுப்படுத்துவதற்காக வங்கித் தொழில்முறையில் உள்ள ஏனைய வங்கிகளுடன் அவை கூட்டுச் சேரலாம். சில நாடுகள் பலவந்தமான இணைப்புக்கான முயற்சிகளை மேற்கொள்ளும்போது வங்கிகள் தன்னிச்சையாகவே ஏனைய வங்கிகளுடன் இணைந்துள்ள சந்தர்ப்பங்கள் பல காணப்படுகின்றன. எனினும் இணைப்பினை வசதிப்படுத்துவதற்காக நிதியங்களை உட்செலுத்துவதற்கான கோரிக்கைகளும் காணப்படலாம். இரண்டாவதாக நெருக்கடிகளுக்கான வங்கிகளுக்கு தன்னியக்க நிதியிடலுக்கான அனுமதியினை வழங்காமல் மேலாண்மையாளர்கள் சந்தை ஒழுங்கமைப்பை ஊக்குவிக்கலாம். கடன் தீர்ப்பனவுத் தகைமையினை இழந்த வங்கிகளுக்கு பலவந்தமான வெளியேற்றல் விதியொன்றினை ஏற்படுத்துவதன் மூலமும் சந்தை ஒழுங்கமைப்பை மேற்கொள்ளலாம். மூன்றாவதாக இடர்நேர்வு அடிப்படையிலான வைப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றுடன் பாதுகாப்பு வலைகளை ஏற்படுத்தலாம். இழப்புக்களை ஆகக் குறைந்ததாக்குவதன் மூலம் வைப்பாளர்களைப் பாதுகாப்பதில் வைப்புக் காப்புறுதி உதவி புரிகின்றது. அத்துடன் வங்கியொன்றின் முறிவின் காரணமாக அமைப்பு முறையில் ஏற்படும் தாக்கத்தினைக் குறைவடையச் செய்வதற்கான பங்களிப்பையும் வழங்குகின்றது. மேலும் வைப்புக் காப்புறுதித் திட்டமொன்று காணப்படுமாயின் மீட்புக்கான அரச நிதியங்களின் தேவையும் பொதுவாக எழமாட்டாது. எனினும் வைப்புக்காப்புறுதித் திட்டம் ஒன்றை நிறுவும்போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில் வைப்புக் காப்புறுதித் திட்டமானது மேலதிக இடர்நேர்வுகளை ஒத்துக்கொள்வதற்கும் வங்கிகளைத் தூண்டக்கூடியதாக இருப்பதுடன் வைப்பாளர்களும் வங்கிகளின் இடர் நேர்வுகளைக் கண்காணிக்க இயலாது காணப்படுவதனால் நன்னடத்தைத் தீங்குப் பிரச்சினைகள் உருவாக இடமுண்டு. இறுதியாக கட்டுப்பாட்டு மற்றும் முன்மதியுடைய வழிமுறைகளை மேலும் வலுப்படுத்தி வங்கித்தொழில் துறையினுள் துறையினுள் நுழைவதற்கான பரிசீலிப்பு செயல்முறையினை அதிகரிப்பதும் எதிர்காலத்தில் வங்கி முறிவுகளை குறைப்பதற்குப் பயன்படுத்தக் கூடிய ஏனைய விடயங்களாகும்.

மேலே கலந்துரையாடப்பட்டதைப் போன்று வங்கித்தொழில் துறையின் அனைத்துத் துறைகளிலும் அல்லது பாகமொன்றில் உருவாகும் நெருக்கடியொன்று பொருளாதாரத்தில் கணிசமான செலவு ஒன்றினை ஏற்படுத்தலாம். வங்கிகளின் பங்குதாரர்களுக்கு மேலதிகமாக நெருக்கடித் தீர்வு மற்றும் வெளியீட்டு இழப்பு என்பன வற்றிலிருந்து நிதிச் செலவுகளும் உருவாகின்றன. சார்ல்ஸ் குட்காட்[8] என்பவரினால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டவாறு மத்திய வங்கியொன்று அனைத்து தனிப்பட்ட முறிவுகளையும் நிறுத்தவோ தடுக்கவோ முடியாது. முழுமையான வங்கித் தொழில் முறையின் உறுதிப்பாடு சம்பந்தமான கவலையையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் தனிப்பட்ட முறிவு ஒன்றினைத் தடுத்து நிறுத்துவதற்கு அது தயாராக இருத்தல் வேண்டும். மீட்சி செய்வதானது ஒவ்வொரு நிதியியல் நிறுவனத்தினையும் பேணுவதற்குப் பதிலாக நிதியியல் முறையில் உறுதிப்பாட்டினைப் பேணுதல் எனக் கருதப்படல் வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட நிறுவனத்தையும் மீட்கவேண்டும் என்ற தேவைப்பாடு காணப்படாத போதிலும் நிதியியல் முறைகள் தொடர் விளைவுகளை தவிர்ப்பதற்காக நிதியிடல் உதவி வழங்கலை நியாயப்படுத்த முடியும். எனினும் நிதியிடல் முறைக் காரணங்களுக்காக தேவைப் படுத்தப்பட்டாலும் மீட்பதில் உள்ள செலவுகளையும் நன்மைகளையும் பகுப்பாய்வு செய்தலே சிறந்த அணுகுமுறையாகும்.

8. இங்கிலாந்து வங்கியில் எம்பீசியின் முன்னைய உறுப்பினர் இலண்டன் பொருளாதாரப் பள்ளியில் நிதியியல் சந்தைக் குழுவின் பிரதிப்பணிப்பாளர்.

**அட்டவணை 10.14**
**புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள்**
**(2002 திசெம்பர் 31இல் உள்ளவாறு)**

*ரூபா மில்லியன்*

| போகம் | அரச வங்கிகள் | | | உள்நாட்டு தனியார் வங்கிகள் (அ) | | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | மொத்தக் கடன்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | புஅகிகொ இன்கீழான மொத்தக் கடன்கள் |
| *1995/1996 பெரும்போகம்* | 265 | 76 | 341 | 18 | 28 | 46 | 25 | 33 | 58 | 308 | 137 | 445 |
| *1996 சிறுபோகம்* | 71 | 33 | 104 | 3 | 12 | 15 | 14 | 8 | 22 | 88 | 53 | 141 |
| *பயிர்ச்செய்கை ஆண்டு 1996* | 336 | 109 | 445 | 21 | 40 | 61 | 39 | 41 | 80 | 396 | 190 | 586 |
| *1996/1997 பெரும்போகம்* | 233 | 59 | 292 | 18 | 28 | 46 | 24 | 36 | 60 | 275 | 123 | 398 |
| *1997 சிறுபோகம்* | 72 | 35 | 107 | 20 | 32 | 52 | 16 | 13 | 29 | 108 | 80 | 188 |
| *பயிர்ச்செய்கை ஆண்டு 1997* | 305 | 94 | 399 | 38 | 60 | 98 | 40 | 49 | 89 | 383 | 203 | 586 |
| *1997/1998 பெரும்போகம்* | 177 | 24 | 201 | 21 | 20 | 41 | 32 | 13 | 45 | 230 | 57 | 287 |
| *1998 சிறுபோகம்* | 74 | 24 | 98 | 12 | 30 | 42 | 24 | 17 | 41 | 110 | 71 | 181 |
| *பயிர்ச்செய்கை ஆண்டு 1998* | 251 | 48 | 299 | 33 | 50 | 83 | 56 | 30 | 86 | 340 | 128 | 468 |
| *1998/1999 பெரும்போகம்* | 149 | 24 | 173 | 30 | 22 | 52 | 29 | 27 | 56 | 208 | 73 | 281 |
| *1999 சிறுபோகம்* | 75 | 23 | 98 | 10 | 29 | 39 | 25 | 20 | 45 | 110 | 72 | 182 |
| *பயிர்ச்செய்கை ஆண்டு 1999* | 224 | 47 | 271 | 40 | 51 | 91 | 54 | 47 | 101 | 318 | 145 | 463 |
| *1999/2000 பெரும்போகம்* | 176 | 34 | 210 | 44 | 21 | 65 | 58 | 46 | 104 | 278 | 101 | 379 |
| *2000 சிறுபோகம்* | 83 | 39 | 122 | 45 | 31 | 76 | 53 | 43 | 96 | 181 | 113 | 294 |
| *பயிர்ச்செய்கை ஆண்டு 2000* | 259 | 73 | 332 | 89 | 52 | 141 | 111 | 89 | 200 | 459 | 214 | 673 |
| *2000/2001 பெரும்போகம்* | 123 | 39 | 162 | 67 | 25 | 92 | 61 | 51 | 112 | 251 | 115 | 366 |
| *2001 சிறுபோகம்* | 68 | 32 | 100 | 34 | 25 | 59 | 68 | 45 | 113 | 170 | 102 | 272 |
| *பயிர்ச்செய்கை ஆண்டு 2001* | 191 | 71 | 262 | 101 | 50 | 151 | 129 | 96 | 225 | 421 | 217 | 638 |
| *2001/2002 பெரும்போகம்(ஆ)* | 128 | 27 | 155 | 48 | 12 | 60 | 58 | 35 | 93 | 234 | 74 | 308 |
| *2002 சிறுபோகம் (ஆ)* | 166 | 32 | 198 | 86 | 15 | 101 | 63 | 44 | 107 | 315 | 91 | 406 |
| *பயிர்ச்செய்கை ஆண்டு 2002 (ஆ)* | 294 | 59 | 353 | 134 | 27 | 161 | 121 | 79 | 200 | 549 | 165 | 714 |

*(அ) அட்டன் நசனல் வங்கி, வர்த்தக வங்கி, செலான் வங்கி மட்டும்.*
*(ஆ) தற்காலிகமானவை.*

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

1999இல் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத்தின் முறைமையின் நடைமுறைப்படுத்தலானது வேளாண்மையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் உறுதியான நியாயமான விலைகளை வேளாண்மைப் பண்டங்களுக்கு கிடைக்கச் செய்வதாகும். இத் திட்டம் 2002இல் உலக வங்கியினால் சந்தை அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியின் உதவியினால் வளர்ச்சிபெற்றது. 2002இல் இலங்கை மத்திய வங்கிக்கும் உலக வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், ஊடாக விளம்பரங்கள், பங்குபெறும் நிறுவனங்களுக்கு மோட்டார் சைக்கிள்கள், கணனி உபகரணங்களை வழங்குதல், திட்டத்தில் சம்பந்தப்படும் ஆட்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயிற்சியளித்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

2002இல் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும், அரசாங்கத்திற்குமிடையில் கைச்சாத்தான கிராமிய நிதித்துறை அபிவிருத்தி செயற்றிட்டமொன்றிற்கான பிரேரணையின் பிரகாரம் நிபுணத்துவ ஆலோசனை என்ற வடிவில் தொழில்நுட்ப ஆலோசகர்கள் தமது அறிக்கையை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தனர். முன்மொழியப்பட்டுள்ள இத் திட்டத்தின் பிரகாரம் இக் கிராமிய நிதித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது அரசாங்கம் கிராமிய நிதித்துறையினுள்ள கொள்கை மற்றும் கட்டமைப்பு ரீதியான பிரச்சனைகளைத் தீர்க்க உதவுதல், கிராமிய நிதி நிறுவனங்களை மறுசீரமைப்பதனூடாக சிறந்த நடைமுறைகளை கிராமிய நிதியில் புகுத்துதல், நுண்பாக நிதி வழங்குனர்களை பன்னாட்டு ரீதியில் சிறந்த நடைமுறைகளை பின்பற்றுவதில் உதவிபுரிதல், வடக்கு கிழக்கில் நுண்பாக நிதி கிடைக்க வகை செய்தல், நுண்பாக தொழில் முனைவோர் முதலீட்டுத் தேவைகளுக்கு நிதி பெற உதவுவதனூடாக கிராமிய பொருளாதாரத்தை தூண்டுதல் எனும் நோக்கங்களை கொண்டிருக்கும். ஆலோசகர்களால் விதந்துரைக்கப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள், கொள்கை, சட்டம், கணக்கீடு, கிராமிய நிதிக்கான தகவல் கட்டமைப்பு போன்றவற்றை உள்ளடக்குகின்றன.

சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கடன் செயற்றிட்டம் (இசுறு) மற்றும் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்டம் எனும் இரு நுண்பாக நிதி நிகழ்ச்சித்திட்டங்களையும் மத்திய வங்கி 2002இலும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வந்தது. இவற்றில் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதி செயற்றிட்டமானது சமூக மூலதனத்தை விருத்தி

அட்டவணை 10.15

திரட்டப்பட்ட சேமிப்புக்களும் முற்பணங்களும் - தெரிந்தெடுக்கப்பட்ட கிராமியத்துறை நிறுவனங்கள்

ரூபா மில்லியன்

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள் | | பிரதேச அபிவிருத்தி வங்கிகள் | | சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் | | சர்வோதயா | | சனசக்தி வங்கி அம்பாந் தோட்டை | | சனச அபிவிருத்தி வங்கி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002 (அ) | 2001 | 2002 (அ) | 2001 | 2002 (அ) | 2001 | 2002 (அ) | 2001 | 2002 (அ) | 2001 | 2002 (அ) |
| **மொத்த சேமிப்புக்கள் (ஆ)** | **16,576** | **18,687** | **4,746** | **6,344** | **4,539** | **4,902** | **வி.கி** | **வி.கி** | **67** | **65** | **1,361** | **1,490** |
| சேமிப்புக்கள் | 12,186 | 13,477 | 3,200 | 4,102 | 1,276 | 1,385 | வி.கி | வி.கி | 26 | 28 | 262 | 380 |
| சிறப்புச் சேமிப்புக்கள் | - | - | - | - | 1754 | 1,899 | வி.கி | வி.கி | 23 | 17 | 9 | 6 |
| நிலையான வைப்புக்கள் | 4,390 | 5,211 | 1,546 | 2,242 | 668 | 741 | வி.கி | வி.கி | 1 | 1 | 929 | 943 |
| பங்குகள் | - | - | - | - | 841 | 877 | வி.கி | வி.கி | 18 | 19 | 161 | 161 |
| **வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்(இ)** | **5,663** | **3,326** | **4,695** | **6,345** | **2,996** | **3,176** | **620** | **1,020** | **356** | **381** | **615** | **646** |
| வேளாண்மை | 931 | 850 | 357 | 497 | 546 | 573 | 71 | 103 | 281 | 308 | 3 | 7 |
| விலங்கு வளர்ப்பு | 169 | 101 | 46 | 64 | 150 | 165 | 22 | 29 | - | - | - | - |
| கடற்றொழில் | 18 | 33 | 36 | 47 | - | - | 14 | 15 | - | - | - | - |
| சிறு கைத்தொழில்கள் | 302 | 280 | 237 | 340 | 59 | 62 | 62 | 157 | 37 | 29 | 8 | 12 |
| கட்டட நிருமாணம், மின்னூட்டல், நீர் வழங்கல் | 2,991 | 185 | - | - | 1170 | 1233 | - | - | - | - | 8 | 56 |
| செயற்றிட்டங்கள் வர்த்தகம் | 183 | 226 | 387 | 499 | 270 | 288 | 269 | 564 | - | - | 231 | 209 |
| ஏனையவை | 1,069 | 1,652 | 3,632 | 4,898 | 801 | 855 | 197 | 168 | 24 | 30 | 366 | 362 |

(அ) 2002ஆம் ஆண்டிற்கான எண்தொகைகள் தற்காலிகமானவை.
(ஆ) ஆண்டின் இறுதியிலுள்ள மொத்தச் சேமிப்புக்கள்.
(இ) ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்.

மூலங்கள்: பிரதேச அபிவிருத்தி வங்கிகள்,
சனச கூட்டமைப்பு,
வர்வோதயா (விதைகள்)
மகளிர் அபிவிருத்தி கூட்டமைப்பு (கம்பாந்தோட்டை)
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்.
சனச அபவிருத்தி வங்கி

செய்வதனூடாகவும் சுயஉதவி குழுக்களை பயன்படுத்தியும் வறுமையைக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டதாகும். சுய உதவிக் குழுக்களது உள்ளோரை வங்கிகள் அடைவதற்காக ஏற்படுகின்ற செலவினத்தை இழிவானதாக்க உதவும். சிறு வேளாண்மையானோர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செய்யற்றிட்டம் மாத்தறை, காலி, கண்டி, புத்தளம் எனும் நான்கு மாவட்டங்களில் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இசுறு அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் சுயஉதவி குழுக்கள் இச் சங்கங்களது அலுவலர்களுக்கும், இசுறு தலைவர்களுக்கும் கணக்கீடு, சங்கங்களின் பொதுமுகாமை போன்றவற்றில் விரிவான பயிற்சிகளை வழங்கப்பட்டதனூடாக பலப்படுத்தப்பட்டன. இத் திட்டமானது மத்திய வங்கியாலும் உரிய பிராந்திய அபிவிருத்தி வங்கிகளாலும் கூட்டாக நடைமுறைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. 2003இன் நடுப்பகுதியளவில் இத்திட்டத்தின் மாவட்ட மட்டத்திலான முகாமையினை அந்தந்த பிராந்திய அபிவிருத்தி வங்கியிடமே கையளிக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டள்ளன. பன்னாட்டு ஒத்துழைப்புக்கான யப்பானிய வங்கியினால் நிதிப்படுத்தப்படுகின்ற வறுமை ஒழிந்த நுண்பாக நிதியிடல் செயற்றிட்டமானது பதுளை, அம்பாந்தோட்டை, களுத்துறை, குருநாகல், மாத்தளை, நுவரெலியா என்ற மேலும் ஆறு மாவட்டங்களில் சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் காணியற்றோர் கொடுகடன் திட்ட அணுகுமுறையினை பின்பற்றி அதனைப் போன்றே நடைமுறைப்படுத்துவதாகும். நடப்பாண்டில் இத் திட்டமானது 2001இல் இருந்த 130 நன்மை பெறுநர்களுக்கு ரூ.1.2 மில்லியன் என்ற மட்டத்திலிருந்து 2002இன் இறுதியில் 5,137 நன்மை பெறுனருக்கு ரூ.83 மில்லியனை வழங்கும் அளவுக்கு முன்னேற்றமடைந்தது.

வேளாண்மைக் கொடுகடன் வழங்கும் கொள்கை அமைப்பிலான குறிப்பிடத்தக்க சாதனையாக, தனியார்துறை ஆதரவுப் பணிகளை வழங்குவோரினால் வழங்கப்படும் பணிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் நடைமுறைக்கு 2002ஆம் ஆண்டிலும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்படும். நீண்டகாலப் பயிர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ந்தது. இம் முறைமையானது எதிர்கால கடன் பெறுவோர் வேளாண்மையாளர் செலவினத்தில் கருத்துமிக்கோராக இருப்பதனையும் நாட்டின் இலவச பண்டங்களுக்கு பழக்கமாகிவிட்ட கலாச்சாராத்திலிருந்து விடுபடவும் உதவுவதனூடாக இத் திட்டத்தின் கீழ் நிதிப்படுத்தப்படும் செயற்றிடடங்களின் நீண்டகால நிலைத்திருத்தலுக்கு பங்காற்றும்.

அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களுக்கு எதிராக செலிங்கோ காப்புறுதிக் கம்பனியால் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய காப்புறுதித் திட்டமானது 2002இல் ஆரம்பிக்கப்பட்டது. முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களை கைசாத்திட்ட வேளாண்மை யாளர்களிடமிருந்து அறுவடைக்குப் பிந்திய காப்புறுதிக்கான தேவை முன்வைக்கப்பட்டது. இது சந்தைக்கு தரமான வேளாண்மைக் பொருட்களை வழங்குவதற்கு வேளாண்மையாளர்களுக்குள்ள அர்ப்பணிப்பினை புலப்படுத்துகிறது. வேளாண்மைக் கமத்தொழில் காப்புறுதிச்சபையானது முன்னோக்கிய ஒப்பந்தங்களூடாக வர்த்தக அடிப்படையில்

பயிர்ச்செய்கையில் ஈடுபடும் வேளாண்மையாக்களுக்கென புதிய காப்புறுதித் திட்டமொன்றை 2002ல் அறிமுகப்படுத்தியது. இக்கொள்கையின் கீழ் வேளாண்மையாளர்கள் அவர்கள் செலுத்தும் கட்டணத்திற்கேற்ப வருமான இழப்பின் 80 சதவீதம் வரை மீளப்பெற உரித்துடைவராவர்.

கொடையாளர்களால் நிதிப்படுத்தப்படும் பல்வேறு கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கடன்வழங்கல் வீதமானது சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதத்துடன் இணைக்கப்பட்டிருப்பதனால் குறித்த ஆண்டில் வைப்பு வீதங்களது படிப்படியான வீழ்ச்சியைத் தொடர்ந்து இத்தகைய கடன்வழங்கல் வீதங்களும் தொடர்ச்சியாக இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்திருந்தன. கொடையாளிகளால் நிதிப்படுத்தப்படும் இத்திட்டங்கள் செயற்றிட்ட நன்மை பெறுவோருக்கு வழங்கிய கடன்கள் தொடர்பில் கடன் வழங்கிய வங்கிகளுக்கு மீள்நிதியீட்டத்தை அளிக்கின்றன. கடன்களுக்கான குறைந்த வட்டி வீதங்கள் கடன் பெறுவோரை ஊக்குவித்து இத்திட்டங்களின் கீழ் அதிக நிதிகளை கடனாகப் பெற தூண்டின.

### முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறைமை(கொவி சகனய)

1999இல் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னோக்கிய விற்பனை ஒப்பந்த முறையை மத்திய வங்கியானது தொடர்ந்தும் வேளாண்மையாளர்கள், கொள்வனவாளர்கள், வங்கியாளர், கொள்கை வகுப்போர் மற்றும் பொதுமக்களிடையே பிரபல்யப்படுத்தி வருகின்றது. கைநூல்கள், சுவரொட்டிகள், வீடியோ படங்கள், என்பன வங்கியால் இந் நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்டன. இத்திட்டமானது நெல், சோளம், பச்சைப்பயறு மற்றும் சோயா அவரை போன்றவற்றை உற்பத்தி செய்யும் வேளாண்மையாளர்கள் மற்றும் வர்த்தகர்களிடையே மிக பிரபல்யமாகக் காணப்பட்டது. இத்திட்டத்தை சிறுதானியம் மற்றும் கால்நடை வளர்ப்போரிடையே பிரபல்யப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2002இல் ஐ.அ.டொலர் 240,900 கொண்ட உலக வங்கியின் சந்தை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் பங்குபற்றும் வங்கிகள் மற்றும் பிற முகவரகங்களது துணையுடன் வேளாண்மை விளைவுப் பொருட்களான முன்னோக்கிய சந்தை முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக கிடைத்தது. இந் நிதிகள் பங்குபெறும் முகவர்களது இயலளவை அதிகரிக்கவும் (மோட்டார் சைக்கிள் மற்றும் கணனிகள் வழங்குவதனூடாக) இலக்கு குழுக்களுக்கிடையே விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன்படி, தலைமை இணைப்பாளர் என்ற வகையில் மத்திய வங்கிக்கும், உலக வங்கிக்கும் இடையில் மேற்படி நிதிகளைப் பெற்று 2002 ஏப்பிறல் மாதத்திலிருந்தான 1 வருட காலத்துக்கு ஒரு ஆரம்ப செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 2002 மாச்சில் ஒரு செயற்றிட்ட ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி, செலான் வங்கி, கொமர்சல் வங்கி ஆறு பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் மற்றும் சர்வோதய சீட்ஸ் (SEEDS) என்பன பங்குபெறும் முகவர்களாக இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டன.

அட்டவணை 10.16
முன் விற்பனை ஒப்பந்தங்கள் – 2002

| பயிர்கள் | உடன்படிக்கைகளின் எண்ணிக்கை | நன்மையடைந்த வேளாண்மையாளர்களின் எண்ணிக்கை | தீர்மானிக்கப்பட்ட முன்விலைகள் (கிலோ கிறாமிற்கு ரூபாய்) |
|---|---|---|---|
| சோளம் | 4,225 | 5,312 | 12-18 |
| நெல் | 6,384 | 8,520 | 12-16 |
| எள்ளு | 1,504 | 2,120 | 20-22 |
| பெரிய வெங்காயம் | 657 | 657 | 24 |
| சோயா | 4,591 | 5,687 | 27-30 |
| காய்கறிகள் | 3,774 | 4,825 | 40-42 |
| ஏனைய பயிர்கள் | 5,412 | 7,491 | 25-350 |
| **மொத்தம்** | 26,547 | 34,612 | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

2003 சிறுபோகத்தில் மத்திய வங்கியும், பிற பங்குபெறும் முகவர்களும் இத் திட்டத்தை வேளாண்மையாளர் மற்றும் கொள்வனவாளர்களிடையே பிரபல்யப்படுத்த முடிந்தது. அதாவது பேரளவு கொள்வனவாளர், விவசாயக் கைத்தொழில்கள், ஏற்றுமதியாளர், மொத்த வியாபாரிகள் அரிசிஆலை வைத்திருப்போர் என்போரிடையே இப் பிரச்சாரம் இடம்பெற்றது. இதன் விளைவாக 12,957 புதிய முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் 2002 சிறுபோகத்தில் வேளாண்மையாளர்களுக்கும், கொள்வனவாளர்களுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டு 17,000 வேளாண்மையாளர் குடும்பங்கள் நன்மை பெற்றன.

2002/2003 பெரும்போகத்தில் 13,590 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் குறிப்பாக நெல், சோளம், சோயா, பயறு போன்றவற்றிற்கு இப் பயிர்களின் பேரளவு கொள்வனவாளர்களது பங்குபற்றுதலுடன் கைச்சாத்தாகின. மத்திய வங்கியும் பங்குபெறும் முகவர்களும் வெளிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை கணிசமானளவில் அதிகரித்ததனூடாக வேளாண்மையாளர் சமூகத்தினரிடை இத் திட்டத்தை பிரபல்யப் படுத்துவதற்காக எடுத்த தீவிரமான முயற்சிகளின் பலனாக இவ்விடயத்தில் நடவடிக்கைகள் அதிகரிக்க உதவின. வடமத்திய ஊவா மற்றும் தென் மாகாணங்களில் மேற்கூறிய பயிர்களை பெருமளவில் முன்னோக்கிய விற்பனை ஏற்பாடுகளோடு பயிரிட பங்குபெறும் முகவர்கள், வேளாண்மைத் திணைக்களம் என்பவற்றின் உதவியுடன் விசேட செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டமையால் சுமார் 9,000 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்கள் கைச்சாத்திட வழிவகுத்தது.

முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களில் ஈடுபடும் வேளாண்மையாளர்கள் தமது உற்பத்திகளுக்கு உறுதிப்படுத்தப்பட்ட சந்தையையும் நியாயமான விலையையும் பெறமுடிந்ததனை அவதானிக்க முடிந்தது. நல்ல விலையொன்றிற்கான உத்தரவாதத்துடன் வேளாண்மையாளர்கள் தமது உற்பத்திகளின் தரத்தை அதிகரிக்க ஊக்கம் பெறுவதுடன் கொள்வனவாளர்களும் நல்ல தரத்திலான பொருட்களை தடங்கலின்றி உடன்படிக்கை கொண்ட விலையில் கிடைப்பதினால் நன்மையடைந்தனர்.

## புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

நெல் மற்றும் 27 பிற துணை உணவு பயிர்களின் செய்கைக்கான சலுகை அடிப்படையிலான கொடுகடன் வழங்கல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டிலும் தொடர்ந்து இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மொத்தப் பயிர்ச்செய்கை கடன்களில் 2001/2002 பெரும்போகத்தில் ரூ.308 மில்லியன் பெறுமதியான கடன்களும், 2002 சிறுபோகத்தில் ரூ.406 மில்லியன் பெறுமதியான கடன்களும் வழங்கப்பட்டிருந்தன. 2002 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்கள் 2001 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட ரூ.272 மில்லியன் பெறுமதியான கடன்களைக் காட்டிலும் கணிசமான அளவில் அதிகமானவையாகும். நீர்ப்பாசனத்தின் கீழான சோயாஅவரை, பயறு, மிளகாய் மற்றும், வெள்ளரிக்காய் என்பவற்றிற்கு நாட்டிலுள்ள நன்மதிப்புடைய கொள்வனவாளர்களுடன் செய்து கொள்ளப்பட்ட முன்னோக்கிய விற்பனை உடன்படிக்கைகளின் உதவியுடன் அதிக பயிர்ச்செய்கைக் கடன்கள் வழங்கப்பட்டமையே இந்த அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும். இதனை விட அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் விரிவாக்கத்தின் கீழ் 2002 முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் சிறுபோகத்தில் வேளாண்மையாளர்களிடமிருந்து நேரடியாகக் கொள்வனவு செய்ய ரூ.208 மில்லியன் கடனாக வழங்கப்பட்டது. 2002இல் இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்கள் தொடர்பில் அரசாங்கம் ரூ.24 மில்லியனை கடன் வழங்கிய வங்கிகளுக்கு வட்டி உதவு தொகைக்காக வழங்கியிருந்தது. இத் திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன்களுக்கான கடன் உத்தரவாத மீளளிப்புக்காக கடன் வழங்கிய வங்கிகளுக்கு ரூ.68 மில்லியன் வழங்கப்பட்டது. ரூ.20,000 இற்கும் குறைவான நெல் மற்றும் வாழைச் செய்கைக்காக 1999/2000 பெரும்போகம் முதல் 2001 சிறுபோகம் வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டு மீளளிக்கப்படாமல் பதிவழிக்கப்பட்ட கடன்கள் தொடர்பில் 2002 திறைசேரியினால் செலுத்தப்பட்ட தொகை ரூ.104 மில்லியனாகக் காணப்பட்டது.

## பயிர்க் காப்புறுதித் திட்டம்

வேளாண்மைக் கமத்தொழில் காப்புறுதி சபையானது 14 தெரிவு செய்யப்பட்ட பயிர்களுக்கும், கால்நடைக்கும், அறுவடைக்குப் பிந்திய நடவடிக்கைகளுக்குமான காப்புறுதிப் பாதுகாப்பு தொடர்ந்தும் வழங்கி வந்தது. செலிங்கோ காப்புறுதிக் கம்பனியும் இதே பயிர்களை கால்நடையையும் தமது திட்டத்தின் கீழ் உள்ளடக்கி ஆயுள் காப்புறுதியோடு தொடர்புடைய மேலதிக நன்மைகளை கொள்கைப் பத்திரங்களை வைத்திருப்போருக்கு வழங்கியது.

2002இல் வேளாண்மைக் கமத்தொழில் காப்புறுதிச் சபையாலும், சிலிங்கோ காப்புறுதிக் கம்பனியாலும் காப்புறுதி செய்யப்பட்ட மொத்த நெல் காணிகளில் அளவு முறையே 4,000 ஏக்டெயர்களாகவும், 19,692 எக்டெயர்களாகவும் இருந்தன. வேளாண்மைக் கமத்தொழில் காப்புறுதி சபையால் காப்புறுதி செய்யப்பட்ட அளவு 1,320 எக்டெயரால் அதிகரித்த செலிங்கோ காப்புறுதிக் கம்பனியால் காப்புறுதி செய்யப்பட்ட அளவு 1,045 எக்டெயரால் அதிகரிக்கப்பட்டது. இரு நிறுவனங்களாலும் உள்ளடக்கப்பட்ட வேளாண்மைக் காப்புறுதியின் அளவு ஆண்டின் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட மொத்த நிலப்பரப்பின் 2.8 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது. வேளாண்மைக் கமத்தொழில் காப்புறுதிச் சபையின் செலிங்கோ காப்புறுதிக் கம்பனியும் 2002இல் முறையே ரூ.2 மில்லியனையும், ரூ.4.2 மில்லியனையும் இழப்பீடாக வழங்கியிருந்தன.

## நுண்பாக நிதிமிடல் திட்டங்கள்

ஆரம்பத்தில் மரபுரீதியற்ற ஒரு கடன்வழங்கல் முறைமையாக கருதப்பட்டிருந்த முன்பாக நிதியிடலானது தற்போது ஒரு முழு நிறைவான நிதியிடல் வழிமுறையாகவும் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார வலுச்சேர்ப்பிற்கு சிறந்த கருவியாகவும் பரவலாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது. நுண்பாக நிதி என்பது சேமிப்பு, கடன் காப்புறுதி போன்ற பிற நிதிச் சேவைகளை சிறியளவில் வழங்குவதனை குறிக்கும். இச் சேவைகள் அதிக நிர்வாக செலவினங்கள் மட்டும் நுண்பாக நிதியைக் கையாள அவசியமாகும் மனித வளமின்மை போன்ற காரணங்களால் வணிக வங்கிகளால் பொதுவாக வழங்கப்படுவதில்லை. நிதிச் சேவைகளை வழங்குவதற்கு மேலதிகமாக பால் அடிப்படையிலான விடயங்கள் சிறிய தொழில் முனைவோரது உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு என்பனவும் நுண்பாக நிதி வழங்கலில் கருத்தில் கொள்ளப்படும் முக்கிய அம்சங்களாகும். நுண்பாக நிதி வழங்கலில் கடன் பெறுவோரின் எண்ணிக்கையை உச்சப்படுத்தும் அதேவேளை செலவினங்களை இழிவாக வைத்திருக்கும் வகையில் புதிதான கொள்கையும் நடைமுறைகளையும் பின்பற்றுதல் அவசியமானதாகும். எனவே சிறப்பியல்பு வாய்ந்த நிதிநிறுவனங்கள் நுண்பாக நிதிநிறுவனங்களாக பரிணமித்திருக்கின்றன. அல்லது வணிக வங்கிகள் விசேட நுண்பாக நிதி செயற்றிட்டங்களை வணிக அடிப்படையில் இச் சேவைகளை வழங்க உருவாகியுள்ளன. இச் செயற்றிட்டங்களில் சமூக அடிப்படையிலான நிறுவனங்களை அல்லது சுயஉதவிக் குழுக்களை ஈடுபடுத்துவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. இது கொடுக்கல் வாங்கல் செலவினத்தைக் குறைத்து கடன்களது மேம்பட்ட மேற்பார்வைக்கும், அறவிடலுக்கும் வகை செய்யும்.

சேமிப்புக்களை திரட்டுவதனூடாகவும் குறைந்த வருமானம் பெறும் நிலையுள்ளோரிடமிருந்தான கொடுகடனுக்கான கேள்வியை ஈடுசெய்வதனூடாகவும் 2002 இல் பல்வேறு நிறுவனங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் வங்கிகள் மற்றும் சமூக அமைப்புக்களால் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற நுண்பாக நிதித் திட்டங்கள் தொடர்ந்தும் நாட்டின் பொதுவான அபிவிருத்திக்குப் பங்களித்தன.

நுண்பாக நிதி நிறுவனங்கள் மற்றும் செயற்றிட்டங்களைப் பொறுத்தும் ஒரு முக்கிய விடயமாக இருப்பது அவற்றின் நிலைத்திருக்கும் நன்மையாகும். நுண்பாக நிதி நிறுவனங்களது கொள்அளவை

**அட்டவணை 10.17**
**தெரிவு செய்யப்பட்ட நுண்பாக நிதி நிறுவனங்களின் செயலாற்றம் / திட்டங்கள்- 2002**

| நிறுவனம் நிகழ்ச்சி திட்டம் | சட்ட அந்தஸ்து | நிதியியல் மூலம் | ஆளுகை முறைமை | மொத்த உறுப்பினர் கடன் பெறுநர்கள் | 2002இல் வழங்கப்பட்ட கடன்கள் (ரூ.மில்) | 31.12.2002இல் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (ரூ.மில்) |
|---|---|---|---|---|---|---|
| சமுர்த்தி நிகழ்ச்சி நிரல் | இலங்கை சமுர்த்தி அதிகாரசபை 1995ஆம்ஆண்டின் 30ஆம் இலக்கச் சட்டம் | அரசாங்க மற்றும் உறுப்பினர் சேமிப்புகள் | இலங்கை சமுர்த்தி அதிகாரசபை | 1,866,059(அ) | 3,078 | 10,118 |
| விவசாயிகள் வங்கி | விவசாய அபிவிருத்தி 2000ஆம் ஆண்டின் 46ஆம் இலக்கச் சட்டம் | அரசாங்க மற்றும் உறுப்பினர் சேமிப்பகள் | விவசாய அபிவிருத்தித் திணைக்களம் | 35,834(அ) | 293 | 587(இ) |
| கெமி புபுதுவ திட்டம் | 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கிச் சட்டம் | அட்டன் நசனல் வங்கி | அட்டன் நசனல் வங்கி | 40,000(ஆ) | 233 | 1,800 |
| கிராமிய வங்கி புதுமுறைக்கான திட்டம் | 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கிச்சட்டம் | மக்கள் வங்கி மற்றும் ஜீரிசட் | மக்கள் வங்கி மற்றும் ஜிரிசட் | 3,600(ஆ) | 111 | 216 |
| சர்வோதயம் | 1982ஆம் ஆண்டு 17ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் | நன்கொடை நிதியங்கள் தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் மற்றும் உறுப்பினர் சேமிப்புக்கள் | உத்தரவாதம் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சர்வோதய பொருளாதார தொழில் முயற்சி அபிவிருத்திச் சங்கங்கள் | 561,321(அ) | 1,020 | 5,507(ஈ) |
| காந்தாரண் திவி மெகா | 1988ஆம் ஆண்டு 30ம் இலக்க வங்கிச் சட்டம் | இலங்கை வங்கி | இலங்கை வங்கி | 1,220(ஆ) | 1 | 21 |
| சனசக்தி வங்கிச் சங்கங்கள் | சங்க உரிமைக் கட்டளை சட்டம் மற்றும் தொண்டர் அமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வையும்) 1980ஆம் ஆண்டு 31ஆம் இலக்கச் சட்டம் | நன்கொடை நிதியங்கள் மற்றும் உறுப்பினர் சேமிப்புக்கள் | மகளிர் அபிவிருத்தி அமைப்பு, அம்பாந்தோட்டை | 30,014(அ) | 77 | 645 |
| கூட்டுறவு கிராமிய வங்கிகள் | 1972ஆம் ஆண்டு 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் | தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் மற்றும் உறுப்பினர் சேமிப்புக்கள் | கூட்டுறவுத் திணைக்களம் மற்றும் பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் | 588,681(ஆ) | 1,050 | 4,827 |
| சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்கள் | 1972ஆம் ஆண்டு 5ஆம் இலக்க கூட்டுறவு அதிகாரிகளின் சட்டம் | தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய மற்றும் உறுப்பினர் சேமிப்புக்கள் | சனச சம்மேளனம் | 854,583(அ) | 3,176 | 5,526 |

(அ) உறுப்பினர்கள்
(ஆ) கடன் பெறுநர்கள்
(இ) 1998 பெரும்போகம் முதல் திரட்டிய
(ஈ) 1998முதல் திரட்டிய

மூலங்கள். சமுர்த்தி அதிகாரசபை
விவசாய அமைச்சு
மகளிர் அபிவிருத்தி சம்மேளனம் (அம்பாந்தோட்டை)
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்
மக்கள் வங்கி
இலங்கை வங்கி
அட்டன் நசனல் வங்கி
சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள்
சர்வோதய பொருளாதார தொழில்முயற்சி அபிவிருத்திச் சங்கம்

மேம்படுத்தும் சிறந்த நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தும் முறைமைகள் கணக்கீட்டு நடைமுறைகளை மேம்படுத்தல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அதிகரித்த பாவனை வணிக ரீதியான சாத்தியம் என்னும் விடயங்கள் நிலைத்திருத்தலை உறுதி செய்வதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்

இலங்கை 1977இல் சிறந்த பொருளாதாரக் கொள்கையை பின்பற்றத் தொடங்கியது. தனியார் துறையின் அதிகமான வலுவினை அரசாங்கத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளின் ஆதரவுடன் பயன்படுத்தி நாட்டின் விரைவுபடுத்திய பொருளாதார வளர்ச்சியை அடைவது இதன் நோக்கமாகும். இதன் விளைவாக முன்னைய வளர்ச்சி வீதமான 3 சதவீதத்திலிருந்து 1978-1985 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 5.5 சதவீத சராசரி வளர்ச்சி வீதத்தை நாடு அடைய முடிந்தது. எனினும், 1980 களில் நடுப்பகுதியில் சனத்தொகையின் கணிசமான தொகையினர் திறந்த சந்தைக் கொள்கையுடன் தம்மை இணைத்துக்கொள்ள இயலாத நிலையில் வளர்ச்சிச் செய்முறையிலிருந்து பின்தள்ளப்பட்டு நாடு முழுவதும் உயரளவான வறுமை காணப்படுவது தெரியவந்தது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட வறுமை ஒழிப்பு அணுகுமுறையொன்றினூடாக சனத்தொகையில் பின்தள்ளப்பட்ட குழுக்களுக்கு உதவுவதும் முழுமையான வறுமை ஒழிப்பு முறையொன்றினை பின்பற்றுவதனூடாக அவர்கள் வறுமைக்கோட்டிலிருந்து மேலேவர உதவுவதும் திறந்த சந்தைப் பொருளாதார முறைமையுடன் அவர்களை இணைப்பதும் அவசியமாகத் தேவைப்பட்டது. இந் நோக்கத்தை

**அட்டவணை 10.18**

**தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் செயலாற்றம் - நுண்பாக நிதிப்பிரிவு**

ரூபா மில்லியன்

| பங்காளர் நிறுவனங்கள் (ப.நி) | ப.அ. எண்ணிக்கை | மீள் நிதியின் வழங்கல் | | மூலதன மீளப்பெறல் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2001 | 2002 | 2001 | 2002 | 31.12.2002இல் வெளிநின்ற கடன்கள் | மீளப்பெறல் வீதங்கள் |
| அரசசார்பற்ற அமைப்புக்கள் | 131 | 153 | 163 | 116 | 103 | 239 | 69 |
| சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் | 15 | 27 | 13 | 15 | 17 | 130 | 47 |
| பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் | 6 | 81 | 76 | 41 | 69 | 114 | 100 |
| சனச அபிவிருத்தி வங்கி | 1 | 59 | 34 | 8 | 25 | 60 | 100 |
| ஏனைய வங்கிகள் | 4 | 8 | 1 | 18 | 5 | 2 | 100 |
| கூட்டுறவுச் சங்கங்கள் | 32 | 9 | 3 | 7 | 7 | 25 | 63 |
| மொத்தம் | 189 | 338 | 289 | 205 | 227 | 570 | 80 |

மூலம். தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்

அடைவதற்காக மத்திய வங்கி சிறிய வேளாண்மையாளர்கள் மற்றும் நிலமற்றோர் கடன் செயற்றிட்டத்தை இசுறு என சிங்களத்தில் பெயரிட்டு முன்னோடி வறுமை ஒழிப்புத் திட்டமாக ஆரம்பித்து கண்டி, புத்தளம், காலி, மாத்தறை என்ற நான்கு மாவட்டங்களில் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் மற்றும் கனடிய சர்வதேச அபிவிருத்தி முகவரகம் என்பவற்றின் அனுசரணையுடன் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் குறிக்கோள் புதிய வறுமை ஒழிப்பிற்கான முறையொன்றை பயன்பெறுவோரை சுயதெரிவு செய்முறையில் வங்கிகள் சமூக அமைப்புக்கள் மற்றும் பயன்பெறுவோரின் பங்குபற்றலுடன் உருவாக்குவதும் ஏனையோர் இதே நோக்கத்துக்காக இதனை மீளசெய்வதற்கான நியமங்கள் மற்றும் நடைமுறைகளை வகுப்பதுமாக இருந்தது. எனினும், 1990 களில் ஆரம்பத்தில் நாடளாவிய ரீதியில் ஒரு வறுமை ஒழிப்புத் திட்டத்தை ஆரம்பிப்பதன் தேவை உணரப்பட்டது. உடனடிப் பிரச்சனைகளான பெருமளவிலான வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை அதிகரிப்பு போன்ற 1988-1990 காலப்பகுதியில் இளைஞரிடையிலான அமைதியின்மையாக வெளிப்பட்ட காரணிகளை தீர்த்துவைப்பதனையே இத்திட்டம் நோக்கமாகக் கொள்ள வேண்டுமெனவும் உணரப்பட்டது. தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் முன்னோடியான சனசக்தி நம்பிக்கை நிதியம் 1991இல் உருவாக்கப்பட்டமை அரசாங்கம் இவ்வகையில் மேற்கொண்ட முதல் நடவடிக்கையாகும். தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த உலகவங்கியும், சேர்மன் குடியரசும் ஐ.அ.டொலர் 52.8 மில்லியன் பெறுமதியான சலுகை அடிப்படையிலான நீண்ட காலக்கடனை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கின. இதற்கு மேலதிகமாக இலங்கை அரசும் ஐ.அ.டொலர் 5 மில்லியன் தொகையை வழங்கியது. இச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்துவதற்கான நிர்வாக அமைப்பு நம்பிக்கை, நிதிய கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு நம்பிக்கை நிதியம் ஒன்றை உருவாக்கியதனூடாக ஏற்படுத்தப்பட்டது. நம்பிக்கை நிதியத்தின் நோக்கங்கள் அடையப்பட்ட கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் உதவியை இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பங்கு நிறுவனங்களாக பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முன்னர் சனசக்தி நம்பிக்கை நிதியம் என அழைக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியமே தேசிய ரீதியில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பன்முக நோக்கமுடைய வறுமை ஒழிப்பு உபாயமாகும் இலக்காக இருக்கின்ற வறுமையிலுள்ள பிரிவினர் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியினுள் சந்தை முறைமையினுள் உள்வாங்கப்படும் வகையிலும் வறுமைக்கோட்டைத் தாண்டும் வகையிலும் பல்வேறு உபாயங்களையும், கருவிகளையும் வறுமை ஒழிப்பிற்காக பயன்படுத்துவதனை இந்த அணுகுமுறை வேண்டிநிற்கின்றது. தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய உபாயமானது மனித வள அபிவிருத்தி பெண்கள் மற்றும் குழந்தை போசாக்கு கிராமிய சமூக அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் அடையாளங் காணப்பட்ட பயன்பெறுநர்களுக்கான நுண்பாக நிறுவனங்களுக்கான கடன் என்ற 4 அடிப்படை அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே இவ் உபாயமானது மிகுந்த வறுமையிலுள்ளோரை சமூக ஆதரவினூடாக அதிகாரமிக்கவர்களாக்கி அபிவிருத்தி செய்யும் ஒரு பொதுவான அணுகுமுறையையே கொண்டிருந்தது. கொடையாளிகள், அரசாங்கம், வங்கிகள், சமூக அமைப்புக்கள், பயன்பெறுவோர் ஆகிய அக்கறையுடைய எல்லாப் பகுதியினரதும் பங்களிப்புடனேயே இது நடைமுறைப்படுத்தப்பட்டது. இப் பங்குடமையின் நோக்கம் பயன்பெறுவோர்களுக்கு ஏனைய பகுதியினரின் ஆதரவுடன் படிப்படியான அதிகாரத்தை வழங்கி உரிமத்துவத்தை வழங்குவதாகும்.

இத் தந்திரோபாயம் வறுமை ஒழிப்பிற்கான முன்னைய அணுகுமுறைகளைக் காட்டிலும் மேம்பட்டதாக கருதப்படுகிறது. முன்னைய அணுகுமுறைகளில் அரச நிர்வாகமும், பயன்பெறுவோரும் மாத்திரமே சம்பந்தப்பட்டதோடு நலன்கள் பயன்பெறுவோருக்கு அவர்களது நடப்பு நுகர்வு மட்டத்தை பராமரிக்கும் வகையில் கொடுப்பனவுகளாக வழங்கப்பட்டன. பயன் பெறுபவர்களது எதிர்கால வருமானம் உழைக்கும் ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்கு முக்கிய அணுகுமுறைகளில் அக்கறை செலுத்தப்படவில்லை. இதனால் புதிய அணுகுமுறை முந்திய வழங்கல் உந்து முறைமையிலான வறுமை ஒழிப்பிற்கு மாறாக கேள்வி உந்து முறைமையிலான வறுமை ஒழிப்பை அடைய முனைகிறது எனக் கூறலாம். இப் புதிய அணுகுமுறை

இலங்கையில் தேசிய ரீதியில் ஒரு நிலைத்திருக்கத்தக்க வறுமை ஒழிப்பு திட்டத்தினை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

நிலைத்திருக்கத்தக்க எந்தவொரு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்திலும் சுயதெரிவு செய்முறை ஒன்றினூடாக இலக்குக்குழு தெரிவுசெய்யப்படுவதல் அவசியமாகும். தகுதிபெறாதோர் திட்டத்தினுள் நுழைந்து நலன்களை பெறுவதனைத் தடுப்பதற்கு இது முக்கியமானதாகும். பிறநாடுகளிலும் முன்னர் குறிப்பிடப்பட்ட இசுறு திட்டத்திலும் இந் நோக்கமானது மிகுந்த வறுமையுள்ளோர் தம்மைத் தாமே தகுதி பெறும் குழுக்களாக அடையாளம் கண்டு சுயஉதவிக் குழுக்களாக அதே சமூக அந்தஸ்து, வருமான மட்டம், பிரதேசத்தைச் சேர்ந்தோருடன் தம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதனூடாகவே அடையப்பட்டிருந்தது. இந் நடைமுறையானது மனோவியல் ரீதியான அழுத்தத்தைக் குறைக்கவும் தகுதியற்றோர் திட்டத்தில் இணைவதனைத் தடுக்கவும் அவசியமாகும். எனவே தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய அணுகுமுறையில் தெரிவு சமூக அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட வகையில் நிதியம் வழங்கலையும், வலுவையும் பயன்படுத்தி சமூக அமைப்புக்களது செயற்பாட்டை நெருக்கமாகக் கண்காணிக்க வேண்டிய தேவை முறைமை சிலர் தவறாக பயன்படுத்துவதைத் தடுக்க அவசியமாக இருந்தது.

தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதிய செயற்பாடுகள் 1997 வரை அனைத்து நான்கு கூறுகளுடனும் ஒரு ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்பு உபாயமாகவே தொடர்ந்தது. 1997இல் நுண்பாக நிதி உள்ளடக்கம் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளை நீக்கி முறைமை மறு வடிவமைப்புச் செய்யப்பட்டது. இதேவேளை நுண்பாக நிதிய நிர்வாகத்திற்குப் பொறுப்பாக மக்கள் வங்கியில் விசேட அலகொன்று விசேட நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் கீழ் உருவாக்கப்பட்டது. தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியமானது சமூக நிறுவனங்களில் அதன் இலக்கு பயன்பெறுவோரை அடையாயம் காணல், தெரிவு செய்தல், நுண்பாக நிதி வழங்கல், கடன் மீள்பெறுகையில் கண்காணிப்பு போன்ற நடவடிக்கைகளுக்குத் தங்கியிருந்தது. புதிய வடிவமைப்பானது ஏனைய முக்கிய கூறுகளின்றி தனியே நுண்பாக நிதியில் மாத்திரம் கவனம் செலுத்திய வகையில் நுண்பாக நிதி பயன்பெறுவோரை முதலில் நம்பகத்தன்மை மிக்க ஆட்களாக மாற்றி பின்னர் கடன் வழங்குதல் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நுண்பாக நிதிக்கான முறைமையிலிருந்து மாறுபட்டதாகக் காணப்படுகிறது. பன்னாட்டு ரீதியான சிறந்த நடைமுறைகள் புலப்படுத்துவதைப் போன்று நுண்பாக கடன்வழங்கல் மாத்திரம் நிலைத்திருக்கும் நல்ல வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிமுறையொன்றை நீண்டகாலத்தில் உருவாக்க முடியாது.

## 10.10 ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

### சேமிப்பு நிறுவனங்கள்

தேசிய சேமிப்பு வங்கியானது நாட்டின் மிகப்பெரிய சேமிப்பு வங்கி என்ற வகையில் இவ்வாண்டில் அதன் பணிகளையும், உற்பத்திகளையும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப உயர்தரமிக்க சேவையை வழங்கும் வகையில் விரிவுபடுத்தி மேம்படுத்தியது. "நண்பர்கள்" எனப் பெயரிடப்பட்ட ஒரு புதிய வைப்பினை வங்கி அறிமுகப்படுத்தியது. உலக சிக்கன தினத்தையொட்டி அறிமுகப்படுத்தப்பட்ட இவ் வைப்பானது வைப்பாளர்களுக்கு வாழ்நாள் முழுவதும் ஒரு மாத வருமானத்தை உறுதிசெய்தது.

"ரட்ட இதுறு" "ஸ்திரி" "விரைவு வீடமைப்பு கடன்கள்" என்ற மூன்று புதிய கடன்திட்டங்களை வங்கி இவ்வாண்டில் அறிமுகப்படுத்தியது. ரட்ட இதுறு திட்டமானது வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச்செல்லும் இலங்கையரின் பயண செலவினங்களுக்காக கடன் வழங்கும் திட்டமாகும். இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனின் வட்டியின் ஒரு பகுதி கடன்பட்டோரின் சார்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்தினால் ஏற்கப்படுவதாகும். ஸ்திரி திட்டத்தின் கீழ் ரூ.10,000 ஆகக் குறைந்த மீதியை தமது கணக்கில் பராமரிக்கும் பெண்கள் "ரன் சகான" கடனைப் பெற தகுதிபெறுவர். இக்கடனுக்கான வட்டி சாதாரண வட்டி வீதத்திலும் ஒரு சதவீதம் குறைவானதாகும். விரைந்த வீடமைப்பு கடன் திட்டமானது வாடிக்கையாளர் கோரினால் 24 மணித்தியாலங்களுக்குள் கடன் வழங்கப்படும் திட்டமாகும்.

வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய பணிகளுள் அந்நியச் செலாவணி தாள்கள் மற்றும் பயணிகள் காசோலைகளை வாடிக்கையாளர் கணக்குகளுக்கு ஏற்றுக்கொள்ளல், "வோல் ஸ்றீற் இன்ஸ்ரன்ட் காசு" முறையின் கீழ் எந்த இடத்திலும் விரைவான உள்நோக்கிய பணவனுப்பல்களை தேசிய சேமிப்பு வங்கியின் எந்தக் கிளைக்கும் அனுப்பமுடிதல, "முசாண்டம் எக்ஸ்ஜேன்ச்" எனப்படும் கொடுப்பனவு கட்டளைகள் முறைமியினை கிளைகளுக்கிடையே பணத்தை மாற்றுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாண்டில் வங்கி தன்னியக்க கூற்றுப்பொறி வசதிகளை 16 கிளைகளுக்கு அறிமுகப்படுத்தியதுடன் புதிதாக இரு கிளைகளை அதன் கிளை அமைப்பினுள் (102 கிளைகள்) சேர்த்துக்கொண்டது.

தேசிய சேமிப்பு வங்கி முன்னர் இருந்த சேமிப்புக்களை திரட்டுதல் என்ற நிலையிலிருந்து அதன் கிளைகளை இலாப நிலையங்களாக வாடிக்கையாளர்களுக்கு பொருட்களையும், பணிகளையும் விற்பனை செய்யும் வகையில் மாற்றியமைத்துள்ளது. வங்கிகளின் வைப்புக்களின் அளவு 2001இல் இருந்த ரூ.119 பில்லியனலிருந்து 2002 ரூ.135 பில்லியனாக அதிகரித்து 13.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. வெளிநின்ற மொத்தக் கடன்களும் 2001இல் ரூ.20 பில்லியனாக இருந்து 2002இன் இறுதியில் ரூ.26 பில்லியனாக அதிகரித்தது. இதனுள் 5 ஆண்டுகளுக்கும் அதிகமான முதிர்வுக் காலம் உடைய கடன்கள் மொத்த வெளிநின்ற கடன்களின் 31 சதவீதத்திற்கு வகைகூறின. இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் ரூ.13 பில்லியனாக விளங்க இவற்றில் பெரும்பங்கு வீடமைப்பு, தனிப்பட்ட மற்றும் நிதிநிறுவனங்களுக்கான கடன்களாக, காணப்பட்டன. தேசிய சேமிப்பு வங்கியின் கடன்களுக்கான வட்டி வீதம் 11-22.5 சதவீதமாகக் காணப்பட்டது. வங்கியின் முதலீடுகளில் பெரும்பகுதி

அரச பிணையங்களில் (88 சதவீதம்) காணப்பட்டது. தொகுதிக்கடன்கள், உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும் பங்குகள் என்பன ஏனைய முதலீடுகளாக இருந்தன.

### ஒப்பந்த ரீதியான சேமிப்பு நிறுவனங்கள்


காப்புறுதிக் கம்பனிகளைத் தவிர்ந்த பிரதானமான ஒப்பந்த ரீதியான சேமிப்பு நிறுவனங்களாக சேமநிதியங்கள் காணப்படுகின்றன. இவை உறுப்பினர்களுக்கு சேமலாப நலன்கள் வழங்குவதற்கு உருவாக்கப்பட்டவையாகும். ஊழியர் சேமநிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பொதுச்சேவைகள் சேமநிதியம் என மூன்று நிதியங்கள் அரசினால் கட்டுப்படுத்தப்படுகின்ற சேமநிதியங்களும், சுமார் 200 ஏனைய அங்கீகரிக்கப்பட்ட தனியார் சேமநிதியங்களும் 2002இன் இறுதியில் இலங்கையில் செயற்பாட்டிலிருந்தன. உதவு தொகைகள் என்ற வகையில் முதல் மூன்று நிதியங்களால் திரட்டப்பட்ட மொத்த சேமிப்புக்கள் இவ்வாண்டில் ரூ. 23 பில்லியன்களாகக் காணப்பட்டன.

ஊழியர் சேமநிதியம் நாட்டின் மிகப்பெரிய சேமநிதியமும் மிகப்பெரிய முதலீட்டு நிதியமுமாகும். 2002இல் ஊழியர் சேமநிதிய மொத்த உதவுதொகைகள் 2001இன் 17.7 பில்லியனுக்கு எதிராக ரூ.19.2 பில்லியனுக்கு அதிகரித்தன. இந்த அதிகரிப்பு இவ்வாண்டில் உறுப்பினர் தொகை 70,799 இனால் அதிகரித்ததால் பகுதியளவில் ஏற்பட்டதாகும். 2002இன் இறுதியில் மொத்த முதலீடுகள் 15 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து ரூ.283 பில்லியன்களாக இருந்தன. 2001இன் இறுதியில் முதலீடுகளின் தொகை ரூ.247 பில்லியன்களாக காணப்பட்டன. ஊழியர் சேமநிதிய முதலீடுகளில் பெரும்பாலானவை அரச பிணையங்களிலேயே இடப்பட்டிருந்தன. எனினும் தனியார் பிணையங்களை நோக்கி படிப்படியான முதலீட்டுப் பட்டியலிலான பன்முகப்படுத்தல் இடம்பெற்று வந்தன. முதலீட்டுப் பட்டியலில் அரச பிணைகளின் பங்கு 2001இல் 98.2 சதவீதத்திலிருந்து 2002இல் 97.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதனால் தனியார் பிணையங்களிலான முதலீடுகளின் பங்கு 2001இன் 1.8 சதவீதத்தலிருந்து 2002இல் 2.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. இப் பன்முகப்படுத்தலானது மொத்தப் பட்டியலில் ஒரு சிறு சதவீதமாக இருந்தபோதிலும் நிதியத்தின் பாரிய அளவை நோக்குகின்றபோது உண்மை நியதிகளில் இது முக்கியமானதாகும். (ஏறத்தாழ ரூ.7 பில்லியன்) பங்குச்சந்தையின் வளர்ச்சி, வட்டி வீதங்களின் வீழ்ச்சி என்பவற்றினால் இவ்வாண்டில் பங்குகள் மற்றும் நிலையான வருமானம் என்பவற்றைக் கொண்ட முதலீட்டுப் பட்டியலில் இருந்து மூலதன இலாபங்கள் கிடைத்தன. இதனால் ஊழியர் சேமநிதியத்தின் அடையப்பட்ட ஆண்டுச்சராசரி வருவாய் 2001 இன் 13.07 சதவீதத்திலிருந்து 2002இல் 14.83 சதவீதமாக அதிகரித்தது.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மொத்த உதவு தொகைகள் 9 சதவீதத்தினால் அதிகரித்து 2001இன் ரூ.3.2 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.3.5 பில்லியனாக அதிகரித்தது. இவ் அதிகரிப்பிற்கு மொத்தப் பங்களிக்கும் தொழில்வழங்குனர்களின் எண்ணிக்கை 6,932 இனால் அதிகரித்ததும் பகுதியளவில் காரணமாகும். 2001இல் ரூ.1.6 பில்லியனாக இருந்த மொத்த மீளளிப்புக்கள் 2002இல் ரூ.2.5 பில்லியனாக காணப்பட்டது. வெளிநின்ற உறுப்பினர் மீதிகள் 2001இன் இறுதியிலிருந்த ரூ.35 பில்லியனிலிருந்து 2002இன் இறுதியில் ரூ.40 பில்லியனாக அதிகரித்தன. முதலீட்டுப் பட்டியலானது அரசபிணையங்கள் (80 சதவீதம்), பங்குகள் (4 சதவீதம்), தொகுதிக்கடன்கள் (9 சதவீதம்), வங்கி வைப்புக்கள் (4 சதவீதம்) என்பவற்றை உள்ளடக்கி 2002 இன் இறுதியில் ரூ.38.9 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2001இன் இறுதியில் ரூ.33.8 பில்லியனாகக் காணப்பட்டது. சொத்துக்களின் ஒதுக்கீட்டினை பொறுத்தவரையில் அரச பிணையங்களின் பங்கு சொத்துப்பட்டியலில் முன்னைய ஆண்டைக்காட்டிலும் சிறிதளவு அதிகரித்தது. நீண்டகால அரச பத்திரங்களில் சொத்துப்பொறுப்பு சமப்படுத்தலுக்காக முதலீடு செய்தமை இவ்வதிகரிப்பிற்கு பகுதியளவில் காரணமாக அமைந்தது.

அரசினால் செயற்படுத்தப்படும் பொதுச் சேவைகள் சேமநிதியமானது ஓய்வூதியம் பெறாத குறித்த அரச ஊழியர்களின் நன்மைக்கானதாகும். 2002இன்

வரைபடம் 10.6
ஊழியர் சேமலாப நிதியம்



இறுதியில் ஏறக்குறைய 165,000 உறுப்பினர்களும், 50,000 நடைமுறை உறுப்பினர்களும் காணப்பட்டனர். நடைமுறை உறுப்பினர்களுள் பெரும்பாலானோர் றிசேவ் பொலிஸ் படையைச் சேர்ந்தவராவர். இந் நிதியத்தின் மொத்தச் சொத்துக்கள் 2002இன் இறுதியில் ரூ. 8.5 பில்லியனாகவும், 2001இன் இறுதியில் ரூ.6.3 பில்லியனாகவும் காணப்பட்டது. இவ்வாண்டில் உதவு தொகைகளாக ரூ.389 மில்லியன் கிடைத்தும் ரூ.92 மில்லியன் மீளளிப்புச் செய்யப்பட்டது.

சுமார் 200 வரையிலான தனியார்துறை சேமநிதியங்கள் ஆண்டு இறுதியில் 1.5 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்டிருந்தன. நிதியங்களின் மொத்தச் சொத்துக்கள் 2001இன் இறுதியிலிருந்த ரூ.53.2 பில்லியனலிருந்து 2002இன் இறுதியில் ரூ.79.7 பில்லியனுக்கு அதிகரித்தது.

## நீண்ட காலக் கடன் வழங்கல் நிறுவனங்கள்

பிரமுக சேமிப்பு மற்றும் முதலீட்டு வங்கி மூடப்பட்டதைத் தொடர்ந்து அறிக்கையிடும் நிறுவனங்களின் எண்ணிக்கை இவ்வாண்டில் 9 ஆகக் காணப்பட்டது. டி.எவ்.சி.சி. வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி மற்றும் பிற தனியார் சேமிப்பு அபிவிருத்தி வங்கிகள் போன்ற உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளையும், இரு வங்கியல்லா வீடமைப்பு நிறுவனங்களையும் உள்ளடக்கிய இக் கடன் வழங்கும் நிறுவனங்கள் வேளாண்மை, கைத்தொழில், சுற்றுலாத்துறை, வீடமைப்பு, வர்த்தகம் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக ரூ.32.4 பில்லியன் பெறுமதியான கடன்களுக்கு ஒப்புதல் அதிகரித்தன. ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன்கள் 15 சதவீத சிறந்த வளர்ச்சியைக் காட்டிய வேளையில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் 2001இன் ரூ.25.7 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.27.8 பில்லியன்களுக்கு 8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தன. வர்த்தக வங்கிகளால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பான 12 சதவீதத்தைக் காட்டிலும் இது சிறிது குறைவானதாகும். கடன் அதிகரிப்பானது வீடமைப்பு (36 சதவீதம்), நிதியியல் (136 சதவீதம்) ஆகிய துறைகளில் ஏற்பட்ட உயர் கடன் கேள்வி காரணமாக ஏற்பட்டதாகும். வேளாண்மை, கைத்தொழில், சுற்றுலா மற்றும் வர்த்தக துறைகளுக்கான கடன் வளர்ச்சி எதிர்க்கணியமாகக் காணப்பட்டது. டி.எவ்.சி.சி.வங்கியின் கடன் வழங்கலில் 15 சதவீத வளர்ச்சி ஏற்பட்ட போதிலும் இரு அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் மொத்தக் கடன்வழங்கல் முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 20 சதவீத வீழ்ச்சியை காட்டியது. இதற்கு தேசிய அபிவிருத்தி வங்கியின்கடன்வழங்கல் 34 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். கடன் அறவீட்டில் கவனம் செலுத்தியமை, கடன் வழங்கலில் அவதானமாக இருந்தமை, இடர்நேர்வு மிக்க கடன்பெறுவோரை கவரவென போட்டித்தன்மையான விலைக்குறைப்புக்களில் ஈடுபடாமை போன்ற காரணிகள் தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வளர்ச்சியை பாதித்ததாக கூறப்படுகிறது. இரு வங்கியல்லா வீடமைப்பு நிதிநிறுவனங்கள், சிலிங்கோ சேமிப்பு வங்கி, என்.டி.பி. வீடமைப்பு வங்கி, அரசஈட்டு முதலீட்டு வங்கி என்பன கூட்டாக ரூ.4 பில்லியன் பெறுமதியான கடன்களை வீடமைப்புத்துறைக்கு ஒப்புதல் அளித்திருந்தன. இது 46 சதவீத வளர்ச்சியாகும்.

**அட்டவணை 10.19**
**நீண்டகால கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு**

*ரூபா மில்லியன்*

| நோக்கம் | உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (அ) | | வீடமைப்பு நிதி நிறுவனங்கள் (ஆ) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2001 | 2002(இ) | 2001 | 2002(இ) | 2001 | 2002(இ) |
| வேளாண்மை | 1,191 | 1,048 | 0 | 0 | 1,191 | 1,048 |
| கைத்தொழில் | 9,518 | 6,939 | 0 | 0 | 9,518 | 6,939 |
| சுற்றுலா | 760 | 162 | 0 | 0 | 760 | 162 |
| வர்த்தகம் | 3,340 | 2,580 | 0 | 0 | 3,340 | 2,580 |
| நிதி | 1,846 | 4,370 | 0 | 0 | 1,846 | 4,370 |
| வீடமைப்பு | 3,209 | 4,476 | 1,320 | 1,720 | 4,529 | 6,196 |
| கடன் மீட்பு | 52 | 68 | 8 | 14 | 60 | 82 |
| ஏனையகடன்கள் | 6,722 | 10,850 | 249 | 231 | 6,971 | 11,081 |
| **மொத்தம் (ஒப்புதலளிக்கப்பட்டவை)** | 26,639 | 30,493 | 1,577 | 1,965 | 28,216 | 32,458 |
| வழங்கப்பட்டகடன்கள்(ஈ) | 24,583 | 26,196 | 1,109 | 1,576 | 25,692 | 27,772 |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக வழங்கப்பட்ட கடன்கள் | 92 | 86 | 70 | 80 | 91 | 86 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

(அ) பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் நீங்கலாக உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்.

(ஆ) வங்கியல்லா வீடமைப்பு நிதியியல் நிறுவனங்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

(இ) தற்காலிகமானவை.

(ஈ) முன்னைய ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்டு ஆய்விற்குரிய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.

வீடமைப்பு நிதிநிறுவனங்கள் கொள்வனவாளர்கள், வீடு கட்டுவோர் என்போருக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகள், முத்திரை வரி, தேசிய பாதுகாப்புத்தீர்வை, மூலதன இலாப வரி என்பன 2002 வரவுசெலவுத்திட்டத்தில் நீக்கப்பட்டமை வீடமைப்பு நோக்கங்களுக்கான கொடுகடன் கேள்வி வளர்ச்சியடைந்தமைக்கு பங்களிப்புச் செய்தன.

முதிர்ச்சிக்கால நியதிகளில் சுமார் 72 சதவீதமான உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் வெளிநின்ற கடன்கள் 5 ஆண்டுகளிலும் குறைந்த பிரிவினுள் காணப்பட வீடமைப்பு நிதிநிறுவனங்களின் இதற்குச் சமமான பங்கு 20 சதவீதமாகக் காணப்பட்டது.

## நிதிக் கம்பனிகள்

2001 இல் 25 ஆக இருந்த மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் எண்ணிக்கை 2002 இல் 26 ஆக உயர்ந்தது. ஒரு நிதிக் கம்பனி மற்றுமொரு நிதியியல் குழுவால் பொறுப்பேற்கப்பட்டது. தற்போதுள்ள நிதி நிறுவனங்கள் மத்திய வங்கியுடன் நிதிக் கம்பனிகளாகப் பதிவு செய்யப்படுவதில் காட்டிய ஆர்வம் ஆண்டின் இறுதிப் பகுதியளவில் காணப்பட்ட அபிவிருத்தியாகும். பதிவு செய்யப்படாத நிறுவனங்களுடன் பணத்தை வைப்புச் செய்வதிலுள்ள

நிறுவனங்களுடன் பணத்தை வைப்புச் செய்வதிலுள்ள ஆபத்துக்கள் பற்றி மத்திய வங்கி நடாத்திய பிரசார இயக்கம் இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். வங்கிகளாலும் அரச பத்திரங்களாலும் வழங்கப்படும் வட்டி வீதத்தின் வீழ்ச்சி காரணமாக தற்போது நிதிக்கம்பனிகள் மேலும் வைப்புக்களை கவரக்கூடியதாக இருப்பது மற்றுமொரு காரணமாக இருக்கலாம்.

வர்த்தக வங்கிகளின் 10 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது நிதிக் கம்பனிகளின் மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டைக் காட்டிலும் 19 சதவீத (7 பில்லியன் ரூபா) வளர்ச்சியை பதிவு செய்தன. சொத்துக்களின் வளர்ச்சி முதலீடுகள், கடன்கள், முற்பணங்கள் நிலையான சொத்துக்கள் ஆகியவற்றில் பிரதிபலிக்கப்பட்டது. ஆண்டின்போது பொருளாதார நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் வகையில் கடன்கள் முற்பணங்களின் குத்தகை நடவடிக்கைகளே வளர்ச்சிக்கு பிரதானமாக பங்களித்தன. முன்னைய ஆண்டைப் போலவே சொத்துக்களின் அதிகரிப்புக்கு நிதி முழுமையாக வைப்புத் திரட்டினால் நிதியிடப்பட்டு நிதியங்களின் மூலங்களில் கிட்டத்தட்ட 88 சதவீதத்திற்கு வகைகூறியது. 2001 இல் இருந்த 17 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2002 இல் 19 சதவீதமாக வைப்புக்கள் அதிகரித்திருந்தன. வர்த்தக வங்கி வைப்புக்கள் அரச பிணைகள் மீதான வட்டிவீத வீழ்ச்சியே நிதிக் கம்பனிகளை கவர்ச்சிகரமான சேமிப்புக் கருவிகளாக ஆக்கின. மூலதன நிதிகள், வைப்புகள் அதி உயர் வீதத்தில் அதிகரித்ததன் விளைவாக மொத்தப் பொறுப்புக்களில் மூலதனத்தின் பங்கு குறைவடைந்திருப்பினும் மூலதன நிதியம் 8 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

திறைசேரி உண்டியல்களைப் பிரதானமாகக் கொண்ட முதலீட்டு பட்டியல் ஆண்டின் போது 24 சதவீதத்தால் அதிகரித்தது. காசு, கேள்வி வைப்புக்கள் சேமிப்பு வைப்புக்களை உள்ளடக்கிய திரவச் சொத்துக்கள் வங்கிகளுடனான கேள்வி வைப்பு மீதங்கள் குறைவடைவதன் விளைவாக 29 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. குத்தகைக்கு விடல், வாடகை கொள்வனவு, காணிக் கடன்கள் போன்ற கடன் முற்பணப் பட்டியலின் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து சொத்து விடயங்களிலும் அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டிருந்தது. வாடகைக் கொள்வனவு செயற்பாடுகளில் 2001 இல் காணப்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக 2002 இல் முன்னேற்றம் காணப்பட்டது. 2002 ஓகத்துக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டியிருந்த பொருட்கள் சேவைகள் வரிக்கு மாறாக 2002 ஆகஸ்டின் பின்னர் 12 மாதத்திற்கு மேற்பட்ட பழமை வாய்ந்த பெருட்களின் வாடகைக் கொள்வனவு மீது எந்த விதமான வரியும் அறவிடப்படாமை இதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

**அட்டவணை 10.20**
**உரிமம்பெற்ற நிதிக் கூட்டு நிலையங்களின் சொத்துக்களும் பொறுப்புக்களும் (அ)**

ரூபா மில்லியன்

| விடயம் | 2001 திசெம்பர் 31இல் உள்ளவாறு | 2002 மாச்சு 31இல் உள்ளவாறு | 2002 யூன் 30இல் உள்ளவாறு | 2002 செத்தெம்பர் 30இல் உள்ளவாறு | 2002 திசெம்பர் 31இல் உள்ளவாறு (ஆ) |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| 1. கடன்களும் முற்பணங்களும் | 24,049 | 25,428 | 26,541 | 28,303 | 30,479 |
| வாடகைக் கொள்வனவு | 1,612 | 1,667 | 1701 | 1,832 | 2,129 |
| குத்தகை | 14,159 | 14,590 | 15,431 | 16,329 | 17,419 |
| உண்மைச் சொத்து | 2,672 | 3,462 | 3,456 | 3,739 | 4,274 |
| 2. பங்கு மூலதன முதலீடுகள் | 1,964 | 2,219 | 2,321 | 2,066 | 2,120 |
| 3. திறைசேரி உண்டியல்கள் | 3,078 | 3,406 | 3,653 | 3,922 | 4,146 |
| 4. காசும் வங்கி நிலுவைகளும் | 1,248 | 1,165 | 933 | 1,038 | 1,015 |
| 5. நிலையான சொத்துக்கள் | 3,113 | 3,182 | 3,347 | 3,497 | 3,580 |
| 6. ஏனைய சொத்துக்கள் | 3,492 | 3,508 | 3,587 | 3,735 | 3,571 |
| **மொத்தம்** | **36,944** | **38,907** | **40,382** | **42,561** | **44,910** |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| 1. மூலதனக் கணக்கு | 5,549 | 5,669 | 5,719 | 5,867 | 6,173 |
| 2. நிலையான வைப்புக்கள் | 23,329 | 24,607 | 25,194 | 26,226 | 27,153 |
| 3. வைப்புச் சான்றிதழ்கள் | 1,092 | 1,192 | 1,258 | 1,326 | 1,474 |
| 4. கடன்பாடுகள் | 1,258 | 1,388 | 1,485 | 2,323 | 2,780 |
| 5. ஏற்பாடுகள் | 1,810 | 1,791 | 2,061 | 2,105 | 2208 |
| 6. ஏனைய பொறுப்புக்கள் | 3,906 | 4,261 | 4666 | 4,715 | 5123 |
| **மொத்தம்** | **36,944** | **38,907** | **40,382** | **42,561** | **44,910** |
| மத்திய வங்கிக்கு அறிக்கையிட்ட நிதிக் கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை | 25 | 25 | 25 | 25 | 26 |

மூலம்: நிதிக்கம்பனிகள்

(அ) கணக்காய்வு செய்யப்படாதவை.
(ஆ) தற்காலிகமானவை.

## 10.11 சிறப்பியல்பு வாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்

### வணிக வங்கித்தொழில்

வணிக வங்கித்தொழில் துறையானது 2002இல் சில முன்னேற்றங்களைக் காட்டியது. வருமானம் இலாபத்தன்மை ஆகிய செயலாற்ற குறிகாட்டிகளின் வளர்ச்சியில் இது பிரதிபலிக்கப்பட்டது. ஆய்வின் கீழான ஆண்டில் அறிக்கையிடும் நிறுவனங்களின் எண்ணிக்கை 12 ஆக காணப்பட்டது. 2001இல் சொத்துக்கள் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு மாறாக மொத்தச்

**அட்டவணை 10.21**
**வணிக வங்கிகளின் நடவடிக்கைகளின் முன்னேற்றம்**
**2000-2001**

ரூபா மில்லியன்

| | 2001 (அ) | 2002 (ஆ) |
|---|---|---|
| 1. குத்தகையின் மீது பெறப்பட்ட வருவாய் | 705 | 767 |
| 2. வர்த்தக உண்டியல்களின் கழிவின்மீது வட்டி | 110 | 99 |
| 3. நிதி மற்றும் சந்தைப்படுத்தல் ஆலோசனை | 17 | 42 |
| 4. காப்புப் பொறுப்புத் தரகுகள் | 0 | 0 |
| 5. காப்புறுதித் தரகுகள் | 5 | 7 |
| 6. விளிம்பு வர்த்தகத்தின் மீதான வட்டி | 23 | 25 |
| 7. பங்குகளின் முதலீட்டின் மீதான இலாபம் | 21 | 146 |
| 8. திறைசேரி உண்டியல்களின் மீதான வட்டி | 7 | 60 |
| 9. கடன்கள் மீதான வட்டி | 387 | 330 |
| 10. பங்கிலாபங்கள் | 153 | 89 |
| 11. ஏனைய வருமானம் | 297 | 464 |
| 12. **மொத்த வருமானம்** | 1,723 | 2,027 |
| 13. வரிக்கு முன்னான இலாபம் | -935 | -392 |
| 14. மொத்தச் சொத்துக்கள் | 13,529 | 13,424 |
| வணிக வங்கி அறிக்கைகளின் எண்ணிக்கை | 12 | 12 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

சொத்துக்கள் ரூ.13.5 பில்லியனாக 2001இன் மட்டத்திலேயே காணப்பட்டது. எனினும், ஆண்டுக்கான மொத்த வருமானம் 18 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2001இன் ரூ. 1.7 பில்லியனிலிருந்து 2002இல் ரூ. 2.0 பில்லியனுக்கு அதிகரித்தது. இத் தொழில்துறையின் மொத்த இலாபங்கள் இன்னமும் எதிர்க்கணியமானதாக காணப்பட்டபோதிலும் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடைந்து மொத்த நட்டங்கள் 2001இல் ரூ.935 மில்லியனிலிருந்து ரூ. 391 மில்லியனாக குறைவடைந்தன. பல நிறுவனங்கள் இவ்வாண்டில் இலாபமீட்டியிருந்ததாலும் இத் தொழில்துறையினை பொதுவாக நோக்குகையில் இதன் இலாப அளவு குறிப்பாக ஒரு நிறுவனம் தொடர்ந்து நட்டமீட்டியமையால் பாதிக்கப்பட்டது. இத் தொழில்துறைக்கான முக்கிய வருமான மூலங்களாக குத்தகையிடல், பங்குவர்த்தகம், அரச பிணையங்களிலான முதலீடுகள், கடன்வழங்கல் என்பன தொடர்ந்து காணப்பட்டன. 2002இல் குத்தகையிடலானது வருமானத்தின் 38 சதவீதத்திற்கு வகைகூறியது.

### குத்தகைக் கம்பனிகள்

2000ஆம் ஆண்டின் 56 இலக்க நிதியியல் குத்தகைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கிணங்க 2002 இறுதியில் குத்தகை தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருந்த 50 நிறுவனங்கள் மத்திய வங்கியிடம் பதிவு செய்துகொண்டிருந்தன. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை நிறுவனங்களை விட வர்த்தக வங்கிகள் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது. வங்கிக்கு அறிக்கையிடும் சிறப்பியல்பு குத்தகை நிறுவனங்களின் எண்ணிக்கை 2001இல் 5 இலிருந்து 2002இல் 10 ஆக அதிகரித்தது. மொத்தச் சொத்துக்கள் 2002இல் ரூ.14.2 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.16.4 பில்லியனிற்கு வளர்ச்சியடைந்த வேளையில் மொத்த குத்தகை சொத்துப்பட்டியல் முன்னைய ஆண்டுகளைக் காட்டிலும் 76 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. மொத்த குத்தகை சொத்துப்பட்டியலின் குறிப்பிடத்தக்க முக்கிய பண்பாக விளங்குவது மொத்தப் பெறுமானத்தில் 84 சதவீதத்திற்கு வகைகூறும் பயணிகள் மற்றும் வர்த்தக ரீதியான ஊர்திகளில் அது பெருமளவு செறிந்து காணப்பட்டமையாகும். பயணிகள் ஊர்தி குத்தகையிடுதலான அதிக வளர்ச்சிக்குரிய காரணங்களில் ஒன்றாக கடந்த ஆண்டிலிருந்து

**அட்டவணை 10.22**
**சிறப்பியல்புவாய்ந்த குத்தகையிடல் கம்பனிகள் குத்தகையிடல் வசதிகளின் துறைவரியான பகுப்பாய்வு**

*ரூபா மில்லியன்*

| | 2001(அ) | 2002 (ஆ) |
|---|---|---|
| கைத்தொழில் | 698 | 862 |
| வேளாண்மை | 320 | 518 |
| வர்த்தகம் | 2,071 | 3,525 |
| போக்குவரத்து | 1,277 | 2,404 |
| கட்டடவாக்கம் | 141 | 331 |
| பணிகள் | 839 | 1,741 |
| ஏனையவை | 301 | 556 |
| மொத்தம் | 5,647 | 9,936 |

*மூலம்: வ/ப பீப்பள் லீசிங் கம்பனிகள்*

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

செயற்படும் வகையில் வாடகைக் கொடுப்பனவுகள் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்களிப்புச் செய்யப்பட்டமை இனங்காணப்பட்டுள்ளது. துறைகளின் படி வர்த்தகம், போக்குவரத்துப் பணிகள் என்பன வழங்கப்பட்ட குத்தகைகளுள் 77 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் வர்த்தகத்துறை அதிகூடிய 35 சதவீதப் பங்கைப் பெற்றுக்கொண்டது.

குத்தகை தொழில்துறையின் அண்மைய அபிவிருத்தியாக நிதிகளை பெற்றுக்கொள்வதற்காக சொத்து பிணையப்படுத்தல் போன்ற புதிய மூலங்கள் பயன்படுத்தப்பட்டமையாகும். எடுத்துக்காட்டாக இவ்வாண்டில் பீப்ள்ஸ் லீசங் கம்பனி மாத்திரம் கிட்டத்தட்ட ரூ.1 பில்லியன் பெறுமானமுள்ள குத்தகைப் பணையப்படுத்தலை நிறைவேற்றியது.

### தொழில்முயற்சி மூலதனக் கம்பனிகள்

மொத்த தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகளின் எண்ணிக்கை 2002இல் 7 ஆக காணப்பட்டது. 2001 இனைப் போன்றே 2002 இலும் நிதிப்படுத்தப்பட்ட புதிய செயற்றிட்டங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் காட்டவில்லை. பணிகள் துறை மாத்திரமே புதிய செயற்றிட்டங்களில் அதிகரிப்பினைக் காட்டியது. வேளாண்மை, தயாரிப்புத்தொழில் போன்ற ஏனைய துறைகள் புதிய செயற்றிட்டங்களின் நியதிகளில் வீழ்ச்சியைக் காட்டின. இது மொத்த முதலிடப்பட்ட நிதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியில் பிரதிபலிக்கிறது. 2002இன் இறுதியில் ரூ.1.5 பில்லியனாகக் காணப்பட்டது. முதலீடுகள் 2002இன் இறுதியில் ரூ.1.2 பில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்தன.

புதிய மற்றும் இடர்நேர்வு மிக்க செயற்றிட்டங்களுக்கு குறிப்பாக அறிவுசார் துறைகளான மின்பொருள் அபிவிருத்தி போன்ற மனித மற்றும் புலமை மூலதனத்தில் தங்கியிருக்கும் துறைகள் வங்கி நிதிகளை பெறுவதில் நெருக்கடிகளை எதிர்கொள்வதினால் நீண்டகால மூலதன நிதிகளை வழங்கும் தொழில் முயற்சி மூலதனக் கம்பனிகள் பொருளாதார வளர்ச்சி செயன்முறையில் பிரதான பங்கை வகிக்கின்றன. இப்பங்கை கருத்திற்கொண்டு 2002 இற்கான வரவுசெலவுத்திட்டத்தில் புதிய கம்பனிகளுக்கு 5 ஆண்டு வரி விடுதலையும் தொழில்முயற்சி மூலதனக் கம்பனிகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு பகுதியளவான வருமானவரி விலக்களிப்பும் வழங்கப்பட்டிருந்தன.

### காப்புறுதிக் கம்பனிகள்

அமனா இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டெட்டின் ஒரு துணைக்கம்பனியாக 2001இல் நிறுவப்பட்ட அமனா ரகாபுல் லிமிட்டெட் செயற்பட ஆரம்பித்ததை தொடர்ந்து 2002இல் காப்புறுதிக்கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 11 ஆக அதிகரித்தது. அரசாங்கம் தேசிய காப்புறுதிக் கம்பனியிலிருந்த தனது மிகுதிப் பங்குகளை ஜனசக்தி காப்புறுதிக் கம்பனிக்கு 2002இல் விற்பனை செய்தது. இதனையடுத்து தேசிய காப்புறுதி கம்பனி தற்போது ஜனசக்தி லைவ் காப்புறுதிக்கு முற்றிலும் சொந்தமாக்கப்பட்டுள்ளது. சொத்துக்கள் மற்றும் கிளை வலையமைப்பு என்பவற்றின் நியதிகளில் காப்புறுதித்துறை வளர்ச்சியடைந்திருந்தது. கிளை வலையமைப்பு 2001இல் 389 இலிருந்து 2002இல்

இறுதியில் 462 ஆக அதிகரித்த வேளையில் மொத்த சொத்துக்கள் 14 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து 2001இல் ரூ.37 பில்லியனிலிருந்து 2002இன் இறுதியில் ரூ.42 பிலலியனுக்கு அதிகரித்தன. மொத்தச் சொத்துக்களின் ஏறத்தாழ 70 சதவீதமான வளர்ச்சிக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் வகைகூறியது. தனியார் மயப்படுத்தலுக்கான தயார்படுத்தலுக்காக இலங்கைக் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டமையே சொத்துக்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பிற்கு காரணமாகும். எனினும், காப்புறுதித் துறையில் இவ்வாண்டுக்கான தேறிய இலாபங்கள் 2001இன் ரூ.2 பில்லியனிலிருந்து 2002இல் ரூ.1.4 பில்லியனுக்கு குறைவடைந்தன. துறைரீதியான இலாபமானது இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் இலாபம் சில பாரிய மீள் காப்புறுதி செய்யப்படாத கோரிக்கைகளை தீர்த்ததன் காரணமாக குறைவடைந்தமையால் பாதிக்கப்பட்டது.

ஆயுள், பொது விபத்து, மற்றும் மோட்டார் காப்புறுதி நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்தவேளையில் கடல் மற்றும் தீ காப்புறுதி நடவடிக்கைகள் இவ்வாண்டில் குறைவடைந்தன. இலாபமீட்டல் நியதிகளில் கடல் மற்றும் தீ காப்புறுதி நடவடிக்கைகள் எதிர்க்கணிய இலாபத்தை பதிவு செய்ததெனினும் மோட்டார் மற்றும் பொது விபத்துக் காப்புறுதிகள் சாதகமான தேறிய இலாபத்தை இவ்வாண்டில் உழைத்திருந்தன. ஆயுள் காப்புறுதி நிதிகளது மொத்த பெறுமதி ரூ.35.5 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 22 சதவீத வளர்ச்சியை காட்டின. புதிய ஆயுள் காப்புறுதி வாணிபத்தில் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணங்கள் மற்றும் காப்புறுதி செய்யப்பட்ட தொகைகள் என்பனவும் இதே போக்கினையே காட்டின. புதிய காப்புறுதிப் பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை 2,58,000 ஆகும். முதிர்வு, இறப்பு மற்றும் ஊனமுறல் கையளிப்பு மற்றும் ஏனையவற்றின் மீது செலுத்தப்பட்ட மொத்த நன்மைக் கொடுப்பனவுகள் 8 சதவீதத்தால் அதிகரித்து 2002இல் ரூ.2.4 பில்லியனாகக் காணப்பட்டன. பொதுக்காப்புறுதிப் பிரிவில் நடைமுறையிலுள்ள காப்புறுதிப் பத்திரத்திரங்களுக்காக தீ, பொது விபத்து, கடல் மற்றும் மோட்டார் காப்புறுதிகளை உள்ளடக்கி கிடைத்த தேறிய கட்டணங்கள் 2002இல் 17 சதவீதத்தால் அதிகரித்தன. மோட்டார் காப்புறுதி தொழில்துறை 23 சதவீதத்தால் அதிகரித்து தேறிய கட்டணங்களின் அதிகரிப்பிற்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியது.

காப்புறுதித்துறை பொருளாதாரத்தில் பிரதான பங்கை வகிக்கின்றது. இலங்கையில் காப்புறுதி செய்யும் கலாச்சாரம் நன்கு வளர்ச்சியடையாத காரணத்தால் வளர்ச்சிக்கான ஆற்றலை பெரிதும் கொண்ட துறையாக இது காணப்படுகிறது. உள்நாட்டு தனியார்துறை பன்னாட்டு காப்புறுதியாளர்களுடன் இணைந்து வகிக்கும் பிரதான பாத்திரத்தால் துறையின் வளர்ச்சிப்போக்கு நன்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்திலுள்ள அதன் பங்குகளை விற்பனை செய்வதனூடாக அரசாங்கம் காப்புறுதித்துறையில் அதன் நேரடி ஈடுபாட்டினை குறைக்கத் தீர்மானித்துள்ளது. இவ் விற்பனையானது 2002இல் பூர்த்தி செய்யப்படவிருந்த போதிலும் மந்தமான பன்னாட்டு சூழல் காரணமாக இச் செய்முறை தாமதமடைந்தது. இவ் விற்பனை 2003இல் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## 10.12 நிதிச் சந்தைகள்

### பணச்சந்தையும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையும்

2002 இல் பணச் சந்தை தொடர்ந்தும் திரவத் தன்மையிலிருந்து ஆண்டின்போது வெவ்வேறு சந்தைத் பிரிவுகளின் வர்த்தக அளவில் ஏற்பட்டஅதிகரிப்பை ஏற்படுத்தியது. மேம்படுத்தப்பட்ட ரூபாத் திரவததன்மையைக் கருத்தில் கொண்டு அதன் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களூடாக தொடர்ச்சியான அடிப்படையில் மத்திய வங்கி அதன் மிகை திரவத்தன்மையை உள்ளெடுத்தது. ஆண்டின்போதான கீழ்நோக்கிய சீராக்கலுடன் பணச்சந்தை வீதத்தின் மாறுமியல்பு வீழ்ச்சியடைந்து மத்திய வங்கி வீதங்களின் போக்கினை பின்தொடர்ந்தது. அழைப்புச் சந்தை வீதங்களும் வீழ்ச்சியடைந்தது. நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்பு பண வீதங்களும், மீள் கொள்வனவு நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களிடையே ஏறி இறங்கிக் கொண்டிருந்ததுடன் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மீள் கொள்வனவு வீதத்தைநோக்கி கூடுதலாக நகர்ந்தன. அரசின் பிணைய சந்தையில் முதன்மை ஏலங்களில் வழங்கலைக் காட்டிலும் கேள்வி மிகவும் கூடுதலாகச் காணப்பட்டதுடன் அரச பிணைய விளைவு வளைகோடு அனைத்து முதிர்வுகளுக்கு கீழ் நோக்கி அசைந்து சமதளமடைந்தது. தனியார் மாற்றல்கள், சேவைகள், மூலதன உள்வருகைகளின் கீழான உள்பவருகைகள் காரணமாக திரவத்தன்மை அதிகரித்ததன் விளைவாக குறிப்பாக 2002 மே மாதம் முதல் வெளிநாட்டு நாணயச் சந்தை ஸ்திரமாக இருந்தது. இதனைத் தொடர்ந்து அலுவல்சார் ஒதுக்கீடுகளை கட்டியெழுப்பும் பொருட்டு சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் 177 மில்லியன் ஐ.அ. டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கிக்கு இயலுமாக இருந்தது. முன்னோக்கிய சந்தையும் ஒப்பந்தங்களின் அளவு, காலநீட்சி ஆகியவற்றின் அதிகரிப்புடனும் முன்னோக்கிய கட்டண குறைப்புடனும் விரிவடைந்தது.

2002 இல் தொழிநுட்ப அபிவிருத்திக்கு இணையாக இருக்கும் வகையிலும் நிதி ஸ்திரப்பாட்டினை எய்துவதற்கு பிரதான காரணியாக இருக்கும் கொடுப்பனவு தீர்வுகளிலுள்ள முறைமை ஆபத்துக்களைக் குறைக்கும் வகையிலும் கொடுப்பனவு முறைமை உட்கட்டமைப்பை மேலும் மேம்படுத்தி தர முயர்த்தும் பொருட்டான நடவடிக்கைகளை வங்கி ஆரம்பித்தது. இவற்றுள் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் நாடெங்கணும் உடனடியாக பாதுகாப்பான உயர் பெறுமதியுடைய வங்கிகளுக்கிடையில் கொடுப்பனவு செய்யக்கூடிய வகையிலும் அரச பிணையங்களின் அதேநேர வர்த்தகப்படுத்தல் தீர்ப்பனவு செய்தல் ஆகியவற்றை கையாளுவதில் வங்கிகளுக்கு உதவக்கூடியவையான அதேநேர தேறிய முறைமை, ஆவணமற்ற பிணைத்தீர்வு முறைமை ஆகியன அடங்கும். இந் நடவடிக்கைகள் கொடுப்பனவு முறைமையின் உறுதிப்பாட்டையும் நம்பகத்தன்மையையும் மேம்படுத்தி பணச் சந்தை கொடுக்கல் வாங்கல்களின் செயற்றிறனை விரிவடையச் செய்வதற்கு உதவும்.

### வங்கிகளுக்கிடையிலான அழைப்பு பணச்சந்தை

சந்தைத் திரவ நிலையின் மேம்பாட்டின் காரணமாக வங்கிகளுக்கிடையே கடன் பெற வேண்டிய தேவை குறைக்கப்பட்டமையால் குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் வீழ்ச்சியடைந்தன. சராசரி அழைப்பு பண வீதங்கள் பெரும்பாலும் இலங்கை மத்திய வங்கி வீதத்தின் வேகத்திலேயே மாற்றமடைந்தன. இலங்கை மத்திய வங்கியின் நேர் மாற்று மீள் கொள்வனவு வீதங்களுக்குள் காணப்பட்ட அமைப்பு பணச் வீதங்கள் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மீள் கொள்வனவு வீதத்தைநோக்கி கூடுதலாக நகர்ந்தன. அரச பத்திரங்களுக்கு இரண்டாந்தர சந்தையில் வரிச்சலுகை அறிவிக்கப்பட்டதன் மேல் நவம்பர் 06 ஆம் திகதி அழைப்புப் பண வீதங்கள் உயர்ந்தன. ஆயினும் ஆண்டிறுதியளவில் வீதங்கள் சற்று வீழ்ச்சியடைந்தன.

2002 இல் சந்தையில் வர்த்தகப்படுத்தலின் அளவு 15 சதவீதத்தால் குறைந்தது. எவ்வாறாயினும் இவ் வீழ்ச்சி 2002 இன் இரண்டாம் அரைப் பகுதியிலேயே நிகழந்தது. சராசரி அழைப்புப் பணவீதச் சந்தைவீதம் 2001 இல் 12.65 சதவீதமாக இருந்து 2002 இறுதியில் 10.39 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

### முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

மிகையான திரவநிலை சூழ்நிலைகள், கொடுகடன் விரிவாக்கல் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தமை ஆகியவற்றின் விளைவாக சந்தை விருப்பு அரச பிணையங்களுக்கு சார்பாக அதிகரித்தது. அனைத்து முதலாந்தர ஏலங்களினது மிகவும் மேலதிகமாக இருந்ததது இதனை எடுத்துக்காட்டியது. பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மிதமடைந்தமை வட்டி வீதங்கள் மேலும் குறைக்கப்பட்டமை என்பவற்றை பிரதிபலித்தது. 364 நாள் திறைசேரி உண்டியலில் கூடுதலான வீழ்ச்சியுடன் விளைவு வளைகோடு படிப்படியாக கீழே நகர்ந்தது. 91 நாள் உண்டியல்களது மொத்தமாக 300 அடிப்படைப் புள்ளிகளால் வீழ்ச்சியுற்ற அதேவேளை 182 நாள், 364 நாள் உண்டியல்கள் முறையே 338 அடிப்படைப் புள்ளிகளாலும் 383 அடிப்படைப் புள்ளிகளாலும் வீழ்ச்சியடைந்தன. விளைவு வீதங்களின் இக்குறைப்பினைக் கருத்திற் கொண்டு ஒரு வருட உண்டியல் மற்றும் வர்த்தக வங்கியின் ஒருவருட நிலையான வைப்பு என்பவற்றின் விளைவு களுக்கிடையிலான இடைவெளி சுருக்கமடைந்தது.

அரச கொடுகடன் முகாமைத்துவத்துக்கு கூடுதலான நெகிழ்ச்சியை அளிப்பதற்கு இடமளித்து 2001 இறுதியில் 175 பில்லியன் ரூபாவாக இருந்த திறைசேரி உண்டியல்களின் எல்லை 2002 இல் மேலும் 250 பில்லியன் ரூபாவுக்கு மேலும் அதிகரிக்கப்பட்டது. மொத்தத்தில் அரசாங்கம் 2001 இல் 248 பில்லியன் ரூபாவுக்கு எதிராக 2002 இல் 343 பில்லியன் ரூபா பெறுமதியான உண்டியல்களை விற்பனை செய்தது. 2002 ஆம் ஆண்டிலான வழங்கலில் மீள் வழங்கல்கள் 303 பில்லியன் ரூபாவாக இருந்த வேளையில் இரு அரச வங்கிகளுடனான அரசாங்க மேலதிகப் பற்றின் பிணையப்படுத்துவதற்கென வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் உள்ளிட்ட புதிய உண்டியல்களின் வழங்கல் ரூ.40 பில்லியனாக காணப்பட்டது. மீள்வழங்கலில் பெரும்பகுதி 364 நாள் உண்டில்கள் வகையில் காணப்பட்டது. 2001 இன் 170 பில்லியன் ரூபாவுக்கு எதிராக வெளிநின்ற மொத்ததிறைசேரி உண்டியல்கள் ஆண்டிறுதியில் 211 பில்லியன் ரூபாவுக்கு உயர்ந்தன. இலங்கை மத்திய வங்கியினால் (முதலாந்தர ஏலங்களிலும் விசேட வழங்கல்களிலும் ஒதுக்கப்பட்டது) 94 பில்லியன் ரூபா தொகை பெறுமதியான திறைசேரி உண்டியல்கள்வாங்கப்பட்டதெனினும் மீள் கொள்வனவு, அத்துடன் கழிவிடல் என்பவற்றின் கீழான அதிகரித்த விற்பனை காரணமாக தொடர்ச்சியாக இரண்டாவது வருடமும் அரச பத்திரங்களின் உடைமைகளில் வீழ்ச்சி ஏற்பட்டது.

### மத்திய வங்கியின் மீள் கொள்வனவுச் சந்தை

சந்தையின் மிதமிஞ்சிய திரவத்தன்மை காரணமாக மத்திய வங்கியுடனான மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டின்போது குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தன. மீள் கொள்வனவு வசதி தொடர்ந்தும் ஓரிரவு அடிப்படையிலேயே காணப்பட்டது. சந்தையில் மிகை திரவத்தன்மை மேம்பட்டது காரணமாக 2002 இன் இரண்டாம் அரைப்பகுதியில் மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் கணிசமாக அதிகரித்தன. மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் மொத்தமாக 2001 இல் 55 பில்லியன் ரூபாவாக இருந்தமைக்கு மாறாக 1,076 பில்லியன் ரூபாவாக அதிகரித்தன. 2001 இறுதியில் 12.00 சதவீதமாக இருந்த மீள் கொள்வனவு வீதம் 2002 இறுதியில் 9.75 ஆகக் குறைக்கப்பட்டது.

### மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவுச் சந்தை

முன்னைய இரு ஆண்டுகளுக்கும் மாறாக நேர்மாற்று மீள் கொள்வனவுச் சந்தை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டது. ஏப்பிறல் புதுவருட காலத்துக்கு முன்னரான குறுகிய காலப்பகுதி தவிர பணச்சந்தை திரவ நிலையில் இருந்தமையால் 2002 இல் நேர்மாற்று மீள் கொள்வனவு ஊடக வங்கிகள் கடன் வாங்குவதற்கான கேள்வி குறைந்தது. மொத்த நேர்மாற்று மீள் கொள்வனவு அளவு 2002 இல் 4,780 பில்லியன் ரூபாவிலிருந்து 154 பில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்தது. 2001 இல் இருந்த 333 மில்லியன் ரூபாவுக்கு மாறாக 2002 இன் நான்காம் காலாண்டில் நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல் எதுவும் இருக்கவில்லை. 2001 இறுதியில் 14.00 சதவீதமாக இருந்த நேர்மாற்று மீள் கொள்வனவு வீதம் 2002 இறுதியில் 11.75 சதவீதமாக குறைக்கப்பட்டது.

### திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் கழிவிடல், மீள் கழிவிடல் சந்தை

ஆண்டின்போதான மொத்த உடனடி விற்பனைகளின் பெறுமதி (கழிவிடல்) 46.5 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இது முன்னைய ஆண்டிலிருந்து அநேகமாக 115 சதவீத அதிகரிப்பாக இருந்தது. வீழ்ச்சியடையும் வட்டி வீதங்களுக்கு மத்தியில் மத்திய வங்கியின் இரண்டாம் தரச் சந்தையின் திறைசேரி உண்டியல்களின் கழிவு வீதங்களுக்கும் முதலாந்தர சந்தையின் நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்களுக்குமிடையிலான வேறுபாட்டின் அளவு 5 அடிப்படைப் புள்ளிகளாக இருந்தமையாலேற்பட்ட

## அட்டவணை 10.23
## பணச் சந்தைத் தொழிற்பாடுகள்: 2000–2002

ரூபா மில்லியன்

| காலம் | அழைப்புப் பணச் சந்தை: மொத்தக் கடன் வழங்கல்/ கடன்பாடு | அழைப்புப் பணச் சந்தை: கால முடிவில் வெளி நின்றவை (அ) | முதலாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை: மொத்த வெளி நின்றவை (அ) | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை (கொள்வனவுகள்): வழங்கப்பட்ட தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை (கொள்வனவுகள்): மத்திய வங்கி | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை (கொள்வனவுகள்): வர்த்தக வங்கிகள் | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை (கொள்வனவுகள்): ஏனையவை | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை (கொள்வனவுகள்): மொத் தம் | இரண்டாந்தர சந்தை (மத்திய வங்கி) திறைசேரி உண்டியல்கள்: கழிவுகள் (விற்பனை) | திறைசேரி உண்டியல்கள்: மீள் கழிவுகள் (கொள்வனவு) | மீள் கொள்வனவு: விற்பனை | மீள் கொள்வனவு: முதிர்ச்சி | நேர்மாற்று மீள்கொள்வனவு திறைசேரி உண்டியல்: கொள்வனவு | நேர்மாற்று மீள்கொள்வனவு திறைசேரி உண்டியல்: முதிர்ச்சி | நேர்மாற்று மீள்கொள்வனவு திறைசேரி முறிகள்: கொள்வனவு | நேர்மாற்று மீள்கொள்வனவு திறைசேரி முறிகள்: முதிர்ச்சி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *2000* | | | | | | | | | | | | | | | | |
| *1ஆம் காலாண்டு* | 336,470 | 6,045 | 124,996 | 49,269 | 7,440 | 32,052 | 9,777 | 49,269 | 6,268 | 333 | 73,907 | 75,863 | 27,413 | 26,547 | 9,304 | 9,278 |
| *2ஆம் காலாண்டு* | 281,150 | 10,465 | 124,996 | 43,799 | 16,089 | 18,209 | 9,501 | 43,799 | 3,536 | 200 | 7,070 | 7,141 | 116,284 | 117,241 | 178,652 | 169,753 |
| *3ஆம் காலாண்டு* | 409,243 | 11,743 | 131,996 | 48,548 | 23,176 | 14,381 | 10,991 | 48,548 | 1,409 | 103 | 20,129 | 19,957 | 20,897 | 20,985 | 201,930 | 202,307 |
| *4ஆம் காலாண்டு* | 338,358 | 30,339 | 134,996 | 40,428 | 6,724 | 19,138 | 14,566 | 40,428 | 3,734 | 1,429 | 9,301 | 8,429 | 87,987 | 86,616 | 1,074,725 | 1,054,671 |
| *2001* | | | | | | | | | | | | | | | | |
| *1ஆம் காலாண்டு* | 294,051 | 5,638 | 134,995 | 46,207 | 1,180 | 26,800 | 18,227 | 46,207 | 2,808 | 596 | 8,427 | 9,010 | 144,251 | 142,406 | 1,714,557 | 1,711,451 |
| *2ஆம் காலாண்டு* | 263,931 | 4,760 | 150,420 | 64,221 | 38,643 | 15,457 | 10,121 | 64,221 | 4,009 | - | 10,228 | 9,969 | 101,449 | 104,271 | 1,492,124 | 1,502,694 |
| *3ஆம் காலாண்டு* | 427,901 | 7,802 | 160,420 | 61,289 | 35,470 | 15,882 | 9,937 | 61,289 | 7,924 | 126 | 13,408 | 13,648 | 15,552 | 15,721 | 993,363 | 1,000,058 |
| *4ஆம் காலாண்டு* | 510,734 | 9,132 | 170,995 | 76,295 | 44,238 | 15,763 | 16,294 | 76,295 | 6,947 | 42 | 23,428 | 21,689 | 964 | 1,190 | 318,149 | 331,543 |
| *2002* | | | | | | | | | | | | | | | | |
| *1ஆம் காலாண்டு* | 417,684 | 3,409 | 174,245 | 70,831 | 6,998 | 36,614 | 27,219 | 70,831 | 19,151 | 938 | 252,649 | 253,545 | 300 | 106 | 28,291 | 25,601 |
| *2ஆம் காலாண்டு* | 319,288 | 4,262 | 201,995 | 102,299 | 21,900 | 50,648 | 29,751 | 102,299 | 16,484 | 87 | 80,418 | 78,287 | 3,844 | 4,038 | 121,367 | 125,557 |
| *3ஆம் காலாண்டு* | 275,764 | 5,130 | 206,295 | 90,845 | 29,050 | 37,702 | 24,094 | 90,846 | 7,997 | 104 | 310,310 | 307,984 | 170 | 170 | 680 | 680 |
| *4ஆம் காலாண்டு* | 263,457 | 3,074 | 210,995 | 78,698 | 35,900 | 30,988 | 11,810 | 78,698 | 2,839 | - | 432,719 | 427,752 | 52 | 52 | - | - |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி.*

விலை வேறுபாட்டிலிருந்து பயனடையும் சந்தர்ப்பம் உடனடி விற்பனையை மேலும் கவர்ச்சிகரமாக்கியது. திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் 5 அடிப்படைப் புள்ளிகளைக் காட்டிலும் உயர்வான வீதத்தில் வீழ்ச்சியடைந்ததால் சந்தை பங்கேற்பாளர்கள் முதலாந்தர சந்தையிலிருந்து வாங்குவதைவிட இரண்டாந்தர சந்தையில் திறைசேரி உண்டியல்களை வாங்குவது இலாபகரமாககப்பட்டது. ஆண்டின் நடுப்பகுதியளவில் மூன்று சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்ட எல்லையை 125 அடிப்படைப் புள்ளிகளாக அதிகரிக்கும் பொருட்டு வங்கி திருத்த நடவடிக்கைகளை எடுத்தது. ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உடனடி விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறு இது எதிர்பார்க்கப்பட்ட விளைவை காட்டியது. முதலிரண்டு காலாண்டுகளில் 35.5 பில்லியன் ரூபாவாக இருந்த திறைசேரி உண்டியல்களின் மொத்தக் கழிவிடல் பெறுமதி இரண்டாவது இரு காலாண்டுகளில் 11 பில்லியன் ரூபாவாக மட்டுமே இருந்தது. மாறாக ஆண்டு முழுவதும் நிலவிய மிதமிஞ்சிய திரவத்தன்மை காரணமாகவும் வங்கி மீள் கழிவிடல் வீதங்களை விட திறைசேரி உண்டியல்களில் மீள் கழிவிடல்களின் சந்தை வீதங்கள் கூடுதலாக இருந்தமையாலும் திறைசேரி உண்டியல்களின் மொத்த மீள் கழிவிடலுக்காக கிட்டத்தட்ட 1 பில்லியன் ரூபாவாக மட்டுமே இருந்தது.

கழிவிடல் மீள் கழிவிடல் வீதங்கள் இரு முதலாம் தரச் சந்தை விளைவுகளுடன் நகர்ந்தன. ஆண்டின் ஆரம்பத்திலிருந்து ஆண்டிறுதிக்கு கழிவிடல் மீள் கழிவிடல், வீதங்கள் முறையே 12.87 சதவீதத்திலிருந்து 8.67 சதவீதம் ஆகவும் 14.17 சதவீதத்திலிருந்து 11.17 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தன.

### உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை

2001 சனவரியில் சுதந்திரமாக மிதக்கவிடப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டு நாணயச் சந்தை கூடிய உறுதிப்பாட்டை அடைந்ததுடன் சந்தை நடவடிக்கை மேம்படுத்தப்பட்டது. வங்கிகளுக் கிடையிலான வர்த்தகத்தின் அளவு அதிகரித்ததுடன் ஐ.அ.டொலருக்கு எதிராக 2002 இல் ரூபாய் 3.7 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தவுடன் கடந்த தசாப்தத்தின்போது இந்த ஆண்டு மதிப்பிறக்கம் 6–7 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் ஐ.அ.டொலருக்கு எதிராக முக்கிய பன்னாட்டு பெறுமான வளர்ச்சியடைந்ததால் ரூபா இவற்றுக்கெதிராக 10–18 சதவீதத்தால் பெறுமானத் தேய்வடைந்தது. முன்னோக்கிய சந்தை வியாபாரத்தினளவு அதிகரித்ததுடன் முன்னோக்கிய கட்டணம் வீழ்ச்சியடைந்தது. நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் பொருட்டு ஆண்டின்போது சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் 177 மில்லியன் ஐ.அ.டொலர்களை கொள்வனவு செய்வதற்கு வங்கிக்கு இயலுமாக இருந்தது. 2002 மார்ச்சில் சந்தையின் உறுதி நிலையைக் கருத்தில் கொண்டு வர்த்தக வங்கிகளின் தேறிய திறந்த நிலை மூலதன நிதியத்தின் 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு நிதியமாக உயர்த்தப்பட்டது.

உடன் , மறுநாள் காசு, காசு, முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்களை உள்ளடக்கிய

**சிறப்புக் குறிப்பு 20**


## மிகத் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

பணத்தின் அளவின் மீதும் (கொடுகடன் மட்டம்) அதனது செலவின் மீதும் (வட்டி வீதம்) செல்வாக்குக்கு செலுத்துவதன் மூலம் அதனது இறுதிக் குறிக்கோளான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டை எய்துவதற்கான கருவியொன்றாக மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்றது. உலகம் முழுவதிலுமான மத்திய வங்கிகள் ஒழுங்குவிதிகளின் ஊடாகத் தொழிற்படும் கொடுகடன் உச்சவரம்புகள் பரிமாண கட்டுப்பாடுகள், நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் போன்ற சந்தை சாராத நாணயக் கொள்கை வழிமுறைகளில் இருந்து விலகி கேள்வி மற்றும் வழங்கலின் சந்தைச் விசைகளின் ஊடான தொழிற்படும் சந்தை சார்ந்த கருவிகளுக்கு நகர்ந்து செல்லுகின்றன. நாணயக் கொள்கையைக் கொண்டுநடாத்துவதில் பொதுவான இந்தப் போக்குக்கு இசைந்து செல்லும் வகையில் இலங்கை மத்திய வங்கி அதனது முதன்மை நாணயக் கொள்கைக் கருவியாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் பெருமளவிற்கு தங்கியிருக்கத் தொடங்கியது. நாணயக் கொள்கைத் தொழிற்பாட்டின் பயனுறும் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் அதனது கொள்கை வழிமுறையின் முக்கிய மாற்றமொன்றாக 2003 ஆம் ஆண்டு மாச்சு 03 ஆம் நாள் வங்கி அதனது தீவிரமற்ற திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையிலிருந்து மிக தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையொன்றுக்கு நகர்ந்தது. இந்த கட்டுரை இந்த முறையில் அறிமுகப்படுத்தலுக்கான நியாயத்தையும் அதனது முக்கிய பண்புகளையும் நன்மைகளையும் குறிப்பிட்டுக் காட்டுகின்றது.

### தீவிரமற்ற திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

2003 ஆம் ஆண்டு பெப்ருவரி இறுதி வரை நிலவிய இந்தத் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு முறையின் கீழ் குறுகியகால திரவத் தன்மையினை முகாமைப்படுத்துவதற்காக மத்திய வங்கி மட்டுப்படுத்தப்படாத மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதிகளையும் நீண்டகால அடிப்படையில் சந்தைத் திரவத் தன்மையினை முகாமைப்படுத்துவதற்காக கழிவு மற்றும் மீள் கழிவு வசதிகளையும் வழங்கியது. இணக்கம் காணப்பட்ட காலப்பகுதியொன்றினுள் இணக்கம் காணப்பட்ட விலையொன்றில் மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் அதாவது வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்குமான (பங்கேற்கும் நிறுவனங்கள்) விற்பனைகள் அவற்றை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்துடன் அரசாங்க பிணையங்களை விற்பனை செய்யும் மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன. பொதுவாக இவை ஓரிரவு அடிப்படையிலேயே காணப்பட்டன. இதேபோன்று இணக்கம் காணப்பட்ட காலப்பகுதியொன்றில் இணக்கம் காணப்பட்ட விலையொன்றில் அவற்றினை மீண்டும் விற்பனை செய்யும் ஒப்பந்தத்துடன் அரசாங்க பிணையங்களைக் கொள்வனவு செய்யும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் அதாவது பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து அரச பிணையங்களை கொள்வனவு செய்வது குறுகிய கால அடிப்படையில் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. கழிவு வசதியின் கீழ் மத்திய வங்கி அதனது உடைமைகளிலிருந்து திறைசேரி உண்டியல்களை நேரடியாக விற்பனை செய்து நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மையினை ஈர்த்துக்கொண்ட வேளையில் மீள் கழிவு வசதியின் கீழ் அரசாங்க பிணையங்கள் நேரடியாகக் கொள்வனவு அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு பெருமளவு நிரந்தர அடிப்படையில் திரவத்தன்மைக்கு உட்படுத்தப்பட்டது. மத்திய வங்கியினால் முக்கியமாகத் தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதங்களில் (விலைகள்) மத்திய வங்கியினால் இந்த வசதிகள் வழங்கப்பட்டதோடு வர்த்தக வங்கிகளினாலும் முதனிலை வணிகர்களினாலும் அதாவது பங்கேற்கும் நிறுவனங்களினாலும் தமது சொந்த தற்றுணிபின்படி பயன்படுத்தப்பட்டன.

திறந்த சந்தை தொழிற்பாடுகள் திட்டமான அதனது மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களினால் வரைவிலக்கணம் செய்யப்பட்ட வீச்சினுள் உறுதியான முறையில் வட்டிவீதங்களைப் பேணுவதற்கும் அதனது கொள்கை வீதங்களை சீராக்குவதன் மூலம் நாணயக்கொள்கை இலக்குகளை எய்துவதற்கும் வங்கிக்கு இயலச் செய்தன. எனினும் பின்வரும் மட்டுப் படுத்தல்களின் காரணமாக இந்த முறையினை மேலும் மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்டன.



## சிறப்புக் குறிப்பு 20(தொடர்ச்சி)

(அ) பங்கேற்கும் நிறுவனங்களினால் அவற்றின் சொந்தத் தற்றுணிபின் படி திறந்தசந்தைத் தொழிற்பாடுகளின் கீழான வசதிகள் பயன்படுத்தப்பட்டமையினால் சந்தை திரவத்தன்மையினை நேரடியாக ஒழுங்கு முறைப்படுத்தி அதன் மூலம் நாணய இலக்குக்களை எய்துவதை உறுதி செய்வதற்கு மத்திய வங்கிக்கு கருவி ஒன்று காணப்பட வில்லை.

(ஆ) திறந்தசந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட வட்டி வீதங்கள் மத்திய வங்கியினால் நிருவாக ரீதியாகத் தீர்மானிக்கப்பட்டதுடன் சந்தையில் நிலவும் வீதங்களுடன் அவை பொதுவாக தொடர்புபடுத்தப்பட்டிருந்தாலும் கூட பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை சந்தையல்லா தீர்மானங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தன. எனவே சந்தையினால் தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் இந்த வசதிகள் வழங்கப்பட்டிருந்தால் நாணயக் கொள்கையின் சந்தை சார்ந்த கருவிகளுக்கான நகர்வுக்கும் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளின் சந்தை சார்ந்த தன்மைக்கும் அவை பெருமளவு இசைந்து செல்லுவதாக அமையும்.

(இ) மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களினால் வரைவிலக் கணப்படுத்தப்பட்ட செய்யப்பட்ட வீச்சினுள் வட்டி வீதங்களின் பெருமளவு தளம்பலுக்கான சாத்தியங்கள் காணப்பட்டன. வீச்சின் உச்ச மட்டம் அல்லது தாழ்ந்த மட்டத்துக்கு அண்மித்து இருப்பதற்கான போக்கொன்று வங்கிகளுக்கிடையேயான வீதங்களில் காணப்பட்டதுடன் தற்போதைய மீள் கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள் கொள்வனவு வீதங்களின் கீழ் கிட்டத்தட்ட 200 அடிப்படைப் புள்ளிகளினால் மாற்றப்படக் கூடியாதாகவும் இருந்தன. (பார்க்கவரைபடம் 1) அத்தகைய பாரிய தளம்பல் களுக்கான சாத்தியங்களைத் தவிர்க்கக் கூடிய முறை யொன்று நிதியியல் சந்தையின் உறுதிப்பாட்டுக்கு மிகவும் தூண்டுதலாக அமையும்.

(ஈ) பங்கேற்கும் நிறுவனங்களுக்கு தமது சொந்தத் தற்றுணிபினை பயன்படுத்தக் கூடிய வகையில் திறந்தசந்தைத் தொழிற்பாடுகளின் கீழான வசதிகள் கிடைக்கக் கூடியதாக இருக்கின்ற மையினால் திரவத்தன்மை முகாமைத் துவத்தை மேம்படுத்துவதற்கு அல்லது சந்தையில் போட்டியினை ஊக்குவிப்பதற்கான உள்ளார்ந்த ஊக்குவிப்புக்கள் அவர்களுக்கு இருக்கவில்லை. மேம்பட்ட திரவத்தன்மை முகாமைத்துவமும் போட்டியும் சந்தையின் அதிகூடிய செயல்திற னுக்கு இட்டுச்செல்வதோடு நிதியங்களின் செலவையும் குறைவடையச் செய்யும்.

### தீவிரமான திறந்தசந்தைத் தொழிற் பாடுகள்

நாணயக் கொள்கைத் தொழிற் பாடுகளின் சந்தை மயமாக்கலின் மேலதிக நடவடிக்கை ஒன்றாகவும் அவற்றின் பயனுறும் தன்மையினை மேம்படுத்துவதற்காகவும் மத்திய வங்கி சுறுசுறுப்பான திறந்த சந்தைத் தொழிற்பாடு ஒன்றினை அறிமுகப்படுத்தியதுடன் இது நாணயச்சந்தையில் போட்டியினை ஊக்குவிப்பதற்கும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு பங்கேற்பாளரின் திரவத்தன்மை முகாமைத் துவத்தை மேம்படுத்துவதற்குமான உள்ளார்ந்த ஊக்குவிப்புக்களையும் கொண்டுள்ளது. இந்த முறையானது தெளிவான நாணய இலக்கிடல் நாணயவரைச்சட்டமொன்றினுள் தொழிற்படுகின்றது. செலாவணி வீதமானது நாணயக் கொள்கையின் பெயரளவு நங்கூரமாக இனிமேலும் பயன் படுத்தப்படாமையின் காரணமாக ரூபா மிதக்க விடப்பட்டதைத் தொடர்ந்து நாணய இலக்கிடல் அதிகளவு முக்கியத்துவம் பெறுகின்றது. இந்த கட்டமைப்பினுள் இறுதிக் குறிக்கோளான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு விரிந்த பணநிரம்பல் மீதான இடைநிலை இலக்கொன்றின் ஊடாகப் பெறப் படவுள்ளதோடு மறுபுறத்தில் இது குறிக்கும் பணத்தின் மீதான தொழிற்பாட்டு இலக்குகளின் காலப்போக்குடன் இணைக்கப் பட்டுள்ளது. வங்கிகளுக்கிடையேயான ஓரிரவு வட்டி வீதங்களைப் பேணுகின்ற வேளையில் ஒதுக்குப் பண இலக்குகளை எய்துவதை உறுதி செய்வ தற்காக திற ந்தசந்தைத் தொழிற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்ற வேளையில் குறுகிய வீச்சொன்றிலான உறுதிப் பாட்டுடன் நாணயக் கொள்கைத் தீர்மானங்களின் தாக்கம் இதன் மீது உடனடியாகவே பிரதிபலிக்கப்படு கின்றது.

#### இந்த முறையின் முக்கிய பண்புகள்

(i) வட்டிவீத வீச்சு.

(ii) வீச்சிற்குள் உறுதிப்பாட்டுடன் வங்கிகளுக் கிடையேயான வீதத்தைப் பேணும் வகையில் மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவின் நாளாந்த ஏலம்.

(iii) நிலையியல் வசதிகள்.

(iv) நீண்டகால திரவத்தன்மையினை உட்படுத்து வதற்கு அல்லது ஆர்ப்பதற்கு மத்திய வங்கியின் தற்றுணிபுடன் திறைசேரி உண்டியல்களின்/ முற ிகளின் நேரடிக் கொள்வனவு/ விற்பனவு.

#### (i) வட்டிவீத வீச்சு

ஒதுக்குப்பண இலக்குகளை எய்வதற்கான பிரதான கருவி யாதெனில் இலக்குகளுடன் இசைந்து செல்லும் மட்டமொன்றில் மீள்கொள்வனவு வீதம் (கீழ் எல்லை) நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் (உச்ச எல்லை) என்பனவற்றின் நியதிகளில் குறித்

## சிறப்புக் குறிப்பு 20(தொடர்ச்சி)

துரைக்கப்பட்ட வட்டிவீத வீச்சு ஒன்றினை நிறுவுவதாகும். இந்த வீச்சானது பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளுக்கும் வாய்ப்புக் களுக்கும் எதிராக பொதுவாக மாதாந்த இடை வெளியில் கிரமமாக மீளாய்வு செய்யப்படுகின்றது. இந்த மீளாய்வுகளின் போது வீச்சினை மாற்று வதற்கு அல்லது மாற்றாதிருப்பதற்கான தீர்மானமொன்று மேற்கொள்ளப்படுகின்றது. உதார ணமாக ஒதுக்குப்பணத்தின் உண்மையான மட்டம் இலக்கை விட உயர்வாகக் காணப்பட்டால் தற்போதைய வீச்சானது ஒதுக்குப்பண இலக்குகளுடன் இசைந்து செல்லவில்லை என்பதை அது குறித்துக் காட்டுவதாக உள்ளது. எனவே ஏனைய பேரண்டப் பொருளாதார அபிவிருத்தி களினாலும் வாய்ப்புக்களினாலும் தேவைப் படுத்தப்பட்டால் இந்த வீச்சு மேல் நோக்கித் திருத்தப்படும். இதேபோன்று ஒதுக்குப்பணத்தின் உண்மையான மட்டம் இலக்கைவிட தாழ்வாகக் காணப்பட்டால் வீச்சின் கீழ்நோக்கிய திருத்தம் ஒன்று கருத்தில் கொள்ளப்படும். இதன்படி, மத்திய வங்கியின் நாணயக் கொள்கை வழிமுறையின் மாற்றம் வட்டிவீதவீச்சினை திருத்துவதன் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது. இத்தகைய தீர்மானத்தை மேற்கொள்ளுவதற்காக கருத்திற் கொள்ளப்பட்ட காரணிகளின் பகுப்பாய் வுடன் இந்தத் தீர்மானம் அறிவிக்கப்படும். உண்மையில் இது கொள்கை வட்டி வீதங்களின் கிரமமான மீளாய்வின்போது பெரும்பாலான நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறையொன்றாகும். இது மத்திய வங்கியின் நாணயக் கொள்கையினை பெருமளவில் ஒழிவு மறைவு அற்றதாக்குவதுடன் மேலாண்மையாளர் களின் நோக்கத்தினை சிறப்பாக அறிந்து கொள்ள சந்தையை இயலச்செய்வதோடு அதன் மூலம் தேவையற்ற ஊகங்களையும் குறை வடையச் செய்கின்றது.

### (ii) நாளாந்த மீள்கொள்வனவு/நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்

வட்டிவீதவீச்சு தரப்பட்டுள்ளபோது வட்டிவீத வீச்சினுள் பொருத்தமானது எனக் கருதப்பட்ட மட்டமொன்றில் வங்கிகளுக் கிடையேயான வீதங்களைப் பேணுவதற்காக வேண்டி திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மேற் கொள்ளப் படுகின்றன. உதாரணமாக சந்தையானது பெருமளவில் சமமாகக் காணப்படும்போது அதாவது வங்கிகள் தமது முழுமையான திரவத்தன்மை தேவையினையும் பெற்றுக்கொள்ள இயலுமாகக் காணப்பட்டால் வங்கிகளுக்கிடையேயான வீதத்தின் பொருத்தமான மட்டம் கிட்டத்தட்ட வீச்சின் நடுப்பகுதியில் காணப்படும். திரவத்தன்மையில் பற்றாக்குறை ஏற்படுமேயானால் வங்கிகளுக் கிடையேயான வீதம் வீச்சின் உச்ச எல்லையை நோக்கி நகரக்கூடிய போக்கினைக் கொண்டிருக்கும். இதேபோன்று மிகையொன்று ஏற்படுமேயானால் மீள்கொள்வனவு ஏலங்களின் மூலம் அது ஈர்த்துக்கொள்ளப்படும். மத்திய வங்கி தினந்தோறும் சந்தைத் திர வத்தன்மையை மதிப்பீடு செய்வதோடு நிதியியல் முறைக்கு திரவத்தன்மையை உட்படுத்துவதற்கு அல்லது அதிலிருந்து திரவத்தன்மையை ஈர்ப்பதற்கான தேவையை தீர்மானிக்கின்றது. இந்தத் தீர்மானம் சந்தைக்கு அறிவிக்கப்படுவதுடன் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களுக்கான விலைக் குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இந்த ஏலங்கள் பெருக்கி விலைக்குறிப்பீடு பெருக்கிவிலை அடிப்படையில் காணப்படுவதோடு ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் ஒவ்வொரு ஏலத்துக்கும் மூன்று விலைக்குறிப்பீடுகள் வரை மேற்கொள்ள இயலுமாவதோடு ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக் குறிப்பீட்டாளர்களுக்கான ஒதுக்கீடுகள் அவர்களது விலைக்குறிப்பீட்டு வட்டி வீதத்தில் மேற்கொள்ளப்படும். பங்கேற்கும் நிறுவனங் களுகிடையில் போட்டியினை ஊக்குவிப்பதன் கார ணமாக இந்த முறையிலான ஏலமானது விரும்பப்படுகின்றது.

### (iii) நிலையியல் வசதிகள்

மத்திய வங்கி தினந்தோறும் திரவத் தன்மையினை உட்புகுத்திய பின்னர் அல்லது ஈர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரும் கூட இன்னமும் பற்றாக்குறையினை அல்லது மிகையினைக் கொண்ட வங்கிகள் காணப்படக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. இந்த வங்கிகள் தமது தேவைப்பாடுகளை உள்ளடக்குவதற்காக வட்டிவீத வீச்சின் எல்லைகளின் நிலையியல் வசதிகள் என்றழைக்கப்படும் வசதிகள் காணப்படுகின்றன. பற்றாக்குறை வங்கிகள் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் கடன் பெற்றுக் கொள்ளக்கூடிய வேளையில் மிகையினைக் கொண்ட வங்கிகள் தமது மிகைகளை மீள்கொள்வனவு வீதத்தில் முதலீடு செய்ய முடியும். நாளாந்த ஏலத்தில் திரவத்தன்மை வசதிகள் வழங்கப்படும் சராசரி வட்டி வீதத்துடன் ஒப்பிடுகையில் நிலையியல் வசதிகள் வசதிகள் வழங்கப்படும் வட்டி வீதங்கள் தமது திர வத்தன்மையினை மிகக் கவனமாக முகாமை செய்து நிலையியல்வசதிகளை கிரமமாக தவிர்த்துக் கொள்ளுவதற்கு வங்கிகளை ஊக்குவிக்கும்.

### (iv) திறைசேரி உண்டியல்களின்/முறிகளின் நேரடிக் கொள்வனவு/விற்பனவு

நீண்டகால (அமைப்புமுறை) திரவ நிலைமைகளை கருத்தில் கொள்வதற்காக நீண்டகால திரவத்தன்மையை உட்புகுத்துவதற்கு அல்லது ஈர்ப்பதற்கு இந்தமுறையின் கீழ் இரண்டாம் நிலைச் சந்தையில் மத்திய வங்கியினால் அரசாங்கப் பிணையங்களின் நேரடிக் கொள்வனவும் விற்பனவும் வங்கியின் தற்றுணிபின்படி இடம்பெறும். உதார ணமாக நீண்டகாலப் பகுதியொன்றுக்கு மத்திய வங்கியினால் ஓரிரவு அடிப்படையில் பாரிய அளவிலான திரவத்தன்மையின் தொடர்ச்சியான

### சிறப்புக் குறிப்பு 20(தொடர்ச்சி)

உட்படுத்தலானது நீண்டகால (நிரந்தர) திரவத்தன்மைக்கான தேவை காணப்படுகின்றது என்பதைக் குறித்துக் காட்டுவதாக உள்ளது. எனவே நீண்டகால திரவத்தன்மையை உட்படுத்துவதற்காக மத்திய வங்கி இரண்டாம் நிலைச் சந்தையில் நேரடிக் கொள்வனவு அடிப்படையில் அரசாங்க பிணையங்களையும் முதனிலைச் சந்தையில் ஏல அடிப்படையில் திறைசேரி உண்டியல்களையும் கொள்வனவு செய்யும்.

#### தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் நன்மைகள்

தீவிரமான திறந்த சந்தைமுறையானது பங்கேற்கும் நிறுவனங்கள் மற்றும் மத்திய வங்கி ஆகிய இரண்டுக்குமான நன்மைகளைக் கொண்டுள்ளது. நிருவகிக்கப்பட்ட நிலையான வீதங்களுக்குப் பதிலாக சந்தைவீதங்களில் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு வசதிகள் கிடைக்கத் தக்கதாக இருப்பதனால் பங்கேற்கும் நிறுவனங்கள் நன்மையடைகின்றன. முன்னைய முறையுடன் ஒப்பிடுகையில் சந்தை வீதமானது வீச்சுக்கு உள்ளேயே காணப்படுவதனால் பங்கேற்கும் நிறுவனங்கள் தமது மீள் கொள்வனவுகளுக்காக இப்பொழுது உயர்ந்த வட்டிவீதமொன்றைப் பெற்றுக்கொள்கின்ற வேளையில் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளுக்காக குறைந்த கொடுப்பனவுகளை மேற்கொள்ளுகின்றன. இதற்கு மேலதிகமாக இந்தமுறையின் கீழ் சந்தையானது அனுபவங்களை பெற்றுக்கொள்ளுகின்றதுடன் பங்கேற்பாளர்கள் தமது திரவத்தன்மை மதிப்பீடுகளின் சராசரித் தன்மையினையும் முகாமைத்துவப் பிரயோகங்களையும் மேம்படுத்திக் கொள்ளுகின்றமையினால் வட்டி வீதங்களின் மாறுபடும் தன்மையின் சாத்தியங்கள் குறைவடையும். எனவே இந்த முறையானது பங்கேற்கும் நிறுவனங்கள் தமது திரவத்தன்மை முகாமைத்துவ பிரயோகங்களை மேம்படுத்திக் கொள்ளுவதற்கான ஊக்குவிப்புக்களைக் கொண்டிருப்பதுடன் அது அவர்களது மிகை ஒதுக்குகளை குறைவடையச் செய்யவும் அதன் மூலம் நிதியங்களின் செலவுகளைக் குறைத்துக் கொள்ளவும் இயலச் செய்யும்.

நாணயக் கொள்கை வழிமுறைக்கான சமிக்ஞையை வழங்கும் வட்டிவீத வீச்சு கிரமமான இடைவெளிகளில் மீளாய்வு செய்யப்படுவதோடு வீச்சை மாற்றுவதா இல்லையா என்ற மத்திய வங்கியின் தீர்மானம் அத்தீர்மானத்துக்கான பொதுக்காரணிகளை பகுப்பாய்வு செய்யும் கூற்று ஒன்றுடன் அறிவிக்கப்படும். இதன்படி, சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு நன்கு அறியத்தரப்பட்டுள்ளமையால் இது நாணயக் கொள்கையின் கொள்கை வழிமுறை மாற்றங்கள் தொடர்பான மேலதிக ஊகங்களை இல்லாமல் செய்யும்.

இந்தமுறையின் கீழ் மத்திய வங்கி சந்தைத் திரவத்தன்மையை தீவிரமாக முகாமைப்படுத்துவதன் காரணமாக நாணயக் கூட்டுக்கள் மீதான இலக்குகளை எய்துவதில் அதிகளவு பயனுறும் தன்மையைக் கொண்டிருப்பதோடு அது நாட்டின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டு இறுதிக் குறிக்கோளை எய்துவதற்கு இட்டுச் செல்லும்.

வங்கிகளுக்கிடையிலான சந்தையின் வர்த்தக அளவுகள் இவ்வாண்டில் 37 சதவீத அதிகரிப்பை காட்டின. 2002 இல் முன்னோக்கிய அளவு குறிப்பிடத்தக்க வகையில் 236 சதவீதத்தால் அதிகரித்தது. சந்தையின் கூடிய உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் ஒப்பந்தகாலங்கள் நீடிக்கப்பட்டமை முன்னோக்கிய சந்தை கொடுக்கல் வாங்கல்களிலான மற்றுமொரு அபிவிருத்தியாகும். 2002 இல் கொடுக்கல் வாங்கல்களின் மொத்தத் தொகை 281 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 946 ஐ.அ.டொலராக அதிகரித்தது. வங்கிகளுக்கிடையிலான சந்தையில் 50 சதவீத கொடுக்கல் வாங்கல்களுக்கு வகைகூறி வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் உண்ணாட்டு வங்கிகளுடன் ஒப்பிடுகையில் தீவிர செயற்பாடுடையனவாக இருந்தது.

### வர்த்தகப் பத்திரங்கள்

வர்த்தகப் பத்திரமென்பது தொழிற்படு மூலதன தேவைகளுக்காக கம்பனிகளால் வழங்கப்படுகின்ற ஒரு குறுங்கால பணச்சந்தை கருவியாகும். இது கடன்பட்டவருக்கும், கடன்வழங்கியவருக்கும் பாரம்பரியமான வங்கி உற்பத்திகளில் கிடைக்கின்ற வருவாயைக் காட்டிலும் அதிகமான வருவாய் வீதத்தை வழங்குகிறது.

இவ்வாண்டில் மொத்த வர்த்தகப் பத்திர வழங்கல்கள், மீள் வழங்கல்கள் உட்பட ரூ.24 பில்லியனாகக் காணப்பட்டன. 2001இல் இப் பெறுமதி ரூ.23 பில்லியனாக இருந்தது. வர்த்தக வங்கிகளின் கடன் வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வர்த்தகப் பத்திரங்களுக்கு கவர்ச்சித்தன்மை குறைந்தமையும் பிடித்துவைத்திருக்கும் வரி 2002இல் அறிமுகப்படுத்தப்பட்டமையும் அவற்றின் வழங்கல்களில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு காரணமாகக் கூறப்படலாம். பெரும்பாலான வழங்கல்களுக்கு (98 சதவீதம்) வர்த்தக வங்கிகளால் ஆதரவு வழங்கப்பட்டது. இச் சந்தையில் மூன்று மாத முதிர்ச்சியைக் கொண்ட வர்த்தகப் பத்திரங்கள் அதிகளவாக (75 சதவீதம்) காணப்பட்டன. ஆறு மாத முதிர்வுடைய பத்திரங்கள் ஏறக்குறைய எஞ்சிய முழு நிலுவைக்கும் பொறுப்பாக இருந்தன. ஆண்டிறுதியில் வெளிநின்ற வர்த்தகப் பத்திரங்களின் பெறுமதி ரூ.5.6 பில்லியனாகக் காணப்பட்டது.

### இலங்கை அபிவிருத்தி முறிகள்

தனியார் மயமாக்கல்கள் பெறுகைகள் மற்றும் ஏனைய வெளிநாட்டு நிதியிடலிலான குறைப்புக்களை கருத்திற் கொண்டு 2001 இல் முதல் முறையாக

மிதக்கவிடப்பட்ட ஐ.அ.டொலர் இனத்திலமைந்த இலங்கை அபிவிருத்தி முறிகளின் வழங்கல் 2002 இல் பூர்த்தி செய்யப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட எல்லையான 250 மில்லியன் டொலரில் அரசாங்கம் 2001 இல் 158.5 மில்லியன் ஐ.அ.டொலரை இரு தொகுதிகளில் திரட்டிய 2002 யூன் மாதம் மூன்றாம் நான்காம் தொகுதிகளின் மீதி 91.5 மில்லியன் ஐ.அ.டொலர் திரட்டப்பட்டது. இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கலின் கீழான மொத்தப் பொறுப்புக்களை 250 மில்லியன் ஐ.அ.டொலருக்கு அதிகரித்தது. முன்னைய இரு வழங்கல்களைப் போலல்லாது குறிப்பிடப்பட்ட மட்டுப்படுத்தலுடன் பெறுமதியையும், விளைவையும் தீர்மானிப்பதில் பங்கேற்பாளர்களுக்கு கூடிய நெகிழ்வுத்தன்மை அளிக்கப்பட்டது. இலங்கை அபிவிருத்தி முறிகள் ஆகக்குறைந்த 2 ஆண்டு முதிர்ச்சிக்காலத்துடன் 2 வருடங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் வழங்கப்பட வேண்டிய வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 6 மாத இலண்டன் வங்கிகளுக்கிடையேயான அளிப்பு வீதத்திற்கு மேலதிகமாக 2 சதவீதப் புள்ளிகள் வரை சேர்க்கப்பட்ட வீதமாகும். இலக்கிடப்பட்ட முதலீட்டாளர்கள், வெளிநாட்டுப் பிரசைகளும் அமைப்புக்களும், வதியாத இலங்கையர், அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களான வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் ஆகியோராகும். எவ்வாறாயினும் வெற்றிகரமான அனைத்து விண்ணப்பகாரர்களும் வர்த்தக வங்கிகளாகும். அனைத்து வழங்கல்களும் 2 வருடகால முதிர்ச்சிக காலத்தைக் கொண்டவையாகும். அத்துடன் நிறைவேற்றப்பட்ட சராசரி விளைவு 6 மாத இலண்டன் வங்கிகளுக்கிடையேயான அளிப்பு வீதங்களைக் காட்டிலும் 1.94 ஆகும்.

### திறைசேரி முறிகள்

வீழ்ச்சியடைந்து வரும் பணவீக்கம், மிதமிஞ்சிய திரவத்தன்மை சந்தை வீதங்களின் வீழ்ச்சி ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஆண்டின்போது கூடிய முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. அனைத்து முதிர்வுகளினதும் விளைவு வீதங்கள் வீழ்ச்சியடைந்தன. கடன் முகாமைத்துவ உத்தி கூடுதலான சந்தை நோக்கிய கடன்களை உருவாக்குவதாக இருந்தமையால் திறைசேரி முறிகள் ஊடாக சேர்க்கப்பட்ட மொத்தக் கடன் 2001 இல் 47 பில்லியன் ரூபாவாக இருந்து 2002 இல் 207 பில்லியன் ரூபாவாக கணிசமாக அதிகரித்தது. எதிர்காலத்தில் மீள் கொடுப்பனவு திரள்வதைகுறைக்கும் பொருட்டும் பிரதான விடயங்களை மேம்படுத்தும் பொருட்டும் பிரதான முதிர்வுகளிலுள்ள விடயங்களை திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரச பிணையங்களில் தமது முதலீடுகளைத் திட்டமிடுவதற்கு நிறுவன முறையான முதலீட்டாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் நோக்குடன் சந்தை பங்கேற்பாளர்களுக்கு கடன்பெறல் தொடர்பான நாட்காட்டி ஒன்று வழங்கப்பட்டது. சந்தைக் கடன் வாங்கலுக்கு மேலதிகமாக முதிர்வுத் தொகைகள் பெரிதாக இருக்கும்போது பிரதான முதலீட்டாளர்களுக்கு அவர்களது தற்போதுள்ள முதிர்வடையும் அரச பத்திரங்களுக்கு இணையான சில தனிப்பட்ட வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்க பிணையச் சந்தையையும் குறிப்பாக திறைசேரி முறிகளை மேலும் மேம்படுத்துவதற்கு ஆண்டின்போது

**அட்டவணை 10.24**
2002 திறைசேரி முறிகளின் வழங்கல்கள்

| முதிர்ச்சிக் காலம் | நறுக்கு வீதம் (ஆண்டு ஒன்றுக்கு %) (அ) | முதிர்ச் சிக்கான நிறையேற் றப்பட்ட சராசரி விளைவு (அ) | வழங்கல் (ரூ.மில்) | ஆண்டு இறுதியில் வெளி நின்ற தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|---|
| 2 ஆண்டுகள் | 12.50 | 14.94-11.86 | 21,422 | 49,488 |
| 3 ஆண்டுகள் | 12.25 | 14.50-11.13 | 77,810 | 124,795 |
| 4 ஆண்டுகள் | 12.00 | 13.79-10.85 | 19,221 | 48,125 |
| 5 ஆண்டுகள் | 11.75 | 14.18-11.02 | 45,170 | 65,720 |
| 6 ஆண்டுகள் | 11.50 | 14.18-11.08 | 43,500 | 59,000 |
| மொத்தம் | | | 207,123 | 347,128 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 2002ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட திறைசேரி முறிகளை உள்ளடக்குகிறது.

நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. இவை 2003 இறுதியளவில் இயங்கவிருக்கும் அரச பிணையங்களுக்கான வைப்பகம் உட்பட பத்திரங்களற்ற பிணைய முறைமை, முதன்மை வணிகர்களுக்கு மூலதனத்தைப் பேணுதல் மீதான வழிகாட்டு நெறிகள் வழங்கல், அரசாங்க பிணைய வர்த்தகம் பற்றி சந்தைப் பங்கேற்பாளர்களுக்கும் சந்தைக்கும் கூடிய தகவல்கள் வழங்குதல் போன்ற பணிகளை உள்ளடக்கும்.

2002 இன் மொத்த வழங்கல்களில் புதிய வழங்கலின் பெரும் பங்கு 5-6 வருட முதிர்ச்சிகளை கொண்டிருக்க காணப்பட்டது. மொத்தம் 45.2 பில்லியன் ரூபா பெறுமதியுடைய முறிகள் நிறுவனமுறையான முதலீட்டாளர்களுக்கு அதாவது தேசிய சேமிப்பு வங்கி ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது. இது மொத்த வழங்கலில் 22 சதவீதமாக மட்டுமே இருந்தது. 2001 இல் 22 பில்லியன் ரூபாயாக இருந்த முதிர்வடைந்த மொத்தத் தொகை 2002 இல் 89 பில்லியன் ரூபாயாக இருந்தது. அதற்கேற்ப 2001 இறுதியிலிருந்த ரூ.229 பில்லியனுடன் ஒப்பிடும்போது வெளிநின்ற மொத்த திறைசேரி முறிகள் ரூ.347 பில்லியன் ரூபாயாக இருந்தன.

மத்திய வங்கியின் கொள்கை வீதங்களிலான குறைப்பிற்கு இணங்கி அனைத்து மீட்சியையும் கொண்ட திறைசேரி முறிகள் மீதான விளைவுகள் 2002இல் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. இரு ஆண்டு, மூன்றாண்டு முறிகள் மீதான விளைவுகள் 2002இல் முறையே 308, அடிப்படைப் புள்ளிகளினாலும், 337 அடிப்படைப் புள்ளிகளினாலும் வீழ்ச்சியடைந்தன. 2001இல் வழங்கப்படாத 4, 5, 6 ஆண்டு முதிர்ச்சிகளுடை திறைசேரி முறிகள் 2002இல் வழங்கப்பட்டதுடன் அவற்றின் விளைவுகளும் 2002இல் கிட்டத்தட்ட 300 அடிப்படைப் புள்ளிக்ளினால் வீழ்ச்சியடைந்தன.

முதனிலை வணிகர்களின் இரண்டாந்தரச் சந்தை தொழிற்பாடுகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு திறைசேரி முறிகள் மீதான சந்தை விளைவு முதனிலைச் சந்தை விளைவுகளைப் பின்பற்றியிருந்தது. இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல் வாங்கல் அளவுகளும்

இவ்வாண்டில் அதிகரித்தன. விற்பனை செய்யப்பட்ட மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி முறையே 2001இன் ரூ.28 பில்லியன், ரூ.51 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2002இல் ரூ.108 பில்லியனுக்கும் ரூ.186 பில்லியனுக்கும் அதிகரித்தது.

### ரூபாக் கடன்

ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட கருவிகளினால் திரட்டப்பட்ட மொத்த மூலவளங்களின் சதவீதமாக எடுக்கும்போது ரூபா முறிகளின் ஒப்பீட்டளவிலான முக்கியத்துவம் 2001 இல் 19 சதவீதமாக இருந்து 2002 இல் 13 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு நீண்டகால முதிர்வுகளுடன் கூடிய மாற்று அத்துடன் வர்த்தகம் செய்யத்தக்க கருவிகளும் கிடைக்கக் கூடியதாக இருந்ததே காரணமாகும்.

2002 இல் 38,419 மில்லியன் ரூபா தொகையான 16 ரூபாக் கடன்கள் மிதக்கவிடப்பட்டன. 2001 இல் ரூ.50,910 மில்லியனாக இருந்த மொத்த வழங்கலுடன் ஒப்பிடும்போது இது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியாகும். ரூபாக் கடன்களுக்கு பிரதானமாக உதவுதொகை செலுத்தியவர்கள் ஊழியர் சேமலாப நிதியம், தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பன முறையே 23,366 மில்லியன் ரூபா (62 சதவீதம்), 12,434 மில்லியன் ரூபா (33 சதவீதம்) 1,239 மில்லியன் ரூபா (3 சதவீதம்) தொகையை பங்களிப்புச் செய்தன. உதவு தொகை செலுத்திய பிறரின் பங்களிப்பு 800 மில்லியனாக (2 சதவீதம்) மட்டுமே இருந்தது. 2002 இன் அனைத்து வழங்கல்களும் 2-5 வருட முதிர்வுகாலத்தைக் கொண்டிருந்ததுடன் வட்டி வீதம் ஆண்டுக்கு 13 சதவீதமாக இருந்தது.

**அட்டவணை 10.25**
2002 இல் திரட்டப்பட்ட ரூபாக் கடன்கள்

| ஆண்டு | முதிர்ச்சிகள் (ஆண்டுகள்) | பெறுமதி (ரூ.மில்லியன்) | வட்டிவீதங்கள் (ஆண்டுக்கு %) |
|---|---|---|---|
| 2001 | 2 | 19,500 | 15.00 |
| | 2-5 | 1,399 | 15.00 |
| | 2-5 | 13,100 | 13.00 |
| | 6-8 | 4,410 | 13.00 |
| 2002 | 2-5 | 38,419 | 13.00 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

43,532 மில்லியன் ரூபா தொகையான ரூபாக் கடன்கள் முதிர்வில் மீளச் செலுத்தப்பட்டன. அத்துடன் 2001 இன் இறுதியில் 292,813 மில்லியன் ரூபாவாக இருந்த வெளிநின்ற ரூபாக் கடன் 2002 இன் இறுதியில் 287,700 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

### கூறு நம்பிக்கைகள்

முன்னைய ஆண்டில் 12 ஆக இருந்த கூறு நம்பிக்கைகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆக அதிகரித்தது. 2002 இறுதியில் அவை மூன்று வளர்ச்சி நிதியங்களையும், நான்கு சம நிதியங்களையும், ஒரு சுட்டெண் நிதியத்தையும், ஐந்து வருமான நிதியங்களையும் கொண்டிருந்தன. பங்குச் சந்தையில் காணப்பட்ட தொடர்ச்சியான நன்மையான ஓட்டம் காரணமாக ஏற்பட்ட இலாபங்களின் விளைவாகவும் பிணைப் பட்டியல் அதிகரிப்பதற்கு உதவிய சந்தை வட்டி வீதங்களின் வீழ்ச்சியின் காரணமாகவும் தேறிய மொத்தச் சொத்துக்களும் தேறிய சொத்துக்களும் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட அதிகரிப்பை பதிவு செய்தன. வீழ்ச்சியடையும் வட்டி வீதச் சூழலில் கூடிய விளைவுகளைப் பெறும்நோக்கில் அரசப் பிணையங்களிலான முதலீடு குறுகியகால திறைசேரி உண்டியல்களிலிருந்து நீண்டகால திறைசேரி முறிகளுக்கு நகர்ந்தமை ஆண்டின் போது அவதானிக்கக்கூடியதாக இருந்த மற்றொரு அம்சமாகும். மீள் கொள்வனவு போன்ற மிகவும் குறுகியகாலக் கருவிகளின் முதலீடு பூஜ்ய மட்டத்துக்கு வீழ்ந்தமையிலிருந்து இது மேலும் புலனாகின்றது. முதலீடுகளின் மொத்தப் பெறுமதியின் அதிகரிப்பு ஒரு கூறுக்கான தேறிய சொத்து அதிகரிப்பை ரூ.7.35 இலிருந்து 2002 இல் 9.62 இற்கு உயர்த்துவதற்கு பங்களிப்புச் செய்துள்ளது.

வங்கி வைப்புக்களின் வட்டி வருமானத்தில் தங்கியிருக்கும் ஓய்வூதியம் பெறுவோர் போன்ற பொதுமக்களின் ஒரு பிரிவினரின் கொள்வனவுச் சக்தி மீது வீழ்ச்சியுறும் வட்டி கொண்டிருக்கும் எதிர்மாறான தாக்கம் வீழ்ச்சியுறும் வட்டி வீதத்துடன் தொடர்பான மற்றுமொரு விடயமாகும். அவர்களின் இடர் விளைவு ஆர்வத்தைப் பொறுத்து வங்கி பைப்புக்களிலிருந்து அரச பத்திரங்கள், பங்குகள், நீண்டகால கடன் பிணையங்கள் போன்ற பிற வடிவங்களிலான முதலீடுகளுக்கு மாறுவதே சாத்தியமான ஒரு உத்தியாகும். எவ்வாறாயினும் உயர் விளைவு சந்தேகமின்றி உயர் இடர்நேர்வுடன் தொடர்புடையதென்பதுகவனிக்க வேண்டும். மூலவளங்களின் கட்டுப்பாடுகளின் காரணமாக தனிப்பட்ட முதலீட்டாளர் ஒருவரால் நீக்க முடியாத ஒழுங்கற்ற இடர் பகுதியினை அநேகமாக நீக்கியிருப்பதால் கூறு நம்பிக்கை நல்லதொரு முதலீட்டு வடிவமாகும்.

**அட்டவணை 10.26**
கூறு நம்பிக்கைகள்(அ)

| | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 (ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. மொத்தச் சொத்துக்கள் ரூ.மில். | 2,687 | 2,652 | 2,173 | 2,874 | 4,432 |
| 2. தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூ.மில். | 2,675 | 2,639 | 2,162 | 2,794 | 4,415 |
| 3. பங்குகளிலான முதலீடு (ரூ.மில்.) | 1,773 | 1,660 | 1,109 | 1,806 | 2,443 |
| (2) இன் விகிதமொன்றாக (3) | 66 | 63 | 51 | 65 | 55 |
| 4. கூறுகளை வைத்திருப்போரின் எண்ணிக்கை | 27,709 | 27,536 | 26,863 | 25,936 | 25,291 |
| 5. வழங்கலிலுள்ள கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை (மில்.) | 393 | 392 | 387 | 380 | 459 |
| 6. கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை | 10 | 12 | 12 | 12 | 13 |

(அ) திசெம்பர் முடிவில்.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: கூறு நம்பிக்கைகள்.

## 10.13 மூலதனச் சந்தை

2002 ஆம் வருடத்தில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் பங்குச் சந்தை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடு காணப்பட்டதுடன் குறிப்பாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் பிரதான சந்தைக் குறிகாட்டிகள் உயர் விளைவைப் பதிவு செய்தன. 2002 இல் இலங்கை பங்குச் சந்தை உலகிலேயே மிகச் சிறப்பாக இயங்கும் பங்குச் சந்தைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டது. பல கம்பனிகள் பொதுமக்களுக்கு ஆரம்பப் பங்குகளை வழங்கியதுடன் இலங்கை அரசாங்கம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் பங்குகளில் 12 சதவீதத்தை விற்றல், சில கம்பனிகள் தொகுதிக்கடன் முறிகளை வழங்கல் போன்ற நடவடிக்கைகளால் முதன்மைச்சந்தை நடவடிக்கைகளில் மீட்சிஏற்பட்டது. 2002 இல் பல கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலியடப்பட்டன. இப் புதிய நிரற்படுத்தல்களுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில்

**அட்டவணை 10.27**
**பங்குச் சந்தைக் குறிகாட்டிகள்**

| | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|
| 1. சந்தை மூலதனவாக்கம்(ரூ.பில்லியன்)(அ) | 89 | 124 | 163 |
| 2. புதிய வழங்கல்களின் எண்ணிக்கை (எண்ணிக்கை) | 2 | - | 5 |
| 3. வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை (மில்லியன்) | 6 | - | 244 |
| 4. வழங்கப்பட்ட புதிய பங்குகளின் பெறுமதி (ரூ.மில்லியன்) | 60 | - | 3,637 |
| 5. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியன்) | 449 | 747 | 1,220 |
| 6. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.மில்லியன்) | 10,624 | 13,905 | 30,183 |
| 7. விலைச் சுட்டெண்கள் (அ) | | | |
| கொ.ப.சந்தை எல்லாப் பங்குகளும் | 447.6 | 621.0 | 815.1 |
| மிலங்கா | 698.5 | 1,031.0 | 1,374.6 |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.


(அ) ஆண்டு முடிவில்.

நிரற்படுத்தப்பட்ட கம்பனிகளின் வகைப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் துறைகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டில் 17 ஆக இருந்து 2002 இல் 20 ஆக் உயர்ந்தது. ஆண்டின்போது மின்வலு சக்தி, உடல்நல கவனிப்பு, தகவல் தொழில்நுட்பத் துறைகள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. 1998 ஆம் ஆண்டில் இருந்து அடுத்தடுத்து தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்களைத் தொடர்ந்து தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல காணப்பட்டமை 2002 ஆம் ஆண்டின் பிரதான அபிவிருத்தியாகும்.


சமாதான பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் காரணமான சிறந்த எதிர்பார்ப்பு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முக்கிய கொள்வனவுகள், பொருளாததாரத்தில் காணப்படும் மீட்சி அறிகுறிகளுடன் கம்பனிகளின் இலாபங்களில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடு ஆகியவை ஆண்டின்போது கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் காணப்பட்ட எழுதிறன் தன்மையான போக்குக்களுக்குப் பங்களித்தன. நாணயக்கொள்கை தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து நிலையான வருமானப் பிணையங்கள் மீதான வட்டி வீதங்களின் வீழ்ச்சி, சந்தைநடவடிக்கை

**வரைபடம் 10.7**
**பங்குச்சந்தைக் குறிகாட்டிகள்**


**வரைபடம் 10.7.1**
**பங்குவிலைச் சுட்டெண்கள்**




**வரைபடம் 10.7.2**
**பங்குச்சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள்**




**வரைபடம் 10.7.3**
**இலங்கையரல்லாதோரின் தேறிய கொள்வனவுகள்**




மேம்பாட்டுக்கு சாதகமான பங்களிப்பைச் செய்துள்ளன. மேலும், 2002 இன் வரவு செலவுத் திட்டம் அமுலாக்கப்பட்டதுடன் பங்கிலாப வருமானம் மீது தனியாக 10 சதவீதவரி விதிக்கப்படுகின்றது. இதனால் 10 சதவீதத்துக்கு மேலான வீதத்தில் வரி அறவிடப்படும் உயர்ந்த வருமானப் பிரிவினருக்கு நன்மை கிட்டுகின்றது. அத்துடன் கம்பனி வரிகள் மீது 2001 ஏப்பிறலில் விதிக்கப்பட்ட இந்த 20 சதவீத வரி கம்பனி 2002 ஏப்பிறல் 1 இலிருந்து நீக்கப்பட்டமை வரிக்குப் பிந்திய இலாபத்தை அதிகரித்தது.

**அட்டவணை 10.28**
2002இல் கம்பனிகளால் முன்வைக்கப்பட்ட பங்குகள் (அ)

| கம்பனியின் பெயர் | வழங்கப்பட்ட மாதம் | பங்குகளின் எண்ணிக்கை ('000) | முகப்புப் பெறுமதி (ரூ.) | பங்கு வட்டம் (ரூ.) | முன்வைக்கப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.மில்) | பின்னுறுதியாளரால் ஏற்கப்பட்ட பங்குகள் ('000) | பொதுமக்களால் வாங்கப்பட்ட பங்குகள் ('000) |
|---|---|---|---|---|---|---|---|
| டச்வுட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட் | பெப்புருவரி | 800 | 10 | - | 8 | - | 800 |
| ஈ சனலிங் லிமிட் | மார்ச்சு | 6,667 | 10 | 5 | 100 | - | 3,118 |
| ரீஸ் அக்ரோ லிமிட் | நவெம்பர் | 2,500 | 10 | - | 25 | - | 2,500 |
| லங்கா கொஸ்பிஸ்ரல்ஸ் கோப்பரேசன் லிமிட் | நவெம்பர் | 20,555 | 10 | 5 | 308 | - | 20,555 |
| இலங்கை ரெலிகொம் லிமிட் | நவெம்பர் | 216,583 | 10 | 5 | 3,249 | - | 216,583 |

(அ) பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிலையம்

எவ்வாறாயினும் 2002 இன் இறுதிக் காலாண்டில் 2002 நவம்பரில் சமர்ப்பிக்கப்பட்ட 2003 இன் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட சில முன்மொழிவுகள் பங்குச் சந்தை நடிவடிக்கைகளில் பின்னடைவை ஏற்படுத்தின. இவற்றுள் வங்கிகள் உட்பட நிதி நிறுவனங்களின் மீது விதிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, முக்கியமானதாகும்.

ஆண்டின் முறிச்சந்தை மேலும் விரிவடைந்தது. இது தொடர்பிலான முக்கியமான அபிவிருத்தியானது ஹட்டன் நசனல் வங்கியினால் 10 வருட தொகுதி முறிகள் செத்தெம்பரில் வழங்கப்பட்டமையாகும். இதுவரையில் சன்ரெல் லிமிட்டெட்டினால் வழங்கப்பட்ட ஏழு வருடகால முறியே நிரற்படுத்தப்பட்ட தொகுதி முறிகளில் நீண்டகால தவணை உடையதாக இருந்தது. ஆண்டினபோது வட்டி வீதங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தமையால் திறைசேரி முறிகள் வழங்குவதனூடாக அரசாங்கம் கடன் பெறுதல் 2002 இல் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தது. 2001 இல் 2, 3 வருடகால திறைசேரி முறிகள் மட்டுமே வழங்கப்பட்டதற்கு மாறாக ஆண்டின்போது 2 இலிருந்து 6 வருடம் வரையிலான திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. இவற்றின் பெரும்பகுதி ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியிலேயே வழங்கப்பட்டது. ஐ.அ.டொலரால் குறித்துரைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் மூன்றாம் நான்காம் தொகுதிகள் அரசாங்கத்தினால் 2002 யூனில் வழங்கப்பட்டன.

## முதனிலைச் சந்தை

பங்குகள் தொகுதிக் கடன்களை வழங்குவதன் மூலம் மொத்தம் 7.3 பில்லியன் ரூபா தொகையைச் சேகரித்த முதன்மைச் சந்தை நடவடிக்கைகள் தொடர்பில் மிகவும் சிறப்பான ஒரு ஆண்டாக 2002 அமைந்தது. 2002 இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனைச் சந்தையில் பங்குகளின் 4 ஆரம்ப பொதுவழங்கல்கள் இருந்தவேளை 4 கம்பனிகள் அறிமுக வகையில் பட்டியலிடப்பட்டன. அதேவேளை நவெம்பர் 2002 இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் எப்போதும் இருந்திராத மிகப் பெரிய வழங்கலாக இலங்கை அரசினால் சந்தை மூலதனவாக்கல் நியதிகளில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை சந்தையில் பட்டியலிடப்படவுள்ள மிகப் பெரும் கம்பனியான சிறிலங்கா ரெலிக்கொம்மின் பங்கு விற்பனை அமைந்தது. ஆண்டின்போது குறிப்பாக ஆண்டின் பின் அரைப்பகுதியில் கம்பனிகளின் இலாபத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து உரிமைப்பங்கு வழங்கல்களினது எண்ணிக்கையும் பெறுமதியும் 2002இல் அதிகரித்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உரிமைப்பங்கு வழங்கலின் பெறுமதி 2002 இல் 352 சதவீதத்தினால் 964 மில்லியன் ரூபாவுக்கு அதிகித்திருந்தது. உபகாரப் பங்கு வழங்கல்களின் பெறுமதி 2001 இன் ரூ.472 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.429 மில்லியனாக இருந்தது. 2002 இல் மொத்தம் ஒன்பது கம்பனிகள் உரிமைப்பங்கு வழங்கல்களை மேற்கொண்ட வேளையில் பதினெட்டுக் கம்பனிகள் சிறப்புக் உபகாரப்பங்கு வழங்கலை மேற்கொண்டன. ஆண்டின்போது ஒன்பது கம்பனிகள் புதிதாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் கம்பனிகளின் எண்ணிக்கை 2001 இன் இறுதியில் இருந்ததுபோல் 238 ஆகவே மாற்றமடையாது இருந்தமைக்கு இவ்வாண்டில் ஒன்பது கம்பனிகள் பட்டியலிருந்து நீக்கப்பட்டமையே காரணமாகும்.

## இரண்டாந்தரச் சந்தை

2001 இன் இறுதிக் காலாண்டில் சந்தை நடவடிக்கை மீட்சி பெற்றதைத் தொடர்ந்து செத்தெம்பர் மத்தியில் தாய்லாந்தில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் முதலாம் சுற்று முடிவுடன் பிரதானசந்தைக் குறிகாட்டிகள் உச்ச செயலாற்று கையைப் பதிவு செய்ததுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் இரண்டாந் தரச் சந்தை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக் முன்னேற்றம் காணப்பட்டது. திசெம்பர் 2001 இல் இடம்பெற்ற அதிகரிப்புக்களை தொடர்ந்து ஆண்டின் ஆரம்பத்தில் இலாபமீட்டுதல் தெளிவானதாகக் காணமுடிந்ததுடன் 2002இன் முதல் இரு மாதங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்களே தேறிய விற்பனையாளர்களாக இருந்தனர். சந்தையில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தீவிரமாக இயங்கியதைத் தொடர்ந்து குறிப்பாக யூன் மற்றும் செத்தெம்பர் மாதங்களில் மாதாந்த புரழ்வு 5 பில்லியன் ரூபாவை விஞ்சியது. 1999 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மிலங்கா விலைச்சுட்டெண் என்றுமில்லாத உயர்மட்டமான 479.8 இனை செத்தெம்பர் 26ஆம் நாள் அடைந்த அதேநாளில் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் ஆண்டின் போதான அதன் அதி உயர்வான 860.3 இனை அடைந்தன. (1994 மார்ச் 1 ஆம் திகதி 1,378 புள்ளிகளாக உச்ச நிலையில் இருந்தது. இதனைத் தொடர்ந்து எவ்வாறாயினும் இலாபமீட்டல் காரணமாகவும்

அதன்பின் நவம்பர் மாதம் 2003 இன் வரவு செலவுத் திட்டப் பிரேரணைகள் காரணமாகவும் இரு சுட்டிகளும் குறைவடைந்தன.

இவ்வபிவிருத்திகள் பிற சந்தைக் குறிகாட்டிகளிலும் கூட பிரதிபலிக்கப்பட்டதுடன் 2002 மார்ச் முதல் தேறிய கொள்வனவாளர்களாக இருந்த வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஆண்டின் கடைசி இரு மாதங்களில் தேறிய விற்பனையாளர்களாக மாறினர். ஆனால் 2002 இன் இறுதியளவில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டேண் 2001 இன் இறுதியில் இருந்த மட்டத்தை விட 194.1 புள்ளிகளால் (31 சதவீதம்) உயர்வடைந்து 815.1ஆக இருந்த அதேவேளை மிலங்கா விலைச்சுட்டெண் 2001 இறுதி மட்டத்தினை விட 343.6 புள்ளிகள் (33 சதவீதம்) உயர்வடைந்து 1,374.6 ஆக இருந்தது. மேலும் 2002 ஆம் ஆண்டு ஆகக்கூடிய புரள்வு மட்டங்கள் (ரூபா 30.5 பில்லியன்), நாளாந்த சராசரி புரள்வு (ரூ.128 மில்லியன்) தேறிய வெளிநாட்டு முதலீட்டு உள்வருகைகள் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது ஆண்டாக இருந்தது. அதியுயர் புரள்வான ரூ.34.5 பில்லியனும், நாளாந்த சராசரி புரள்வான ரூ.157 மில்லியனும் 1994இல் பதிவு செய்யப்பட்டதுடன் அதிகூடிய தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சலான ரூ.3.2 பில்லியன் 1993இல் பதிவு செய்யப்பட்டது. சராசரி நாளாந்த 126.5 மில்லியன் ரூபாயாக இருந்த அதேவேளை பங்கு மூலதனத்தின் மொத்தப் புரள்வு 30.2 பில்லியன் ரூபாவாக இருந்தது. தேறிய வெளிநாட்டு முதலீடுகள் 2.4 பில்லியன் ரூபாவாக இருந்ததுடன் (25 மில்லியன் ஐ.அ.டொலர்) ஆண்டினபோது வெளிநாட்டவர் களினால் செய்யப்பட்ட கொள்வனவும் விற்பனையும் முறையே 7.4 பில்லியன் ரூபா (ஐ.அ.டொலர் 78 மில்லியன்) 5 பில்லியன் ரூபாயாக (ஐ.அ.டொலர் 53 மில்லியன்) இருந்தது.

**அட்டவணை 10.29**
**2002இல் இரண்டாந்தரப் பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் வகைப்படியான பரம்பல்**

| முதலீடுகளின் வகை | கொடுக்கல் வாங்கல் களின் எண்ணிக்கை | பங்கு களின் எண்ணிக்கை ('000) | பெறுமதி (ரூ.மில்) |
|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்புறுதி | 109,377 | 425,380 | 12,304 |
| குடிபானங்கள் உணவு புகையிலை | 18,125 | 84,743 | 1,662 |
| இரசாயனமும் மருந்தாக்கலும | 4,720 | 6,870 | 331 |
| கட்டடவாக்கம் பொறியியல் | 4,847 | 15,507 | 347 |
| பன்முகப்படுத்தப்பட்டவை | 19,406 | 105,287 | 7,093 |
| காலணிகளும் புடவைகளும் | 5,570 | 14,849 | 173 |
| சுற்றுலாவிடுதிகளும் பயணங்களும் | 31,453 | 201,489 | 2,062 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | 2,493 | 2,684 | 63 |
| காணியும் சொத்தும் | 12,465 | 89,927 | 542 |
| தயாரிப்பு | 47,095 | 210,680 | 4,573 |
| ஊர்திகள் | 1,810 | 3,290 | 95 |
| ஒயில்பாம் | 219 | 195 | 75 |
| பெருந்தோட்டங்கள் | 17,929 | 41,565 | 585 |
| பணிகள் | 400 | 340 | 14 |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | 1,644 | 5,710 | 34 |
| வர்த்தகம் | 3,074 | 3,744 | 95 |
| வலுவும் சக்தியும் | 6 | - | - |
| நலக் கவனிப்பு | 2,360 | 7,680 | 130 |
| தகவல் தொழில்நுட்பம் | 133 | 105 | 1 |
| டெலிகொம் | - | - | - |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பங்கு விலைகளின் அதிகரிப்பிற்கு இணங்க சந்தை மூலதனவாக்கம் 2001 இறுதியில் 124 பில்லியன் ரூபாவிற்கு 31 சதவீதத்தினால் 2002 இறுதியில் 163 பில்லியன் ரூபாவிலிருந்து உயர்ந்தது. இதேவேளையில் சந்தை விலை, உழைப்பு விகிதம் 2001 இறுதியில் 7.5 ஆக இருந்து 2002 இன் இறுதியில் 12.1 ஆக உயர்வடைந்தது. அதேவேளை உண்ணாட்டு, வெளிநாட்டு தனிநபர்களால் மத்திய வைப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த பதிவு செய்யப்பட்ட பிணையக் கணக்குகளின் எண்ணிக்கை 2001 இறுதியில் முறையே 252, 742 மற்றும் 1,482 ஆக இருந்து 2002 இறுதியில் முறையே 260,260 மற்றும் 1,593 ஆக அதிகரித்தது. அதே காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்களினால் வைக்கப் பட்டிருந்தவற்றின் எண்ணிக்கை முறையே 2,769 மற்றும் 2,671 இலிருந்து 2,950 2,817 இற்கும் அதிகரித்தது.


வியாபாரச் சூழலின் படிப்படியான முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கம்பனிகளினது உழைப்பில் ஏற்பட்ட அபிவிருத்தியுடன் அநேகமான துறைகளின் சுட்டெண்கள் முன்னைய ஆண்டினைவிட குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஆகக்கூடிய அதிகரிப்பு பாதணி, மற்றும் புடவைகளில் (92 சதவீதம்) காணப்பட்ட அதேவேளை முதலீட்டு நம்பிக்கை நிதியம், விடுதிகள், பயணங்கள் போக்குவரத்து ஆகிய ஒவ்வொன்றும் 75 சதவீதத்தால் அதிகரித்தன. அதிஉயர் சந்தை மூலதனவாக்கத்தைக் கொண்ட (2002 இன் இறுதியில் மொத்த சந்தை மூலதனவாக்கத்தின் 71 சதவீதமான) நான்கு துறைகளான வங்கிகள், நிதி, காப்புறுதி என்பன 37 சதவீதத்தாலும், பன்முகப்படுத்தப்பட்ட உடைமைகள் 31 சதவீதத்தாலும், குடிபானங்கள், உணவு, புகையிலை 32 சதவீதத்தாலும், தயாரிப்பு 26 சதவீதத்தாலும் அதிகரித்தன. ஆண்டின் போது நான்கு துறைகளில் வீழ்ச்சி ஏற்பட்டது. அதாவது உடல்நல கவனிப்பு 1.9 சதவீதத்தாலும், மே மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்பம் 10 சதவீதத்தாலும் பாம் எண்ணெய், பெருந்தோட்டம் என்பன முறையே 10.5 சதவீதம், 15.5 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார மீட்சி எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைவாக இருந்தமையால் உலகெங்கிலும் தொழில்நுட்ப பங்குகளில் குறிப்பிடத்தக்க மீட்சி காணப்படவில்லை. பெருந்தோட்டங்களைப் பொறுத்த வரையில் இறப்பரின் விலைகள் மூன்று பெரும் உற்பத்தி நாடுகளான மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகியவற்றின் உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அதிகரித்தன. சில முக்கிய உற்பத்தி நாடுகள் விளைவில் வீழ்ச்சியைப் பதிவு செய்ததன் காரணமாக தேயிலையின் விலைகள் நம்பிக்கையூட்டுவதாக இருந்தது. எவ்வாறாயினும் 2002 ஆகத்து மாதம் தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பில் முடிவடைந்த தொழிற்சங்க நடவடிக்கை இத் துறையின் இலாபத்தில் குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## சந்தை நடவடிக்கைகளின் அபிவிருத்தி


ஆண்டின்போது 1987 இன் 36 ஆம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சட்டத்தை திருத்துவதற்கான சட்டவாக்கம்

**வரைபடம் 10.8**
**பங்கு விலைகள்**

வரைபடம் 10.8.1
முக்கிய பன்னாட்டுச் சந்தைகளுடனான ஒப்பீடு
(2001 திசெம்பர் = 100)




வரைபடம் 10.8.2
தெற்காசிய சந்தைகளுடனான ஒப்பீடு
(2001 திசெம்பர் = 100)




இறுதியாக்கப்பட்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் நிதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவுக்கு சட்டங்களும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளும், ஒழுங்கு விதிகளும் மீறப்படல் தொடர்பிலான அனைத்து விடயங்களையும் ஆய்வு செய்வதற்கு பரந்த அதிகாரத்தை வழங்குவதையும், உள்ளக வணிகம் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளையும் அவற்றிற்கான தண்டனைகளின் பரப்பெல்லைகளையும் விரிவுபடுத்தல் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தண்டிக்கும் நியாயாதிக்கத்தை விரிவுபடுத்துதலையும், பட்டியலிடல் விலைக்குறிப்பேடுகள் சம்பந்தப்பட்ட அதிகாரத்தினை விரிவுபடுத்தல், நிதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு அதிகாரம் தொடர்பான ஏற்பாடுகளை நீக்குதலையும், பட்டியலிடப்பட்ட சொத்துப் பட்டியலை பொறுத்தமட்டில் ஒப்புறுதியாளர்கள், பங்கு கொடுக்கல் வாங்கலில் ஏற்படும் இழப்புக்களுக்கெதிராக இழப்பீடு செய்வோர், கொடுகடன் முகவராண்மைகள், மத்திய வைப்பக முறைமை அத்துடன் முதலீட்டு முகாமையாளர்கள் புதிய இடையீட்டாளர்களை பதிவு செய்வதையும் உத்தேச திருத்தங்கள் நாடுகின்றன. அதேவேளை 2001 ஆம் ஆண்டிலிருந்து மூன்று வருடங்களுக்கு பரிவர்த்தனையின் பரஸ்பரமற்ற தன்மையை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்துக்கு பிணையங்கள் பரிமாற்ற ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஆண்டின்போது மலேசியாவின் பிணயங்கள் ஆணைக்குழு இந்தோனேசியாவின் மூலதனச் சந்தைமேற்பார்வை முகவராண்மை, அவுஸ்திரேலிய பிணையங்கள் முதலீட்டு ஆணைக்குழு அத்துடன் நியூசிலாந்தின் பிணைய ஆணைக்குழு ஆகியவற்றுடன் உதவி பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை பங்கு பரிவர்த்தனை ஆணைக்குழு செய்துள்ளது.

### பிராந்திய சந்தைகளும் பிரதான பன்னாட்டு பங்குச் சந்தைகளும்

2002 இல் தெற்காசிய பிரதேசத்தில் கராச்சி (112 சதவீதம்) பம்பாய் (3.5 சதவீதம்) சந்தைகளில் முன்னேற்றம் காணப்பட்டது. வளர்சிக்கான சிறந்த அறிகுறிகள் பொருளாதார சீர்திருத்தம், வட்டி வீதக் குறைப்பு, குறிப்பிடத்தக்க அளவு அதிகமான அளவில் சீர்திருத்தம் வட்டி வீதக் குறைப்பு வெளிநாடுகளில் வசிப்பவர்களிடமிருந்தான பெறுகைகள் காரணமாக பாகிஸ்தானின் வெளிநாட்டு நாணய ஒதுக்கில் மேம்பாடு ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் கராச்சி 2002 இல் உலகின் மிகச் சிறந்த சந்தையாக விளங்கியது.

முக்கிய சந்தைகளுள் எதிர்பார்க்கப்பட்டதைவிட நலிவான ஐக்கிய அரசின் பொருளாதார மீட்சி, இலாப எதிர்பார்ப்புக்களை பற்றிய நிச்சயமற்ற தன்மை, கணக்கு

**அட்டவணை 10.30**
பிராந்திய மற்றும் தேறிய பன்னாட்டு சந்தைகளின் பங்கு விலைக் குறிகாட்டிகள்

| | 2001 இறுதியில் | 2002 இறுதியில் |
|---|---|---|
| நியுயோர்க் (டிஜிஜஏ) | 10,022 | 8,342 |
| இலண்டன் (எப்ரிஎஸ்ஈ 100) | 5,217 | 3,940 |
| டோக்கியோ (நிக்கி 225) | 10,543 | 8,579 |
| பம்பாய் (பிஎஸ்ஈ உணர்) | 3,262 | 3,377 |
| கராச்சி (பிஎஸ்ஈ உணர்) | 1,273 | 2,701 |
| சியோல் (கொஸ்பி) | 694 | 628 |
| தைபேய் (விலை) | 5,551 | 4,452 |
| பேங்கொக் (எஸ்ஈரி) | 304 | 356 |
| கொங்கொங் (காங்செங்) | 11,397 | 9,321 |
| சிங்கப்பூர் | 1,624 | 1,341 |
| மணிலா | 1,168 | 1,018 |
| ஜகார்த்தா | 392 | 425 |
| கோலாலம்பூர் | 696 | 646 |
| சிட்னி | 3,360 | 2,976 |
| வெலிங்டன் | 2,053 | 1,945 |

மூலம்: வோல் ஸ்ரீற் ஜேர்னல்.

அவதூறு ஆகியவை ஆண்டின்போது பங்கு விலைகளின் கீழ் நோக்கிய அமுக்கத்துக்கான பிரதான காரணிகளாகும். 2002 இன் இறுதியில் நியூயோர்க் பங்குப் பரிவர்த்தனையின் டோவ்ஜோன்ஸ் இன்டஸ்டிரியல் சராசரி 17 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மேலும் ஆண்டிறுதியில் ஈரானுக்கு எதிரான யுத்தம் எழக்கூடும் என்ற பீதி உலக எண்ணெய் விலையை அதிகரித்ததுடன் கம்பனிகளின் இலாபத்தை உயர் எண்ணெய் விலைகள் குறைந்துவிடும் என்ற கரிசனையால் ஐரோப்பிய சந்தைகள் உட்பட பிரதான சருவதேச சந்தைகள் பாதிக்கப்பட்டன. யப்பானிய பொருளாதார மீட்சியின் பாதிப்பிற்குள்ளாகக் கூடிய தன்மை யப்பானிய சந்தையின் செயலாற்றுகையை மோசமாக பாதித்தது.

## கொடுகடன் தரமிடல்

வைப்புக்களை ஏற்கும் அனைத்து நிறுவனங்களும் 2004 சனவரியில் கொடுகடன் தரமிடலைப் பெற்று அதனை பிரசுரிக்க வேண்டுமென 2003 வரவு செலவுத் திட்டம் தெரிவித்தது. மேலும் 100 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய அரசினால் வழங்கப்படும படுகடன் கருவிகள் தவிர்ந்த அனைத்து படுகடன் கருவிகள் வழங்கலுக்கும் கொடுகடன் தரமிடல் பெறுவது கட்டாயமாக்கப்பட்டது. பிட்ச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட் தம்மால் நான்கு நிதித்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட தரங்களை ஆண்டின்போது வெளியிட்டது. இலங்கை வர்த்தக வங்கி லிமிட்டெட் எஸ்.எல் ஏஏ+ ஆக செத்தெம்பரிலும், இலங்கை வங்கி யூலையில் எஸ்.எல்.ஏஏ ஆகவும், ஹட்டன் நசனல் வங்கி எம்.எல்.ஏ ஆக ஏப்பிரலிலும், செங்கடகல பினான்ஸ் கம்பனி லிமிட்ரெட் எஸ்.எல்.பிபிபி யாக திசெம்பர் 2002 இலும் தரப்படுத்தப்பட்டன. அதேவேளை 2002 செத்தெம்பரில் ஜோன் கீல்ஸ் ஹொல்டிங்ஸ் லிமிட்டெட் எஸ்.எல்.ஏஏ+ ஆகவும் தரப்படுத்தப்பட்ட அதேவேளை 2002/2005 தொகுதிக்கடன்கள் தொடர்பாக சிங்கர் சிறீலங்கா லிமிட்டெட் வழங்கல் தரத்தைப் பெற்றது.